
# நாம் இந்து மதத்தைவிட்டு வெளியேற முடியுமா?



“உள்ளபடி ஒரு அளவிலே நான் திருப்தி யாக இருந்தது-நாம் அதிலே இல்லை; மற்ற வர்களுக்குச் சொல்லாம் என்று நினைத்தேன். பகுத்தறிவாளர்கள், நாத்திகர்கள், மதமற்ற வர்கள், இந்துக்கள் அல்ல என்று சொல்லிக் கொள்பவர்கள் இருக்கலாம்.

இந்த இழிவிலே சம்பந்தமில்லை என்று அப்படி நினைத்தேன் நான், ஆனால், சட்டம் - நண்பர் ஆனைமுத்து வந்து படித்துக் காண்பித்தார், இந்தியாவிலே இருக்கிற கிறிஸ்தவன் தவிர, முஸ்லிம் தவிர மற்றவன் எல்லாம் இந்து; அவன் யாராயிருந்தாலும்” என்று. (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி-3, பக்கம் 2043-4-ஆம் பத்தி). 23.7.1973 அன்று மாலை பெரம்பலூரில் பெரம்பலூர் வட்டப் பகுத்தறிவாளர் கழக இரண்டாவது மாநாட்டில் பெரியார் சொன்னார். அதில் தந்தை பெரியார் அவர்கள், “இந்து மதத்தைவிட்டு வெளி யேறுங்கள்” என்று அறிவிப்புச் செய்தார்.

தந்தை பெரியாரின் அறிவிப்பு தவறு என எனக்குப்பட்டது. அதுபற்றி, 20, 21.6.1973-இல் இரு நாள்களிலும் திருச்சியில் பெரியார் மாளி கையில் “இந்துக்கள் என்றால் யார்? இந்து மதத்தை விட்டு வெளி யேறுவது என்றால் எப்படி? நாம் பகுத்தறிவாளர் - நாத்திகர் என்றால் போதுமா? நாத்திகர் என்றால் ‘கடவுள் இல்லை’ என்று எங்கே எழுதியிருக் கிறது?” என்று நான் தந்தை பெரியாரிடம் நீண்ட கேள்வி எழுப்பினேன். அது பெரிய உறுத்தலாகத் தந்தை பெரியாருக்குத் தென்பட்டது. ஏன்?

அவர், “இந்தியா கவர்ன்மெண்ட் கெசட்டில் அப்படி நாத்திகர் என்று அறிவிப்புச் செய்துவிட்டால் நாம் நாத்திகர்தானே!” என்று எதிர்க்கேள்வி கேட்டார்.

பகுத்தறிவாளர் என்றால் மத நம்பிக்கை உள்ளவர்கள் என்றும் பொருள் இருக்கிறது. நாத்திகர் என்றால் திட்டவட்டமாக ‘கடவுள் நம்பிக்கை இல்லாதவர்’ என்று பொருள் இல்லை. அதற்கான சட்ட விளக்கங்களை நான் பல ஆதாரங்களிலிருந்து தந்தை பெரியாருக்குத் தொகுத்துக் கொடுத் தேன். அதனால், நான் சொன்ன செய்திகளை ஒத்துக்கொண்டார்.”

இந்துக்களாகப் பிறந்தவர்கள் சூத்திரனாகவோ, தீண்டப்படாதவனா கவோ, சத்திரியனாகவோ, வைசியனாகவோ, பார்ப்பானாகவோதான் சாக வேண்டும். இந்து மதத்தை விட்டு வெளியேறுவது என்றால் இந்து மதத்தை விட்டு வெளியேறி, இசுலாமியனாகவோ, கிறிஸ்தவனாகவோ மதம் மாறவேண்டும். அப்படி மாறினால் ஒழிய இந்து மதத்தை விட்டு வெளி யேறியதாகப் பொருளில்லை என்று நான் உறுதியாக எழுதிக் கொடுத்தேன்.

இன்னமும் அதை உறுதியாக நம்புகிறேன். இதுபற்றி, நம் தோழர்கள் எல்லோரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுகிறேன்.

**1-4-2020** **வே. ஆனைமுத்து**

சுவடி : 44
ஏடு : 10
ஆகசுட்டு 2020
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா.பச்சமலை**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**‘சிந்தனையாளன்’**
பெரியார்-நாகம்மை அறக்கட்டளை வளாகம்
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**86681 09047**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

அந்தோ!

# அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையின் தலைவரும் பெயர்பெற்ற இட ஒதுக்கீட்டுப் போராளியுமான

# தோழர் இராம் அவதேஷ் சிங் மறைந்தார்!

(RAM AWADHESH SINGH IS DEAD!)


19.08.1978 முதல் 20.07.2020 வரை அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவையின் தலைவராக விளங்கிய பாட்னாவைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான தோழர் இராம் அவதேஷ் சிங் 20.07.2020 மாலை 5.30 மணிக்கு பாட்னாவில் மருத்துவமனையில் மறைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**யார் இராம் அவதேஷ் சிங்?**

பீகார் மாநிலத்தில் ரோட்டாஸ் (Rotahs) மாவட்டத்துக்கும் போஜ்பூர் மாவட்டத்துக்கும் இடைப்பட்ட சோன் ஆற்றங்கரையில் உள்ள பிப்பரா (Pippara) என்னும் சிற்றூரில் பிறந்த இராம் அவதேஷ் சிங், எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பிப்பரா போஜ்பூர் மாவட்டத்தில் உள்ளது. இவர் மெட்ரிகுலேசன் வகுப்பில் படித்துத் தேறியதானது, இவருடைய யாதவ சமுதாய மக்களுக்கு ஓர் அரிய பெரிய காரியமாகத் தோன்றியது. இவர் கல்லூரி வாழ்க்கையின் போது டாக்டர் இராம் மனோகர் லோகியாவின் தலைமையில் தன்னை ஓர் சமதர்மக் காரராக (Socialist) உருவாக்கிக் கொண்டார்.

பெரியாரின் சிந்தனைகள் இவருக்கு 1967ஆம் ஆண்டு வாக்கில் எட்டின. பெரியாரின் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கைக்குத் தம்மை உட்படுத்திக் கொண்ட இவர் முதன்முதலாகத் தாம் இந்தியில் எழுதிய ஒரு நூலில் பெரியாரின் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கைகளைச் சுருக்கமாக எழுதியமைக்காக, சோசலிஸ்ட் கட்சி இவர் பேரில் நடவடிக்கை எடுத்தது. அந்த ஒரே காரணத்துக்காகவே அக்கட்சியினர் இவரை ‘‘நாயக்கர்’’ என்றே அழைத்தனர். பார்ப்பனரை வெறுத்து ஒதுக்கும் ஒரு சோசலிஸ்ட்டாக மாறிய இவர், வடநாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் காத்திட உறுதி பூண்டு 1968 முதல் முழுவதுமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

வே.ஆனைமுத்து, சீர்காழி மா.முத்துசாமி ஆகிய நாங்கள் இருவரும் மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு பெற வேண்டும் எனும் ஒற்றைக் குறிக்கோளுடன் அதற்கான வேலைத் திட்டத்துடன் 27.4.1978 இல் சேலம் நகரிலிருந்து புதுதில்லிக்குப் புறப்பட்டு



29.4.1978 காலை புதுதில்லி அடைந்தோம். எங்களுடைய கோரிக்கையை விளக்கும் தமிழ் 4 பக்க அறிக்கையை ஆங்கிலத்திலும், இந்தியிலும் மொழியாக்கம் செய்து தனித்தனியாக அச்சிட்டு, அவற்றின் 2000 படிகளை உடன் சுமந்து சென்றோம். எங்களுடன் சேர்ந்து பணியாற்ற சேலம் தாதம்பட்டி ம.இராசு முன்னதாகப் புறப்பட்டு புதுதில்லி சென்று சேர்ந்தார்.

புதுதில்லியில் நாங்கள் அமைச்சர்களையும், அரசியல் கட்சித் தலைவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நேரில் சந்தித்து கோரிக்கை விளக்க அறிக்கைகளைக் கொடுத்து ஆதரவு திரட்டினோம்.

அந்தப் பணியின் ஒரு நிகழ்வாக, 6.5.1978 மாலை 6 மணிக்கு, 18, இராசேந்திர பிரசாத் சாலை, புதுதில்லி முகவரியில், வே.ஆனைமுத்து, சேலம் தாதம்பட்டி ம.இராசு, சீர்காழி மா.முத்துசாமி ஆகிய மூவரும், பெரியார் சம உரிமைக் கழகம் சார்பில் சனதா கட்சியின் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் இராம் அவதேஷ் சிங் அவர்களைச் சந்தித்தோம். அவர் அப்போது ஏதோ ஒரு பஞ்சாயத்துப் பேசிக் கொண்டிருந்தார்; அரை மணி

நேரம் காத்திருந்தோம். பின்னர் அவரிடம், நாங்கள் பெரியார் தொண்டர்கள்; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டுக் கோரிக்கை தொடர்பாக உங்களுடன் பேச தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறோம் என்று சொன்னவுடன், தம்முடைய எல்லாக் குழந்தைகளையும் அழைத்து எங்கள் காலில் விழுந்து வணங்குமாறு செய்தார். அது அந்நாட்டுப் பழக்கம் என்றும் அவர் தெரிவித்தார். அவர் அரை மணிநேரம் எங்கள் கோரிக்கையைக் கேட்டுப் புரிந்து கொண்டவுடன், அடுத்த நாள் 7.5.1978இல் உத்தரப்பிரதேச மாநிலத்தில் மிசாபர் நகரில் நடைபெற உள்ள உத்தரப்பிரதேசப் பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில், "தமிழ்நாட்டைச் சேர்ந்த பெரியார் தொண்டர் வே.ஆனைமுத்து பேசுவார்" என்று அறிவிக்குமாறு, தொலைபேசியில் தில்லியிலிருந்து முசாபர் நகருக்குத் தெரிவித்தார். அது எங்களுக்கு வியப்பாக இருந்தது.

அவர் எங்களிடம், நாளை காலை 7 மணிக்கு இங்கு வந்து விடுங்கள்; இரயிலில் முசாபர் நகர் போகலாம் என்று உற்சாகமாகத் தெரிவித்தார். நானும் மா.முத்துசாமி ஆகிய இருவர் மட்டும் மறுநாள் காலை அவதேஷ் சிங் வீட்டுக்குச் சென்றோம். அங்கு எதிர்பாராமல் சிற்றுண்டி கோழிக்கறியுடன் உண்டோம். இன்னும் சிலர் எங்களுடன் வந்தனர். எல்லோரும் இரயிலில் மூன்றாம் வகுப்புப் பெட்டியில் வேண்டுமென்றே எல்லோரும் பயணம் செய்தோம். முசாபர் நகர் இரயில் நிலையத்திலிருந்து மாநாட்டு அரங்கத்துக்கு ஒரு மைல் தொலைவு, ஊர்வலமாக மேளதாளத்துடன் எங்களை உற்சாகம் பொங்க அழைத்துச் சென்றனர். அங்குப் பெரிய மாநாடு நடைபெற்றது.

இலக்னோவைச் சேர்ந்த சிவ் தயாள் சிங் சௌராசியா தலைமை ஏற்றார். நான் மாநாட்டைத் தொடக்கி வைத்து ஒன்றரை மணி நேரம் பேசினேன். அப்பேச்சு வடஇந்தியா முழுவதும் காட்டுத் தீ போல் பரவியது. பெரியாரை நன்கு அறிந்த, டாக்டர் செடிலால் சாத்தி, என் ஆங்கில உரையை இந்தியில் மொழிபெயர்த்தார். மாநாடு முடிந்தவுடன் நாங்கள் இருவரும் புதுதில்லி திரும்பினோம். ஆவலோடு சேலம் ம.இராசு தில்லியில் எங்கள் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் 8.5.1978இல் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு வாழப்பாடி கூ.இராமமூர்த்தி, வே.ஆனைமுத்து, ம.இராசு, சீர்காழி மா.முத்துசாமி ஆகிய நாங்கள் நால்வரும் குடிஅரசுத் தலைவர் நீலம் சஞ்சீவரெட்டி அவர்களை நேரில் பார்த்து எங்களுடைய கோரிக்கை விண்ணப்பத்தையும், பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் நூலின் 3 தொகுப்புகளையும் கொடுத்தோம். அவர் பொறுப்பில்லாமல் பேசினார்.

தமிழகக் குழுவினரான நாங்கள் மூவர் மட்டும் அப்போது மய்ய அரசின் உள்துறை இணை அமைச்சராக இருந்த தனிக்லால் மண்டல் அவர்களைப் பார்க்க 12.5.1978 மாலை அவருடைய இல்லம் சென்றோம். அவர் வெளியில் சென்றிருந்தார். அவர் வருகைக்காகக் காத்திருந்தோம். அவர் நாங்கள் காத்திருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், "வீட்டிலிருங்கள்; உடனே போய்விடாதீர்கள், விரைவில் வந்துவிடுகிறேன்" என்று தொலைபேசியில் எங்களிடம் கூறினார். சொன்னவாறே அவர் விரைவில் வந்துவிட்டார்; எங்களுடன் மனம் திறந்து பேசினார். "சென்னையில் இடஒதுக்கீடு மாநாடு நடத்தப் போகிறோம். அதில் பங்கேற்க வாருங்கள்" என்று நான் அவரை அழைத்தேன். அவரும் ஒப்புக் கொண்டார்.

அந்த மாநாடு சென்னையில் 24.6.1978இல் நடைபெற்றது. இணை அமைச்சர் தனிக்லால் மண்டலும், இராம் அவதேஷ் சிங் மற்றும் பல தலைவர்களும் அம்மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

மாநாடு முடிந்த பிறகு அடுத்த மாதம் நானும் இராம் அவதேஷ் சிங்கும் கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று இடஒதுக்கீட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டினோம். பின்னர் நாங்கள் இருவரும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை வென்றெடுப்பதற்காக, அரசியல் கட்சிச் சார்பற்ற-அனைத்திந்திய அமைப்பினை உருவாக்க விரும்பினோம். இதன் தொடர்பாக நாங்கள் இருவரும் சென்னை எழும்பூரில் 19.8.1978இல் "பீப்பிள்ஸ் லாட்ஜில்" சந்தித்துப் பேசினோம்; ஆதரவாளர்களின் கருத்துக்களையும் கேட்டோம். அன்றே வே.ஆனைமுத்து புரவலர்- தலைவராகவும், இராம் அவதேஷ்சிங் தலைவராகவும், பெங்களூர் பேராசிரியர் ஏ.எம்.தர்மலிங்கம் துணைத் தலைவராகவும் பிற பொறுப்புகளுக்கு மற்றவர்களையும் கொண்ட "**அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவை**" என்னும் அமைப்பினைத் தொடங்கினோம். பேரவையின் முதல் பணியாக பெரியார் நூற்றாண்டு விழாவை பீகார் மாநிலம் முழுதும் கொண்டாடி இடஒதுக்கீட்டுப் பரப்புரை செய்திட, இராம் அவதேஷ் சிங் விரும்பினார். அதற்காக வே.ஆனைமுத்து தலைமையில் ஒரு குழுவாக பெரியார் தொண்டர்கள் பீகாருக்கு வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். அதன்படி வே.ஆனைமுத்து, மா.முத்துசாமி, திருச்சி து.மா.பெரியசாமி, வேலூர் நா.ப.செந்தமிழ்க்கோ ஆகிய நால்வர் குழு, 17.9.1978 முதல் 18.10.1978 முடிய 32 நாள் பீகார் மாநிலம் முழுவதும் விகிதாசார வகுப்புரிமைக் கோரிக்கைக்காகத் தொடர் பரப்புரை செய்தது.

விழிப்பும் எழுச்சியும் பெற்ற பீகார் மக்கள் அதைத் தொடர்ந்து 19.10.1978 முதல் 31.10.1978 முடிய தொடர்ந்து கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியின்போது 1978 அக்டோபர் 25, 26 நாள்களில் பீகாருக்கு வந்த பிரதமர்

மொரார்ஜி தேசாயை மக்கள் கூட்டத்தில் பேசவிடாமல் செய்தனர். தில்லி சென்ற பிரதமர் மக்களின் கோபத்தை உணர்ந்து, இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்படும் என்று 20.12.1978இல் அறிவித்து 1.1.1979இல் அதை அமைத்தார். அதுதான் மண்டல் குழு.

பீகார் கிளர்ச்சியின்போது 10 ஆயிரம் பேர் சிறைப்பட்டனர்.

அப்போது பீகார் சட்டமன்றத்துக்கு சமஸ்திபூர் தொகுதிக்கு இடைத் தேர்தல் வந்தது. அதில் ஆளுங்கட்சி வெற்றி பெற்றாக வேண்டும். எனவே முதலமைச்சர் கர்ப்பூரி தாகூர், 10.11.1979இல் மாநில அரசின் வேலை களில் பிற்படுத்தப்பட்டோருக்கு முதன்முறையாக 20 விழுக்காடு அளித்து ஆணை பிறப்பித்தார்.

புதுதில்லியில் 23.3.1979இல் வே.ஆனைமுத்து, இராம் அவதேஷ்சிங் இருவரின் ஏற்பாட்டில், பெரியார் நூற்றாண்டு விழா, ராம் மனோகர் லோகியா 80ஆம் பிறந்தநாள் விழா, ஒடுக்கப்பட்டோர் உரிமைப் பேரணி, போட் கிளப் திடலில் பொதுக்கூட்டம், பெரியாரின் கட்டுரைகளும் பேச்சும் அடங்கிய இந்தி மொழி பெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா ஆகியவை நடைபெற்றன. கர்நாடக அமைச்சர் எல்.ஜி.அவானூர், துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன்ராம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மய்ய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜ் நாராயண் விழாவில் இந்தி நூலை வெளியிட்டுச் சிறப்பித்தார்.

வே.ஆனைமுத்து, இராம்அவதேஷ் சிங் ஆகிய நாங்கள் இருவரும் தோழர்களுடன், 26.3.1979 முற்பகல் 11.30மணிக்கு இராசஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரில் பிற்படுத்தப்பட்டோருக்கு மாநில அரசின் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு கோரி பேரணி நடத்தினோம்; தொடர்ந்து சட்டமன்றத்தின் முன் ஆர்ப் பாட்டம் செய்தோம். எங்களை அழைத்துப் பேசிய அமைச்சர்கள் கோரிக்கையைக் கவனிப்பதாக உறுதி அளித்தனர். இரவு நாங்கள் இருவரும் ஜெய்ப்பூர் ஸ்வர்ணகார் சங்கத்தில் இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை விளக்கிப் பேசினோம்.

நானும் இராம் அவதேஷ் சிங்கும், பிரதமர் சரண்சிங் அவர்களை தில்லியில் 25.9.1979இல் சந்தித்து எங்களது கோரிக்கை மனுவை அளித்தோம். மனுவைப் பெற்றுக் கொண்டு படித்த பின்னர் பிரதமர் எழுப்பிய அய்யங் களுக்கு நான் உரிய விளக்கங்கள் அளித்தேன். ‘‘நான் பரிசீலனை செய்வேன்’’ என்று பிரதமர் கூறினார்.

தொடர்ந்து, பிரதமர் சரண்சிங் வீட்டின் முன் 15.11.1979 முதல் 29.11.1979 வரை புதுதில்லியில் இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி நானும் இராம் அவதேஷ் சிங்கும் தோழர்களுடன் கிளர்ச்சி செய்தோம். 589 பேர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப் பட்டனர். 810 பேர் கைது செய்யப்பட்டு விசாரித்து சிறைப் படுத்தப்பட்டு தண்டித்துப் பின்னர் விடுதலை செய்யப் பட்டனர். இவர்களில் க.தென்னன், ஆ.செ.தங்கவேலு, க.பாலசுப்பிரமணியம் தமிழ்நாட்டைச் சேர்ந்தோர் ஆவர்.

இராம் அவதேஷ் சிங் அழைப்பை ஏற்று, நான் 1981 அக்டோபரில் பீகார் மாநிலம் சென்று மண்டல் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரி பரப்புரைக் கூட்டங்களில் பேசினேன். இது பீகார் மாநிலத்தில் நான் மேற்கொண்ட இரண்டாவது பயணமாகும்.

மீண்டும் இராம் அவதேஷ் சிங்கின் அழைப்பை ஏற்று நான் 1987 மார்ச்சு முழுவதும் பீகாரில் தங்கி, மண்டல் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றக் கோரி, பரப்புரைக் கூட்டங்களில் பேசினேன். இது பீகார் மாநிலத் தில் நான் மேற்கொண்ட மூன்றாவது பயணமாகும்.

1986 முதல் 1992 வரை நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தோழர் இராம் அவதேஷ்சிங்பதவி வகித்தார். நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் உறுப்பினர்கள் கூட்டுக் கூட்டத்தில், 12.3.1990இல் குடிஅரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் உரை நிகழ்த்தி னார். அவருடைய அந்த உரையில், மண்டல் குழுவின் பரிந்துரையான பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு நடைமுறைப் படுத்தப்படுவது பற்றிய அறிவிப்பு எதுவும் இல்லாததைக் கண்ட மாநிலங்களவை உறுப்பினர், இராம் அவதேஷ் சிங் உடனே இடைமறித்து குடிஅரசுத் தலைவரின் உரையை நிறுத்துமாறு எதிர்ப்புத் தெரிவித்துத் தடுத்து விட்டார். இந்நிகழ்வு நேரலையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியது; வானொலியிலும் செய்தித் தாள்களிலும் பரப்பப்பட்டது. இந்நிகழ்வே பிரதமர் வி.பி.சிங் அவர்களின் கவனத்தை இடஒதுக்கீட்டின்பால் ஈர்த்தது; அடுத்த 5ஆவது மாதத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக் கீட்டு அரசாணையை வெளியிடுமாறு செய்தது. பிரதமர் வி.பி.சிங் 13.8.1990இல் மய்ய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளித்து ஆணை பிறப்பித்தார். அதை எதிர்த்து பாரதிய சனதாக் கட்சியின் சார்பில் அத்வானி ராமரதப் பயணம் நடத்தி, பிரதமர் வி.பி.சிங்கின் அரசுக்கு எதிராக மக்கள் கவனத்தைத் திசை திருப்பினார். ராமரதப் பயணத்தின் சூது பற்றி மக்களுக் குப் புரிய வைக்கவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் கவனத்தை இடஒதுக்கீட்டுக்கான அரசாணையின்பால் ஈர்க்கவும் வே.ஆனைமுத்து, இராம் அவதேஷ் சிங், ம.ராசு ஆகிய மூவர் தலைமையில் தில்லியிலிருந்து 12.10.1990இல் புறப்பட்டு அரியானா நோக்கி **ராசரதப் பயணம்** புறப்பட்டது. இந்த இராச ரதம் 29.10.1990 மாலை சாம்பூ நகர எல்லையை ஒட்டிய மசூதியை அடைந்தபோது, இராம் அவதேஷ் சிங் தோழர்களுடன் கைது செய்யப்பட்டார்; சிறீகார் மாவட்டச் சிறையில்

அடைக்கப்பட்டார். அதற்கும் சில நாள் முன்னதாக நானும் ம.இராசுவும் தில்லிக்குத் திரும்பினோம்.

நான் இராசரதப் பயணத்தில் முழுதாகக் கலந்து கொள்ள முடியவில்லை. இடையில் 18.10.1990இல் நான் அவர்களிடமிருந்து விடைபெற்றுத் தமிழகம் வந்து விட்டேன்.

சிறீகார் மாவட்டச் சிறையிலிருந்து 1.11.1990 ஆம் நாள் இராம் அவதேஷ் சிங் எனக்கு ஓர் உருக்கமான நீண்ட மடலை எழுதினார். அதில் அவர் எடுத்துக் காட்டிய இந்தியாவின் சமுதாய, அரசியல் நிலைமை இன்றைக் கும் மாறாமல், மாற்றப்படாமல் அப்படியே தொடர்ந்து கொண்டிருக்கிறது. அவருடைய மடலின் அந்த வரிகளை அப்படியே தமிழில் தருகிறேன்; படியுங்கள்:

‘‘கண்மூடித்தனமான மதத்தின் பெயரால் இதற்கு முன் இந்த நாடு கண்டிராத அளவில் காட்டுமிராண்டித் தனத்தை உருவாக்கிடப் பார்ப்பன, பனியா கும்பல் முயல்வதாகவே நான் கருதுகிறேன். வடஇந்தியாவில் பார்ப்பனியம் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. பல்வேறு முரண்பட்ட நிலைகளில் இருப்பவர்களிட மிருந்து பார்ப்பனிய நஞ்சு கக்கப்படுகிறது. இவர்களுக்கு இடையே தொடர்பு இருப்பது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் உள்ளார்ந்த புரிதலுடனும் நெருங்கிய ஒற்றுமையுடனும் பார்ப்பனர்கள் செயல்பட்டுக் கொண்டி ருக்கிறார்கள். அரசியல், சமூகம், மதம் ஆகிய எல்லாத் துறைகளிலும் உள்ள எல்லாத் தலைவர்களும் ஒரே தன்மையில் சிந்தித்து ஒற்றுமையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆட்சியில் சிறிய பதவி கிடைக்க வேண்டும் என்ற அற்பத்தனமான பேராசை யால் பிற்படுத்தப்பட்டவர், பட்டியல் வகுப்பினர், பழங் குடியினர், மதச்சிறுபான்மையினர் ஆகியோரின் தலை வர்கள் தமக்குள் முரண்பட்டுப் பிளவுண்டு கிடக்கின்றனர்; இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் இந்தத் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயல்பட்டிருப்பின் எதிர்ச் சக்தியாக எழுந்துள்ள இராம ரதத்தை முறியடித்திருப்பார்கள்; நம் இராச ரதத்தை ஆதரித்து இருப்பார்கள்.

**இராம் அவதேஷ் சிங், 1.11.1990இல் சிறையிலிருந்து எனக்கு எழுதிய மடலில் சுட்டிக் காட்டியிருக்கின்ற இந்திய அளவிலான சமுதாய, அரசியல் நிலைமைகளே 2020ஆம் ஆண்டிலும் நிலவுகின்றன என்கின்ற உண்மை நிலையைக் கருத்தில் கொண்டு நாம் செயல்பட்டு பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு வகுப்புவாரி விகிதாசாரப் பங்கு பெறப் பாடுபடுவதன் மூலம் சமுதாயத்தின் எல்லா வகுப்பு மக்களுக்கும் விகிதாசாரப் பங்கு பெற வழி காண்போம் வாருங்கள்!**

**22.7.2020** **வே.ஆனைமுத்து**
புரவலர்-தலைவர்

## செந்தழலின் தமிழேந்தி!

தெருவெல்லாம் ஊரடங்கின் அமைதி நோன்பு
தீ நச்சு நுண்மியாலே உயிர் போம் என்றே
உருவெல்லாம் வெளியிடாது வீட்டினுள்ளே
ஒடுங்கியுள்ளோம் அச்சத்தின் உச்சத்தாலே!
பெருவெள்ளம் போல்தொற்றுப் புவியில் பாய்ந்து
பிணக்குவியல் கணக்கடுக்கி நடுக்கும்; மாறாய்
ஒருவெள்ளப் பாப்பெருக்கு (தமிழேந்தி) உயிரிழுக்க
ஓராண்டாய் எம் நடுக்கம் சாகவில்லை.

பார்ப்பனியப் புதர்களின்று தோப்பாய் ஆடும்.
பேரிடியாய்க் கருவறுக்க நீயின்றில்லை.
ஆர்ப்பரிக்கும் வடமொழிகள் திமிரால் துள்ளும்.
அவைபொசுக்க யாப்புத்தீ நீதான் இல்லை.
ஊர்ப்புறத்தில் கோவில்கள் அடைத்த காட்சி
உயர்பெரியார் பகுத்தறிவின் வெற்றி காண
வேர்ப் பலாவின் பா படைத்த நீயின்றில்லை.
வேகுதடா நீ இல்லை எனும் நினைப்பே!

இடிமின்னல் மழைவெள்ளம் சூறைக்காற்று
எவ்விடரும் எம்நெஞ்சை இடறவில்லை.
‘விடிவெள்ளி’ நீ மறைந்தாய் என நினைக்க
வெறுமைகளின் மிடைஇருட்டில் மனம்வெதும்பும்
மடிகொஞ்சும் மழலை நீ செந்தழலாய் ஓங்கி
மாநிலத்தைப் பாத்திறத்தால் ஆட்சி செய்து
கொடிவிஞ்சிப் பறக்கையிலே உயிர்வேர் காய்ந்தாய்
கொடும் வடுவை எம்நெஞ்சில் அடிவேர் நட்டாய்.

சிந்தனையாளன் இறுதிப்பக்கம் உன்றன்
சித்திரக்கைவண்ணம் காணாக் கண்ணீர்த்தாள்!
முன்தானைப் பகுத்தறிவுப் படையின் முன்னோன்
முத்திரையைக் களவிட்டான் காலக் கள்வன்
செந்தழலின் தமிழேந்திப் புலவன் சீற்றம்
செந்தமிழர் நெஞ்சிலென்றும் புரட்சி தீட்டும்
வண்டமிழின் இன்னிளமைக் கூடல்நீயே
வெஞ்சாவின் கடல்வாயில் மூழ்கினாயே!

கடல்வீச்சின் அலை ஊஞ்சல் அழகில் ஆர்த்தாய்
கலைவீச்சின் எழுத்தலையால் புயலைச் சேர்த்தாய்
கெடல்வீச்சின் பாழ்ங்கொடுமைக் குமுகங்கண்டு
கணைவீச்சின் பாவிடுத்துப் போர்த்தொடுத்தாய்
மடமைவீச்சின் சலசலப்பை நார் உரித்தாய்
மழைவீச்சின் புதுவெள்ளச் செருக்கு நீயே!
உடல்வீச்சின் உயிர்மூச்சின் இறுதி கொண்டாய்
உயர்மூச்சின் புகழ்வீச்சில் காலம் வாழ்வாய்!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**
07.07.2020

# இடஒதுக்கீட்டுக்குள் வராத (மேல்) சாதியினருள் நலிந்தவருக்கு இந்திய ஒன்றிய அளவில் 10 விழுக்காடு தனி இடஒதுக்கீடு - தமிழக நிலை

இரா. பச்சமலை

விகிதாசார வகுப்புவாரி இடஒதுக்கீடு கொள்கை குறித்து தோழர் வே.ஆனைமுத்து நெடுங்காலமாக எண்ணற்ற பலப்பல கட்டுரைகளை ஆழமாகவும், விரிவாகவும் ஆய்வு நோக்கில் எழுதி வந்துள்ளதை நாம் அனைவரும் உள்வாங்கியுள்ளோம் என்பதின் அடிப்படையில் இக்கட்டுரைக்கான முன்னுரைப் பகுதியை விட்டுவிடலாம் எனக் கருதுகிறேன். எனவே கட்டுரையின் பொருளுக்குள் நேரிடையாகச் சென்றுவிடலாம். அங்கங்கு தேவைக்கேற்ப விரிவாகப் பேசலாம்.

மேல்சாதியினருள் நலிந்தோருக்குச் சான்றிதழ் (EWS என அறியப்படும்) வழங்கப்படும்போது அந்தச் சான்றிதழில் இது ஒன்றிய அரசுப் பணிகள், கல்விச் சேர்க்கைக்கு என்றும் இது தமிழ்நாட்டுக்குப் பொருந்தாது என்ற குறிப்புடன் தரப்படுகிறது என்றும் அது சான்றிதழ் பெறுவோருக்கு சிக்கல் அளிப்பதாக அமைந்து விடுகின்றது எனச் சொல்லி அக்குறிப்புகள் கூடாது எனச் சென்னை உயர் வழக்கு மன்றத்தில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களின் முன்முயற்சியால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கின் உள்நோக்கம் தமிழ்நாட்டு அரசுப் பணிகளிலும் கல்விச் சேர்க்கையிலும் பா.ச.க. ஒன்றிய அரசினால் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டு (EWS) மேல்சாதி ஏழைகளுக்கும் 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்ற மறைமுகமான கோரிக்கையை உள்ளடக்கியதாக உள்ளது. இந்த வழக்கில் பதில் அளித்துள்ள தமிழக அரசு இந்தச் சட்டம் தற்போது ஒன்றிய அரசு தொடர்பானது மட்டும்தான் என்பதால் அக்குறிப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அது, எவ்வகையிலும் அச்சான்றிதழ் பெறுவோருக்கு இடையூறாக அமையாது என்று சொல்லியுள்ளது. மேலும் தமிழகத்தில் இந்த அரசமைப்புச் சட்டத் திருத்தம் தமிழகத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை என்பதால் அக்குறிப்புரை கட்டாயம் இடம்பெற வேண்டுமென்றும் தமிழக அரசு வலியுறுத்திச் சொல்லியுள்ளது. இதுவுமின்றி இந்தச் சட்டம் செல்லத்தக்கதல்ல என உச்சவழக்கு மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு நிலுவையிலுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்போது நாம் தமிழ்நாட்டு இடஒதுக்கீட்டுக் கொள்கையின் நீண்ட நெடுங்கால 100 ஆண்டுகால வரலாற்றுப் பின்னணியின் வெளிச்சத்தில் உயர் வழக்கு மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள மேற்சொன்ன வழக்கை விவாதிக்க வேண்டும். நாடு ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை பெறும் முன்னர் 1920-இல் தமிழகம், கேரளம், கன்னடம், ஆந்திரம், ஒடிசாவின் ஒரு பகுதி யாவையும் இணைத்த சென்னை மாகாணத்தில் (Madras Presidency) முதன்முதலில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டு நீதிக்கட்சித் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது. அப்போது அரசுப் பணிகள், கல்வி பார்ப்பனர்கள் உள்ளிட்ட மேல்சாதிக்காரர்களின் முற்றுரிமைக்கானது என்ற தன்மையில் இருந்தன. மேலும் பெரும்பாலான மக்களாக இருந்த ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்தவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருந்த இரங்கத்தக்க நிலையைக் கணக்கிற்கொண்டு பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதார், இசுலாமியர், கிறித்துவர், பட்டியல் குலத்தினர் என அனைவரும் பங்குபெறும் வகையில் பணிகள், கல்வியில் 100 இடங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டு இந்திய ஒன்றிய வரலாற்றிலேயே முதன்முதலாக ஒரு மாகாண அரசு இடஒதுக்கீட்டுக்கென ஆணை பிறப்பித்தது. இருப்பினும் இதற்கு முன்பு ஆங்கிலேயக் குடியேற்ற அரசின் நேரடி ஆட்சிக்குள் வராது மறைமுக ஆட்சியின் கீழிருந்த மைசூர் மன்னர், மராட்டியப் பகுதி சத்ரபதி சாகு மகாராசா ஆகியோரின் ஆட்சியின் கீழிருந்த பகுதிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கென தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டு நடைமுறையில் இருந்து வந்தது. சென்னை மாகாண இடப்பங்கீடு ஆணை பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் நடைமுறைக்கு வராமல் 1927-இல்தான் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

அக்காலம் தொட்டு நாடு விடுதலையடைந்து அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் சென்னை உயர்வழக்கு மன்றமும், உச்ச வழக்கு மன்றமும் வகுப்புரிமைப் பங்கீட்டுக்குத் தடை விதிக்க முற்பட்டன. ஆனால் பெரியாரின் அதற்கான எதிர்ப்புப் போராட்டத்தால் அரசமைப்புச் சட்டம் முதல் திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுத் தமிழகத்தில் இடஒதுக்கீடு இடையறாது தொடர்ந்து நிலைத்து கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. இந்த இடஒதுக்கீட்டால் தகுதி திறமை குறைய நேரிடுமென்ற பார்ப்பனியத்தின் வெற்றுக் கூச்சலும் வாதமும் முறியடிக்கப்பட்டு, அவர்கள் கூச்சல் பொய்யானது; வஞ்சகமானது என்றும் நிறுவப்பட்டது தமிழ்நாட்டில். இந்திய ஒன்றியத்தின் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் கல்வி, பொருளாதாரம், மக்கள் நலம், மருத்துவம் போன்ற பல துறைகளில் பெரும் மேம்பாடடைந்து தமிழ்நாடு முதல்நிலையில் இருந்து வருகின்றது. குறிப்பாக உயர் கல்வியில் ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களையும்

விஞ்சும் வகையில் ஒன்றிய அரசின் 2020 தேசியக் கல்விக் கொள்கையின்படி 2030-க்கான இலக்காகச் சொல்லப்பட்டுள்ள 50 விழுக்காட்டை தமிழ்நாடு ஏற்கெனவே 49.8 விழுக்காடு அளவுக்கு எட்டியுள்ளது. இன்னும் சிறப்பாகத் தமிழக மருத்துவம் வளர்ந்து வளர்ந்த அய்ரோப்பிய நாடுகளுக்கொப்ப உள்ளது; ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநில மக்களின் மருத்துவ மய்யமாக உருவாகிக் கொண்டிருக்கின்றது. இவையெல்லாம் இடப்பங்கீட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதின் நற்பயனாய் தமிழ்நாடு அரசமைப்புச் சட்ட முகவுரையில் சொல்லப்பட்டுள்ள சமூக நீதியைக் காப்பாற்றிப் பாதுகாத்து வருகின்றது.

நாடு விடுதலையடைவதற்குமுன் நீதிக்கட்சி ஆட்சிக் காலம் தொட்டு கல்விப் பணிகளில் நூற்றுக்கு நூறு இடங்களும் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட, ஒடுக்குமுறைக்கு உள்ளாகாத வகுப்புகள் அனைத்துக்கும் அவரவர் மக்கள் தொகைக்கு ஏற்ப சற்றேறக்குறைய விகிதாச்சார அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது. இது மாகாண அரசுத் துறைகளிலும் சென்னை மாகாணத்தில் இயங்கி வந்த ஆங்கிலேய மய்ய அரசுத் துறைகளிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. பெரியார் சொன்னது போல் நாட்டின் விடுதலை ஒடுக்கப்பட்ட வெகுமக்களுக்கான கறுப்பு நாள் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சென்னை மாகாணத்துக்குள் செயல்பட்ட ஒன்றிய அரசுத் துறைகளில் இடப்பங்கீட்டுக் கொள்கை திடுமெனக் கைவிடப்பட்டது. அத்துடன் மாநில அரசுத் துறைகளில் **வகுப்புவாரிப் பங்கீட்டுக்** கொள்கையும் கைவிடப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மிகக் குறைந்த அளவில் **இடஒதுக்கீடு** வழங்குவது என்றாகிவிட்டது.

இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரை 1980 வரையிலும் உச்ச வழக்கு மன்றம் ஏதோ வழக்கொன்றில் இடஒதுக்கீடு அளவு 50 விழுக்காட்டுக்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று கருத்துரைத்ததின் அடிப்படையில் தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு அளவு 50 விழுக்காட்டுக்குள்தான் இருந்து வந்தது. முதன்முதலாக கருநாடக மாநிலத்தில் இடஒதுக்கீட்டு வரம்பு அளவு 50 விழுக்காட்டுக்கும் அதிகமாக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டின் 1980-லிருந்து பிற்படுத்தப்பட்டோர், ஆதித் திராவிடர்களுக்கான இடஒதுக்கீடு முறையே 50 விழுக்காடு, 18 விழுக்காடு என மொத்தம் 68 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. இது 1989-லிருந்து பழங்குடியினருக்கெனத் தனியே ஒரு விழுக்காடு அளித்து மொத்த இடஒதுக்கீட்டு அளவு 69 விழுக்காடானது.

மண்டல் வழக்குத் தீர்ப்பில் உச்ச வழக்கு மன்றம் இடஒதுக்கீட்டு அளவு 50 விழுக்காட்டு வரம்புக்குள்தான் இருக்க வேண்டுமென கட்டளை ஆணையாகப் பிறப்பித்தது. இந்தத் தீர்ப்பு தமிழ்நாட்டுக்குப் பொருந்தாது என அவர்கள் சொன்ன விதிவிலக்கான கீழேயுள்ள இரண்டையும் (1. நெடுங்காலமாக இடஒதுக்கீட்டு அளவு 50 விழுக்காடு வரம்பு இன்றி அதிக அளவில் இருந்து வந்தது. 2. நாட்டில் வெகுதொலைவில் (Farflung areas) உள்ள மாநிலங்கள் (நாகாலந்து, மிசோரம் போன்ற வடகிழக்கு மாநிலங்களில்)) அடியொற்றி அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து அதன் ஒன்பதாம் அட்டவணையின்கீழ் சேர்க்கப்பட்டு வழக்கு மன்றங்களின் வரம்புக்குள் வராத ஒன்றாகத் தமிழ்நாட்டின் 69 விழுக்காட்டு இடஒதுக்கீட்டுக் கொள்கை பாதுகாக்கப்பட்டது. இருப்பினும் உச்ச வழக்கு மன்றம் தனக்கு அதிகாரம் உள்ளது எனக் கூறி 69 விழுக்காட்டு இடஒதுக்கீட்டுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு ஒன்றை எடுத்துக் கொண்டு அதன் விசாரணையை நிலுவையில் வைத்துள்ளது.

சென்ற நிதியாண்டு 2018-19-இன் நான்காம் காலாண்டின் தொடக்கமான 2019 சனவரித் திங்களில் 2019-இல் நடைபெறவிருந்த இந்திய ஒன்றிய மக்களவைப் பொதுத் தேர்தலில் தன் செல்வாக்கை அதிகப்படுத்திக் கொள்ளும் வகையில் பார்ப்பன பாரதியச் சனதாக் கட்சி வஞ்சகமாக, சூழ்ச்சி வலைக்குள் மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சி உள்ளிட்ட காங்கிரசு, பகுஜன் சமாஜ் கட்சி என பல கட்சிகளை சிக்க வைத்து இடஒதுக்கீட்டுக்குப் பயன் அடையாப் பார்ப்பனச் சாதி உள்ளிட்ட பல மேல்சாதிகளில் உள்ள நலிந்த பிரிவினருக்கெனத் தனியே 10 விழுக்காடு இடஒதுக்கீட்டை அளித்திடும் வகையில் அரசமைப்புச் சட்டத்திற்கு 103ஆம் சட்டத் திருத்தத்தை 2019 சனவரியில் கொண்டு வந்து வெறும் ஐந்து நாள்களுக்குள் அந்தச் சட்ட முன்வரைவை மக்களவையில், மாநிலங்களவையில் நிறைவேற்றி அமைச்சரவை இசைவு அளித்து குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று அவசர அவசரமாகச் சட்டமாக்கி ஒன்றிய அரசின் அனைத்துத் துறைகளிலும் பணிகள் கல்வியில் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டது. இது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. அதன்படி செல்லத்தக்கதல்ல என முன்பே பல கட்டுரைகளில் விவாதித்துள்ளோம். கட்டுரையின் பின்பகுதியில் மேலும் விவாதிப்போம்.

அரசமைப்புச் சட்டத்தில் இதற்கான திருத்தம் சேர்க்கப்பட்டுவிட்ட நிலையில் இது இந்திய ஒன்றிய அரசுக்கும், ஒன்றிய நாடுகளான அனைத்து மாநில அரசுகளுக்கும் கட்டாயம் பொருந்தும் என்பதில் அய்யமில்லை என்றே கொள்ளலாம். ஆனால் ஒன்றிய பார்ப்பன பா.ச.க. அள்ளித்தெளித்த அவசர கோலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது போன்று கட்டாயம் எல்லா மாநிலங்களையும் எதிர்பார்ப்பது நல்லறிவின் பாற்பட்டதல்ல என்பதை அனைவரும் உணர்வர். அந்த வகையில் சமூகநீதிக்கு நூற்றாண்டு வரலாறு கொண்ட தமிழகம் தன் நாட்டுக்கு ஏற்கத்தக்க வகையில்தான் பொரளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கான (EWS) 10 விழுக்காடு சட்டத்தைக் கடைப்பிடிக்க முடியும்.

ஒன்றியம் முழுமைக்கும் 10 விழுக்காடு அளிப்பது என்பது எதன் அடிப்படையில், எந்த ஆய்வின் அடிப் படையில் என்பது இதுவரை விளக்கப்படவில்லை. உண்மையில் மேல்சாதி மக்களின் மக்கள் தொகை என்ன? அதில் இவர்கள் வரையறுத்துள்ள ஆண்டு வருமான வரம்பு ரூ.8 இலக்கம் உடையவர்களில் தற்போது

* எத்தனை விழுக்காட்டினர் ஒன்றிய அரசுப் பணிகள், கல்வியில் இடம்பெற்றுள்ளனர்?
* அவ்வாறு வாய்ப்புப் பெறாதோரின் விழுக்காடு மொத்த மக்கள் தொகையில் எவ்வளவு விழுக்காடு?
* இந்த நலிந்த மேல்சாதி ஏழைகள் மொத்தத்தில் எவ்வளவு பேர், மொத்த மக்கள் தொகையில் எத்தனை விழுக்காடு?
* அந்த விழுக்காட்டை அடிப்படையாகக் கொண்டு தான் இந்த 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளவு முடிவு எடுக்கப்பட்டதா?
* இவை ஒவ்வொன்றுக்கும் நாடு முழுக்க முழுமை யான விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா?
* அல்லது மாதிரி அடிப்படையில் ஆய்வு மேற்கொள் ளப்பட்டதா?
* அல்லது எந்த அடிப்படையுமின்றி, ஆய்வுமின்றி பொத்தாம் பொதுவாக பா.ச.க. பார்ப்பனக் கூட்டத் தின் விருப்பத்திற்கேற்ப முடிவுகள் எட்டப்பட்டதா?

இதையெல்லாம் பற்றி எவர் கேட்டாலும் கேட்கா விட்டாலும் உச்ச வழக்கு மன்றம் இதற்கு முன்னைய காலமெல்லாம் இடஒதுக்கீடு குறித்த வழக்குகளிலெல் லாம் வழக்கு தொடங்கும் போதே அடுக்கடுக்காக வினாக்களை அடுக்கிக் கொண்டே போகும் என்பதை இந்த நாடே அறியும் என்பதால் இந்த 10 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டம் குறித்தும் வினாக் கணைகளைத் தொடுக்கும் என எதிர்பார்ப்பது நியாயம்தானே.

இதுபோன்ற ஒதுக்கீட்டுக்கான மாநில அரசுகளின் சட்டங்களுக்கும் ஆணைகளுக்கும் எதிராகத் தொடுக் கப்பட்ட இதுபோன்ற வழக்குகளிலெல்லாம் இவ்வா றெல்லாம் எடுத்தெடுப்பிலேயே உயர்வழக்கு மன்றங் களும் வினாக்களைத் தொகுத்து வந்துள்ளன. ஆனால் இந்தப் பத்து விழுக்காடு சட்டத்திற்கு எதிராக உயர் வழக்கு மன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்கு களையும் தன் மன்றத்திற்கே மாற்றிக்கொண்டு சென்ற ஒன்றரை ஆண்டுகாலமாகத் தண்ணீருக்குள் போட்ட கல்லுப் போன்று மரண அமைதி காத்துக்கொண்டு வருகிறது உச்சவழக்கு மன்றம் என்பதுதான் நாட்டுக்கே புரியாத புதிராக இருக்கிறது.

ஆனால் உச்ச வழக்கு மன்றமும், சென்னை உயர் வழக்கு மன்றமும் இடஒதுக்கீடு தொடர்பான வழக்குகளில் மேற்சொன்னது போன்ற தொடுக்கப்பட்ட கேள்விக் கணைகள் தமிழ்நாட்டு அரசின் மற்றும் மக்களின் மனத்திரையில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. எனவே இதுபோன்ற நிகழ்வில் இதுபோன்ற கேள்விகளுக்கு ஆளாகக் கூடாது தமிழக அரசு எனத் தமிழ்நாட்டு மக்கள் மனமார எதிர்பார்த்துக் கொண்டிருப்பது நியாயம் தானே. எனவே தமிழக அரசும் தற்போது வரை 10 விழுக்காட்டுச் சட்டத் திருத்தத்தை முதல் நிலையில் அலசி ஆய்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவை :

இந்திய ஒன்றிய நாடு முழுமைக்கும் எப்படியோ 10 விழுக்காடு என்று வரையறுத்துவிட்டது; போகட்டும். இதையெல்லாம் கேள்விக்குள்ளாக்குவது உச்ச நீதி மன்றத்தின் கடமை; பார்க்கலாம். ஆனால் நாட்டிலுள்ள ஒவ்வொரு மாநிலத் தேசத்திலும் இடஒதுக்கீடு வரம்புக்குள் வராத பார்ப்பனர் உள்ளிட்ட மேல்சாதியினரின் மக்கள் தொகை வெவ்வேறாக இருக்கும். அதிலும் நலிந்த ஏழை பார்ப்பனர் உள்ளிட்ட மேல்சாதிக்காரர்கள் வெவ்வேறு அளவில்தான் இருப்பர். இந்த ஆண்டு வருமான அளவு ரூ.8 இலக்கத்திற்குள்ளாக உள்ள பார்ப்பனர் உள்ள மேல்சாதி ஏழைகளைக் கணக் கெடுப்பது என்பது பெரும் சிக்கலாகத்தான் இருக்கப் போகிறது. இதுபோன்ற மேல்சாதி ஏழைகள் கணக்கிடப் பட்டு அவர்கள் மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் எத்தனை விழுக்காட்டினராக உள்ளனர் என்பதையும் கணக்கிட வேண்டும். அந்த விழுக்காடு அளவுக்கு அந்த ஏழைகள், அரசுப் பணிகள் கல்வியில் இடம் பெற்றுள்ளனரா என்பதையும் ஆய்வு செய்து கணக்கிட வேண்டும்.

இப்போது இடஒதுக்கீட்டு வளையத்திற்குள் வராத வகுப்புகளில் (மேல்சாதி) உள்ள ஏழைகளுக்காகத் தனியே 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கிடுவதற்கு அரசமைப்புச் சட்டம் 103ம் திருத்தம் செய்யப்பட்டு அதை ஒன்றிய அரசும் சில மாநிலங்களும் நடைமுறைப் படுத்தியும் உள்ளன. ஆனால் இச்சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டு உச்ச வழக்காடு மன்றத்தில் முன்னுரிமை அடிப்படையில் வழக்கு மன்றத்தால் எடுத்துக்கொள்ளத்தக்கதாக இல்லை என ஒன்றரை ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. அதை வேறெந்தப் பின்னணியிலும் ஆய்வு செய்வதைவிட உச்ச வழக்கு மன்றம் மண்டல் வழக்கில் 16.11.1992-இல் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் பின்னணியில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதுதான் சிறப்பாக அமையும். அதாவது அந்தத் தீர்ப்பை அடிப்படையாக (Bench Mark) எடுத்துக்கொள்வது தேவையில்லாத நெருடல்களைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக அமையும்.

முதலில் இதில் நாம் ஒன்றைச் சரியாகக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அரசமைப்புச் சட்டம் அடிப்படை உரிமைகள் பகுதியில் 15(4), 16(4) பிரிவு களின்கீழ் சமூகத்தில், கல்வியில் பின்தங்கிய பிற்படுத் தப்பட்ட மக்கள் இடஒதுக்கீடு பெற அடிப்படை உரிமை யாக வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில்தான் காலம் கடந்துவிட்ட காகா கலேல்கர் குழுவுக்கு அடுத்து மண்டல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வழங்கிய பரிந்துரைகளில் ஒன்றான பட்டியல் குல, பழங்குடியர் தவிர்த்த இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு ஒன்றிய அரசுப் பணிகள், கல்வியில் அளிக்கப்பட வேண்டும் என்பதின் அடிப்படையில் 1990இல் ஒன்றிய அரசு அதை நடைமுறைப்படுத்த ஆணை வெளியிட்டது. அதை எதிர்த்து உச்ச வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. உடன் உச்ச வழக்கு மன்றம் இடைக்காலத் தடைவிதித்துவிட்டது. 1950-லிருந்து 1990 வரை அரசமைப்புச் சட்டத்தில் 40 ஆண்டுகளாக இடம் பெற்றிருந்த பிரிவுகளின் அடிப்படையில்தான் அன்றைய அரசு இடஒதுக்கீடு ஆணை பிறப்பித்தது. ஆனால் தடை. சனவரி 2019இல் சனவரி முதல் வாரத்திற்குள் அரசமைப்புச் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தால் செய்யப்பட்டு சனவரி 8 அன்று குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்த 103ஆம் திருத்தச் சட்டப்படி மேல்சாதி ஏழைகளுக்கு 10 விழுக்காடு தனியே இடஒதுக்கீடு அளிக்கப்பட்டு உடன் ஒன்றிய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டது. இந்தச் சட்டத்தை எதிர்த்து வழக்கு உச்ச நடுவர் மன்றத்தில் தொடரப்பட்டுவிட்டது. 1990இல் இதர பிற்படுத்தப்பட் டோருக்கு இடஒதுக்கீடு நடைமுறைக்கு வருவதற்குத் தடைவிதித்த உச்ச வழக்கு மன்றம் இப்போது அமைதி காத்து எந்த இடைக்காலத்தடை ஆணையும் பிறப்பிக் காமல் சென்ற 1½ ஆண்டுகாலமாக நிலுவையில் வைத்துள்ளது அதன் சிந்தை எத்தன்மையானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். சரி, 1992ஆம் ஆண்டு தீர்ப்பைப் பார்ப்போம்.

அதன் அடிப்படையில்தான் அந்த ஏழை மக்கள் தமிழக அரசுப் பணிகளில், கல்வியில் இடஒதுக்கீடு பெறத் தக்கவர்களா? இல்லையா? என்று முடிவு செய்திட வேண்டும். உண்மையில் இந்த மேல்சாதி ஏழை மக்கள் தொகை தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் எத்தனை விழுக்காட்டினர் இருக்கின்ற னரோ அதற்கும் குறைவான விழுக்காட்டு அளவில் உள்ளனரென்றால் ஏனைய வகுப்புகளுக்கு எந்த விகிதத்தில் இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதோ அதைப் போன்றே இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீடு விழுக்காட்டு அளவாக இருக்க வேண்டும்.

மேலும் இக்காலக்கட்டத்தில இந்திய ஒன்றியம் உச்சவழக்கு மன்றக் கட்டளைச் சட்டமான 50 விழுக்காடு வரம்புக்கும் அதிகமாக மேல்சாதி ஏழைகளின் மேல் கழிவிறக்கம் கொண்டு 10 விழுக்காடு அவர்களுக்கு இட ஒதுக்கீடு அளித்து இந்திய ஒன்றிய அரசு மொத்த இடஒதுக் கீட்டின் அளவை 60 விழுக்காடாக உயர்த்தியுள்ளதோ, அதேபோன்று தற்போது தமிழ்நாட்டில் 85-90 விழுக்காடு மக்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடும் என்பதால் அதற்கும் ஒரு ஆய்வுக் குழுவை தமிழக அரசு அமைத்து இவர்கள் அதிக மக்கள் தொகையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டால் அதற் கேற்றாற்போல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டு அளவை 90 விழுக்காட்டு அளவுக்கு உயர்த்தி வழங்கிடுவதற்கு இடஒதுக்கீட்டுக்கான 50 விழுக்காடு உச்ச வரையறை இடையூறாக அமையாது என்பதை இந்திய ஒன்றிய அரசு வழிகாட்டுதலைக் கடைப்பிடித்து செயல்படுத்திட வேண்டும். இனி நாம் ஒன்றிய அரசின் 10 விழுக் காட்டுச் சட்டம் அடிப்படை இயற்கை அறனுக்கு முரணாகச் செல்லத்தக்கதல்ல என்பதைக் காணலாம்.

உச்ச, உயர் வழக்கு மன்றச் சிந்தையை அங்கு பணிபுரியும் நடுவர்களின் கீழேயுள்ள கருத்துகளை, பேச்சுக்களைக் கவனத்தில் கொண்டால் நாம் புரிந்து கொள்ள முடியும்.

* பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு ஏன்? (1992 இல் மண்டல் வழக்குத் தீர்ப்புதான் இதற்குப் பதில்)
* இவர்களுக்கு எவ்வளவு காலத்திற்குத்தான் இட ஒதுக்கீடு அளிப்பது? (16(4) பிரிவு தெளிவுபடுத்து கிறது - இம்மக்களுக்குப் போதுமான அளவுக்கு அரசுப் பணிகளில் பங்கு கிடைக்கும் வரையில் இடஒதுக்கீடு தொடர வேண்டும்-State shall make any special provision for reservation to backward classes of citizen if in the opinion of the state they are not adequately represented).
* கையூட்டும் இடஒதுக்கீடும் நாட்டின் மிகப்பெரும் இரு கேடுகள். (இடஒதுக்கீட்டுக் கொள்கை கொண்ட தமிழ்நாடு பொருளாதார, சமூக, கல்வி, மருத்துவ வளர்ச்சியின் உச்சத்தில்).
* பார்ப்பனர்கள்தான் சமூகத்தில் சிறப்பானவர்கள். இடஒதுக்கீட்டுக்கு எதிராகப் போராட வேண்டும்.

(ஆனால் பார்ப்பனர் உள்ளிட்ட மேல்சாதி நலிந்த வருக்கு இடஒதுக்கீடு தரலாம். இன்னும் அதைக் கேள்விக்குள்ளாக்காது உள்ளது உச்ச நடுவர் மன்றம்).

(அரசமைப்புச் சட்டத்தின் மீது உறுதிமொழி எடுத்து அதன் பாதுகாவலர்களாகக் கருதப்படுபவர் சொன்னவை).

1992ஆம் ஆண்டு உச்ச நடுவர் மன்றத் தீர்ப்பில், ஒடுக்கப்பட்ட மக்களாக உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வர்கள் பல நூறு ஆண்டுகளாக வேலையில், கல்வி யில் வேற்றுமைப்படுத்தப்பட்டு பாகுபாட்டுக்குள்ளாக் கப்பட்டு வந்ததால் அதை நேர்படுத்துவதற்கு அவர் களுக்கு இடஒதுக்கீடு வேறுபாடாகவும் பாகுபாடாகவும் அளிக்கப்பட வேண்டும் - the discrimination other backward classes who were subjected over centuries are entitled for reservation on the basis of the same discrimination to set-right the discriminated oppression and suppression.

இங்கு ஒன்றிய வரலாற்றில் எந்தக் காலக்கட்டத்தி லாவது பார்ப்பனர்கள் உள்ளிட்ட மேல்சாதிக்காரர்கள் ஏழைகளும்கூட அரசுக் கல்வியில், வேலையில் வேறுபடுத்தப்பட்டு பாகுபடுத்தப்பட்டு ஒடுக்குமுறைக்கு உள்ளானதா? இதர பிற்படுத்தப்பட்டோருள் வளமான பிரிவினராக உள்ளவர்களை இடஒதுக்கீட்டு வளையத் திலிருந்து நீக்கிவிட வேண்டும்; உச்ச வழக்கு மன்றம் சொன்னது. அதற்குக் காரணமும் சொல்லப்படுகிறது. கல்வியில், சமூகத்தில் பின்தங்கியவராக உள்ள இதர பிற்படுத்தப்பட்டவர் நல்ல உயர் அரசுப் பணி, பொருளாதாரத்தில் உயர்ந்த நிலை அடைந்துவிட்டால் அவருக்குக் கல்வியும் கிடைக்கும்; சமூக நிலையில் அவரின் இழிவு நிலையும் நீங்கிவிடும் என்பதால் அவரை சமூகத்தில், கல்வியில் பிற்படுத்தப்பட்டவராகக் கருத இயலாது. எனவே சமூக ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்டு விடுகின்றார். எனவே இவருக்கு இடஒதுக்கீடு பெறத் தகுதியில்லை என அந்த வளமானவரை அந்த வளையத்திலிருந்து நீக்கிட வேண்டியதுதான் என்று உச்ச நடுவர் மன்றம் பொது விதியாக இதர பிற்படுத் தப்பட்டோருள் வளமான பிரிவினரை இடஒதுக்கீட்டு வளையத்திலிருந்து நீக்கிடலாம் என வரையறுத்து விட்டது. எனவே இடஒதுக்கீடு பெற முதன்மையான முன் வரையறை கல்வியில், சமூகத்தில் பிற்படுத்தப் பட்டவராக இருத்தல் வேண்டுமென்பது தெளிவாகின்றது.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 46-இன்படி நாட்டிலுள்ள நலிவுற்ற மக்களைச் சமூக அநீதியிலிருந்து காப்பாற்ற வும், அரசமைப்புச் சுரண்டலிலிருந்து விடுவிக்கவும் இவர்களுக்கு இங்கு 'நலிவு' என்ற சொல் 103ஆம் சட்டத் திருத்தத்தில் சொல்லப்பட்டதுபோல் வெறும் பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்ல. ஆனால் இது மக்களின் சமூக வாழ்நிலையில் அவர்கள் ஒடுக்கப்பட்டு நலிவுறுவதையும் போதிய கல்வி, மருத்துவம் மக்களுக்கு அளிக்கப்படாது அவர்கள் நலிவுறுவதையும், இன்னும் வாழ்க்கைசார் பல கூறுகளில் நலிவுறுதலையும் உள்ள டக்கியதாகத்தான் 'நலிவுற்ற பிரிவு மக்கள்' என்ற சொற்றொடர் பிரிவு 46-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் பொதுவாக நலிவுற்ற மக்கள் என்று சுட்டியது மட்டுமின்றி குறிப்பாய் "பட்டியல்குல, பழங்குடி மக்களின் நலிவு என்ற சொல்லுடன் இணைத்து வலிந்து அழுத்தம் கொடுத்துச் சொல்லப்பட்டுள்ளது." சமூக அநீதியிலிருந்து நலிவுற்ற மக்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்பது சமூகத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களை மட்டும்தான் சுட்டும். பார்ப்பனர் உள்ளிட்ட மேல்சாதியினர் வரலாற்றின் எக் காலத்திலும் சமூக அநீதிக்கு உள்ளானவர்கள் அல்லர். ஆனால் பொருளாதார 'நலிவு' என்பது அனைத்துச் சமூகப் பிரிவுகளிலும் காணப்படும் பொதுநிலை. அதை நீக்குவதற்கு அம்மக்களுக்குப் பொருளுதவி அளித்து பொருளாதாரச் சுரண்டலிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதனால் பிரிவு 46, நலிவுக்குத் தீர்வு இடஒதுக்கீடு அல்ல என்பது தெளிவு.

அரசமைப்புச் சட்டம் 15(4) மற்றும் 16(4) இரு பிரிவுகளும் சமூகத்தில், கல்வியில் பிற்படுத்தப்பட்ட குடிமக்களைப் பற்றிக் குறிப்பிட்டு அரசுக் கல்வியில், வேலைகளில் அவர்கள் இடஒதுக்கீடு பெற உரிமை பெற்றவர்கள் எனக் கட்டளையிடுகின்றன. ஆனால் பிரிவு 46 மக்களுள் (People) நலிந்த பிரிவினர் என்று தான் சொல்கிறது. குடிமக்களுள் (Citizen) நலிந்த பிரிவினர் என்று குறிப்பிடவில்லை. மக்கள் என்ற சொல் குடிமக்களுடன் குடிமக்களாக இல்லாதவர்களையும் சேர்த்துக் குறிக்கும் பொதுச் சொல். குடிமக்களுக்குத் தான் இடஒதுக்கீட்டு உரிமையை 15(4), 16(4) பிரிவு கள் வழங்கியுள்ளது. குடிமக்களாக இல்லாதவர்கள் அந்த உரிமை அற்றவர்கள் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் பா.ச.க. அரசு 46ஆம் பிரிவின் உண்மையான நோக்கத்தைத் திரித்து அதற்கு முரணாக அப்பிரிவையே பயன்படுத்தி அரசமைப்புச் சட்ட 103ஆம் திருத்தம் செய்யப்பட்டுவிட்டது. அதுமட்டு மல்ல, 46ஆம் பிரிவின் ஒவ்வொரு சொல்லும் திரிக்கப் பட்டுத்தான் இத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே இது அரசமைப்புச் சட்டத்தின் மீது நிகழ்த்தப்பட்ட மோசடி. எனவே 103ஆம் சட்டத்திருத்தம் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. எனவே இது செல்லத்தக்கதல்ல என உச்ச வழக்கு மன்றம் தள்ளுபடி செய்தும் அதன் அடிப்படையில் ஒன்றிய அரசு பிறப்பித்த ஆணையை உடனடியாக தள்ளுபடி செய்தும் விரைவில் தீர்ப்பு அளித்திடும் என நம்பலாம்.

இந்தத் தருக்கத்தை பார்ப்பனர் உள்ளிட்ட மேல்சாதி ஏழைகளுக்கு இடஒதுக்கீடு அளித்திட முற்படும் போது முன்னிறுத்த வேண்டும். இவர்கள் எந்த நிலையிலும் கல்வியில், சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களாக நடத்தப் பட்டதாக வரலாறே கிடையாது. மேலும் அவர்கள் கல்வி பெறுவதில் இடையூறே இல்லை. சமூகத்தில்

உயர் மதிப்புக்குரியவராகத்தான் உள்ளனர். காட்டாக இந்திய ஒன்றியத்தில் 25 விழுக்காடு கல்வி அறிவு அற்றவர்களுள் இவர்களில் இருபாலருள்ளும் ஒருவர் கூட இருக்க வாய்ப்பில்லை. அப்படியெனில் 30 கோடி மக்களுக்கும் மேலாக கல்வி அறிவு அற்றோர் அனைவரும் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களான பட்டியல் குலத்தவர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோராக மட்டும் இருக்க முடியும். இதுதான் 73 ஆண்டைய விடுதலை பெற்ற இந்திய ஒன்றியத்தின் இழிநிலை. இதுகுறித்து நாடு வெட்கித் தலைகுனிய வேண்டும். இதற்கும்மேல் ஒடுக்கப்பட்டோருக்கு ஏன் இடஒதுக்கீடு என வினவுபவர் ஒட்டுமொத்த சமூக மேம்பாட்டுக்கு, வளர்ச்சிக்கு இடையூறானவர் எனத்தான் கொள்ள வேண்டும்.

4.8.2020 அன்று மகாராட்டிரத்தில் அந்நாட்டரசு தம் நாட்டு மக்களுக்கெனத் தனியே 12 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதற்கு எதிரான வழக்கில் இந்த இடஒதுக்கீடு உச்ச வழக்கு மன்றம் விதித்த இடஒதுக்கீட்டு உயர் வரையறை அளவான 50 விழுக்காட்டை மீறுவதாகும் என வாதிடப்பட்டது. அதற்கு 10 விழுக்காட்டு சட்டமும் அந்த உயர் அளவான 50 விழுக்காட்டை மீறுவதாக உள்ளது என்பதை அந்த வழக்கை எடுக்கும் போது உச்ச வழக்கு மன்றம் கருத்தில் கொள்ள வேண்டுமென்று வாதிடப்பட்டது. அதற்கு 200 மில்லியன் (20 கோடி) மக்களாக உள்ள இவர்களுக்கு இடஒதுக்கீடு தரப்பட வேண்டுமென்றனர். இது எவ்வளவு அப்பட்டமான பொய். அதுவும் உச்ச வழக்கு மன்றத்தில் மனம் கூசாமல் பொய்யுரைக்கின்றனர். மொத்த மேல் வகுப்பினர் 10-12 விழுக்காட்டினர் மட்டுமே. மொத்தத்தில் 15 கோடி மக்கள் மட்டும் இருப்பர். இதில் பெரும்பாலோர் வளமான பிரிவினர். மிகவும் அதிக அளவாக 7-8 கோடிப் பேரே இவர்கள் இருப்பர். இது நாட்டின் மக்கள் தொகையில் வெறும் 6 விழுக்காட்டினருக்கு மிகாமல்தான் இருக்க முடியும். இந்த 6 விழுக்காட்டினருக்கும் 10 விழுக்காடு ஒதுக்கீடு என்பது இயற்கை முரண். வன்கொடுமை. அதற்கு இவ்வன் கொடுமை தமிழகத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் ஒரு குழு ஒன்று அமைத்து மேலே குறிப்பிட்ட வினாக்களை எழுப்பி ஆய்வு மேற்கொள்ள வேண்டும். அடுத்து உடனடியாக 90 விழுக்காடு இட ஒதுக்கீடு அளித்து ஆணை பிறப்பிக்க வேண்டும். இதே போன்று உச்ச வழக்கு மன்றத்தில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது மேலே சொல்லப்பட்டுள்ள வினாக்களை எழுப்பி அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான உச்ச வழக்கு மன்றக் கட்டளைத் தீர்ப்புக்கு எதிரானது என நிறுவி இந்தக் கேடான சட்டம் செல்லத் தக்கதல்ல என தள்ளுபடி செய்திட ஆவனவெல்லாம் செய்வோம்.

# பகுத்தறிவுப் பேராசான் - பெரியார்

வென்றெடுக்க வா தோழா! ஓடும் கால
வெளி ஓடையில் துளிதான். ஆயின் எந்தக்
குன்றுடைத்தும் சிலை வடிக்கும் உளியே நீதான்.
குமுறி நிற்கும் எரிமலை வாய்கக்கும் தீதான்.
சென்றுகிழியும் இறுதி நாளுக்குள்ளே
திசை நடுக்கும் வரலாற்றில் திருப்பம் ஏற்று
பொன்றொடுக்கும் பொய்யறிவுச் சிறையிருப்பில்
பகுத்தறிவால் விடுதலைகொள் பெரியார் போற்றி!

மானுடத்தின் வீதிகளில் நஞ்சு பாயும்
மடத்தனத்தின் முடைநாற்றம் திசைகள் மேவும்
ஊனுடம்பாம் உயிர்க்கூடு சாம்பலாகும்
உன்வாழ்வின் மூச்சறுந்து போகும் நாளில்
வானிடறும் ஆற்றலுற்று இருந்தும் வாழாப்
பதர்நாளாய்க் கழித்தோமே என்றுநீயே
கூனுடம்பு துடித்தழுது புலம்புவாயோ?
கூரறிவுப் பெரியாரின் கொள்கை சேர்ப்பாய்.

கால்பந்து விளையாட்டுத் திடல்தான் வாழ்க்கை
கால்களினால் உதைபடும் பந்தேதான் இன்னல்
நூல்பந்து பிரிவதுபோல் தேயும் நாட்கள்
நூறுநூறு தலைமுறைகள் கடந்து வந்தோம்.
சால்புற்றுக் குமுகாய முன்னேற்றத்தில்
சான்றுபட ஒருசெயலேனும் நாம் செய்தால்
நாள்பற்று வைத்துப்பின் பேரைச் சொல்லும்
நம் பெரியார் குமுகத்தின் விடியல் வேந்தன்.

மலிந்துவிட்ட குமுகத்தின் பழம்பிழைகள்
பார்ப்பனியம் புகுத்திவிட்ட பெரும்பிழைகள்
மெலிந்துவிட்ட மனிதத்தின் மேல்கீழ் என்னும்
வேர்விட்ட வேறுபாட்டை வளர்த்துவிட்டு
வலிந்துபற்றித் தமிழியத்தைக் கெடுத்துவிட்ட
வஞ்சகத்தை இவ் அளவும் பொறுத்தல் தீதே!
பொலிந்து வந்து புதுத்திருத்தப் பாடம் சொன்ன
'பகுத்தறிவுப் பேராசான்' மாணாக்கர் நாம்.

அடடாஓர் பகுத்தறிவின் மின்னல் வீச்சு!
அரும்மக்கள் செல்வனான நடிக நல்லோன்
(விசயசேதுபதி)
''விடடாநீ சாமிகட்கு நடுவே சண்டை
விண்ணிருந்து சாமிவந்து உதவிடாது.
இடடாநீ நெஞ்சிலிதை; மனிதனுக்கு
இன்னொருநல் மனிதன்தான் உதவிசெய்வான்.
கொடடாநீ மனிதநேயம்; வையத்தின் தேவை.
கொண்டாடு மனிதத்தை'' என்றான் அம்மா!

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

# நாடாளுமன்றத் தமிழக உறுப்பினர்களின்

# கனிவான கவனத்திற்கு

## மய்ய அரசின் பணியாளர்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) பெற்றுள்ள பங்கு 1980-2008க்கு இடைப்பட்ட 28 ஆண்டுகளில் கூடியுள்ளதா? குறைந்துள்ளதா?

*மய்ய அரசில் பட்டியல் பழங்குடிகள், பட்டியல் வகுப்புகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் ஆகிய மூன்று பிரிவினர்க்குரிய இடஒதுக்கீட்டினை நடைமுறைப்படுத்துகின்ற, கண்காணிக்கின்ற துறை பணியாளர் மற்றும் பயிற்சித்துறை (Department of Personnel and Training). இந்தத் துறை 2014 ஆம் ஆண்டில் Brochure on Reservation For SCs, STs and OBCs in Services எனத் தலைப்பிட்டு A4 பக்க அளவில் 82 பக்கம் அடங்கிய ஒரு சிறு நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளது.*

*இந்தச் சிறு நூலில் 9 ஆம் பக்கத்தில் பத்தி எண்.1.14 இல் Impact of Reservation அதாவது **இடஒதுக்கீட்டின் தாக்கம்** என்னும் சிறு தலைப்பின் கீழ் சிறு குறிப்புடன் ஒரு பட்டியலையும் வெளியிட்டுள்ளது. அந்தச் சிறு குறிப்புரையின் தமிழாக்கமும் பட்டியலும் இங்கே வெளியிடப்படுகிறது.*

**இட ஒதுக்கீட்டின் தாக்கம் (Impact of Reservation)**

| As on 1st of January | Group A | | Group B | | Group C | | Group D | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | SCs | STs | SCs | STs | SCs | STs | SCs | STs | SCs | STs |
| 1965 | 1.64 | 0.27 | 2.82 | 0.34 | 8.88 | 1.14 | 17.75 | 3.39 | 13.17 | 2.25 |
| 1970 | 2.36 | 0.4 | 3.84 | 0.37 | 9.27 | 1.47 | 18.09 | 3.59 | 13.09 | 2.4 |
| 1975 | 3.43 | 0.62 | 4.98 | 0.59 | 10.71 | 2.27 | 18.64 | 3.99 | 13.84 | 2.94 |
| 1980 | 4.95 | 1.06 | 8.54 | 1.29 | 13.44 | 3.16 | 19.46 | 5.38 | 15.67 | 3.99 |
| 1985 | 7.3 | 1.73 | 10.03 | 1.57 | 14.87 | 4.2 | 20.8 | 5.70 | 16.83 | 4.66 |
| 1990 | 8.64 | 2.58 | 11.29 | 2.39 | 15.19 | 4.83 | 21.48 | 6.73 | 16.97 | 5.33 |
| 1995 | 10.15 | 2.89 | 12.67 | 2.68 | 16.15 | 5.69 | 21.26 | 6.48 | 17.43 | 5.78 |
| 2001 | 11.42 | 3.58 | 12.82 | 3.7 | 16.25 | 6.46 | 17.89 | 6.81 | 16.41 | 6.36 |
| 2002 | 11.09 | 3.97 | 14.08 | 4.18 | 16.12 | 5.93 | 20.07 | 7.13 | 16.98 | 6.11 |
| 2003 | 11.93 | 4.18 | 14.32 | 4.32 | 16.29 | 6.54 | 17.98 | 6.96 | 16.52 | 6.46 |
| 2004 | 12.2 | 4.1 | 14.5 | 4.6 | 16.9 | 6.7 | 18.4 | 6.7 | 17.05 | 6.54 |
| 2005 | 11.8 | 4.3 | 13.7 | 4.5 | 16.4 | 6.5 | 18.3 | 6.9 | 16.62 | 6.42 |
| 2006 | 12.9 | 3.9 | 15.0 | 5.7 | 16.4 | 6.9 | 18.6 | 7.1 | 16.75 | 6.75 |
| 2008 | 12.5 | 4.9 | 14.9 | 5.7 | 15.7 | 7.0 | 19.6 | 6.9 | 17.51 | 6.82 |

“மய்யஅரசின் பணிகளில் பழங்குடிகளும் பட்டியல் வகுப்புகளும் A, B, C மற்றும் D பிரிவுகளில் பெற்றுள்ள பங்கு அதிகரித்துள்ளது. நாடு விடுதலை அடைந்தபோது, பட்டியல் வகுப்புகள் மற்றும் பழங்குடிகள் ஆகிய பிரிவுகள் பெற்றிருந்த பங்கு சொற்ப எண்ணிக்கையிலேயே இருந்தது. கிடைத்துள்ள தகவலின்படி பட்டியல் வகுப்புகளின் பங்கு 1.1.1965இல் A, B, C மற்றும் D மற்றும் பிரிவுகளில் முறையே 1.64%, 2.82%, 8.88% மற்றும் 17.75% ஆகும். இது 1.1.2008இல் முறையே 12.5%, 14.9%, 15.7% மற்றும் 19.6% ஆக அதிகரித்துள்ளது.

“அதே போன்று பழங்குடிகளின் பங்கு A, B, C மற்றும் D பிரிவுகளில் 1.1.1965இல் பெற்றிருந்த பங்கு முறையே 0.27%, 0.34%, 1.14% மற்றும் 3.39% ஆகும். இது 1.1.2008இல் முறையே 4.9%, 5.7%, 7.0% மற்றும் 6.9% ஆக அதிகரித்துள்ளது. பட்டியல் வகுப்புகள் மற்றும் பழங்குடியின வகுப்புகள் ஆகிய இரண்டு பிரிவினர் பெற்றிருந்த பங்கு 1.1.1965இல் முறையே 13.17% மற்றும் 2.25% ஆகும். இது 1.1.2008இல் முறையே 17.5% மற்றும் 6.82% ஆக அதிகரித்துள்ளது. பல்வேறு ஆண்டுகளில் பட்டியல் வகுப்புகளும் மற்றும் பழங்குடி களும் பணிநிலை வாரியாகப் பெற்றிருந்த பங்கு இங்கே விழுக்காட்டு அளவில் மேலே பட்டியலில் தரப்பட்டுள்ளது.”

பணியாளர் & பயிற்சித்துறை கொடுத்துள்ள (முன் பக்கத்தில் உள்ள) பட்டியலில் நாம் கவனிக்கப்பட வேண்டிய செய்தி என்னவென்றால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு 1990 இல் இடஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டு அது 1994இல் நடப்புக்கு வந்தது. இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ள சிறு நூல் 2014இல் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலின் முகப்புப் பக்கம்தான் மேலே கட்டத்தில் படமாக வைக்கப்பட்டுள்ளது. இடையில் 20ஆண்டுகள். சிறு நூலின் தலைப்பாக பட்டியல் வகுப்பு கள், பழங்குடிகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் என்று கொடுத்துவிட்டு பட்டியல் வகுப்புகள் மற்றும் பழங்குடிகள் ஆகிய இரண்டு பிரிவுகளின் புள்ளி விவரங்களை மட்டும் வெளியிட்டு விட்டு **இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் பற்றிய புள்ளி விவரங்களை வெளியிடாதது ஏன்? இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் புறக்கணிக்கப்பட் டுள்ளது எதனால்? புள்ளி விவரம் பெறவும் தரவும் அமைச்சகத்துக்கு மனம் இல்லையா? இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்கள் அனாதைகள்! யார் கேள்வி எழுப்பப் போகிறார்கள் என்கின்ற அசட்டுத் தனமா?**

மண்டல் குழு அறிக்கையில் மய்ய அரசின் பணிகளில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள், பட்டியல் வகுப்புகள் மற்றும் பழங்குடிகள் ஆகிய மூன்று பிரிவினரும் பெற்றுள்ள பங்கு A, B, C, D ஆகிய பணிநிலை வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதே தன்மையிலான புள்ளி விவரம் கேட்டு 2008 ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினர் T.K.ரங்கராசன் கேள்வி எழுப்ப, நாடாளுமன்றப் பணிகளின் இணை அமைச்சர் நாராயணசாமி 18.11.2008இல் அந்தப் புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளார். அந்தப் புள்ளி விவரம் Voice of OBC என்னும் மாத ஏட்டிலும் சிந்தனையாளன் மாத ஏட்டிலும் வெளியிடப்பட்டுள்ளன.

பணியாளர் மற்றும் பயிற்சித்துறையால் வெளி யிடப்பட்டுள்ள சிறு நூலில் வெளியிட்டிருக்க வேண்டிய இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் பற்றிய அந்தப் புள்ளி விவரம் விழுக்காடு அளவில் என்னால் இங்கே வெளி யிடப்படுகிறது.

| ஆண்டு | A பிரிவு (இ.பி.வ)% | B பிரிவு (இ.பி.வ)% | C, D & E பிரிவு (இ.பி.வ)% | மொத்தம் (இ.பி.வ)% |
|---|---|---|---|---|
| 1980 | 4.7 | 10.6 | 19.0 | 12.6 |
| 2008 | 5.4 | 4.0 | 7.1 | 7.0 |
| கூடுதல்/ குறைவு | (+) 0.7 | (-) 6.6 | (-) 11.9 | (-) 5.6 |

**இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் பங்கு :**

A பிரிவுப் பணிகளில் மட்டும் 0.7% கூடியுள்ளது.

B பிரிவுப் பணிகளில் 6.6% குறைந்துவிட்டது.

BROCHURE
ON
RESERVATION
FOR
SCHEDULED CASTES,
SCHEDULED TRIBES
AND
OTHER BACKWARD CLASSES
IN
SERVICES

DEPARTMENT OF PERSONNEL AND TRAINING
GOVERNMENT OF INDIA
2014

C, D மற்றும் E பிரிவுப்பணிகளில் 11.9% குறைந்து விட்டது.

A, B, C, D மற்றும் E ஆகிய பிரிவுப் பணிகளில் 5.6% குறைந்துவிட்டது.

நான் ஒரு சாதாரண எளிய குடிமகன். எனக்குக் கிடைத்துள்ள, நான் சரியானது என்று கருதுகின்ற புள்ளி விவரங்களின் அடிப்படையில் 1980க்கும் 2008க்கும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் பற்றிய பட்டியலை ஒப்பிட்டு வெளியிட்டிருக்கிறேன். இந்தப் பட்டியல் பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

**முதலாவதாக** SC, ST & OBC என நூலுக்குத் தலைப் பிட்டுவிட்டு உள்ளே OBC புள்ளி விவரம் வெளியிடப் படாதது ஏன்? என்ற கேள்வியை எழுப்ப வேண்டும்.

**இரண்டாவதாக** இங்கே வெளியிடப்பட்டுள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் பற்றிய 1980 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் புள்ளி விவரம் சரியானதுதானா என்பது உறுதி செய்யப்பட வேண்டும்.

**மூன்றாவதாக** 1980 மற்றும் 2008 ஆம் ஆண்டின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பங்கு B, C, D, E ஆகிய பிரிவுகளில் குறைந்து போனதற்குக் காரணம் என்ன என்பது ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பது அரசின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்.

**- கலசம்**

# ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியை மறுப்பது தேசியக் கல்வி கொள்கை - 2020

- இரா. பச்சமலை

**ஒ**ரு நாட்டின் அனைத்து மக்களின் பன்முக மேம்பாட்டுக்கு முதன்மையான இடுபொருள் கல்வி தான். உலகில் இதை உணர்ந்த நாடுகள் அவரவர் நாட்டு மக்கள் அனைவருக்கும் வேறுபாடு, பாகுபாடின்றி கல்வி அளித்து மேம்பட்டு விளங்குகின்றன. ஆனால் இந்திய ஒன்றிய அரசு (சட்டமன்றம், நிருவாகம், நீதித்துறை, ஊடகங்கள்) ஒன்றியக் கூட்டமைப்பாக மாறாத காலத்தில் தன்னுரிமை பெற்ற பல நாடுகளாக, தேசங்களாக இருந்த காலத்திலிருந்தே இன்று வரை இனிவரும் எவ்வளவு காலங்களுக்கும் மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால், போலித் தகுதி திறமை என்ற பெயரால், விலை விதிப்பு என வெகுமக்களாக உள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எவ்வகையிலேனும் கல்வியை மறுப்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதின் நீட்சியைத்தான் தற்பொழுது அறிவிக்கப் பட்டுள்ள இந்திய ஒன்றியத் தேசியக் கல்விக் கொள்கை 2020 உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இக்கல்விக் கொள்கையை வகுத்திட அமைத்த குழுவின் தலைவர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர் களும் உயர்சிறப்புக் கல்வி பெற்றவர்களாகவும் மிக உயர்கல்வி நிறுவனங்களின் தலைவர்களாகவும் இருந்துவிட்டதினால் அவர்கள் நிலைக்கேற்ப தற்போது உயர்சிறப்புக் கல்வி நிலையங்கள் அனைத்திலும் நாட்டில் 10 விழுக்காடாக உள்ள மேல்தட்டு மக்கள் 80 விழுக்காடு அளவுக்கு இடங்களைப் பிடித்து முற்றுரிமை பெற்ற நிலையை தக்க வைத்துக் கொள்ளும் வகையிலும் அவற்றின் தரத்தை உயர்த்துவதிலும்தான் சிறப்புக் கவனம் செலுத்தி உயர் கல்விக்கான கொள்கையை வகுத்துள்ளதாகத்தான் கருத முடிகின்றது. ஒடுக்கப்பட்ட 90 விழுக்காட்டு மக்களின் கல்வி நலனைக் கருத்திற் கொண்டு உயர் கல்வியின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கக் (உண்மையில் உயர் கல்வி நிறுவனங்களைத் தனியார் வணிக நிறுவனங்களாக மாற்றிடும் நோக்குடன் முற்றும் தனியார் மயப்படுத்துவதற்குத்தான் திட்டமிடப்பட்டுள்ளது) கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே இக்கல்விக் கொள்கை உயர்நிலைக் கல்வியை வளர்ப்பதற்கும், தரம் உயர்த்துவதற்குமாக வகுத்தெடுக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

இக்குழுவில் சமூக மேம்பாட்டை, குறிப்பாக ஒடுக் கப்பட்ட மக்களின் மேம்பாட்டை முன்னிறுத்திட விழையும் சமூகவியல் பார்வை கொண்ட கல்வியாளர்களையோ இன்னும் குறிப்பாகப் பள்ளிக் கல்வி ஒடுக்கப்பட்ட மக்களை உள்ளிட்ட அனைத்து மக்களுக்குமானது என அதன் மேம்பாட்டை முதன்மைப்படுத்திட விழையும் சமூகக் கல்வியாளர்களையோ இடம்பெறச் செய்ய வில்லை. இது காலமும் இருந்து வந்த ஒன்றிய அரசு களின் குறிப்பாகப் பார்ப்பன சனாதனக் கோட்பாட்டைக் கொள்கையாகக் கொண்ட இந்துத்துவ ராட்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் அடிவருடியான தற்போதைய பாரதிய சனதாக் கட்சியின் இந்திய ஒன்றிய அரசு வெகுமக்களுக்கான அடிப்படைப் பள்ளிக் கல்வியை மறுப்பது என்ற நோக்கத்தில் வகுத்தெடுக்கப்பட்ட கல்விக் கொள்கை எனத்தான் கொள்ள முடியும்.

உண்மையில் நாட்டிலுள்ள மக்களின் கீழே காணும் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளை முற்றிலும் கருத்தில் கொள்ளாமல்தான் இத்தேசியக் கல்வி கொள்கை உள்ளது.

* பணிப்பாதுகாப்பு, சம்பள விகிதம், இவை சார்ந்த உரிமை பெற்றுள்ள அமைப்புசார் பணியாளர்கள் நாட்டிலுள்ள மொத்தப் பணியாளர்களுள் வெறும் 4 விழுக்காடு அளவுதான்.
* பணிப்பாதுகாப்பு, சம்பள விகிதம், இவைசார் உரிமைகள் ஏதுமின்றி அன்றாடம் சம்பளக்காரர் களாக நாள்தோறும் வேலை உறுதியில்லா நிலை யிலும், இவர்களின் சம்பளம் நாளும் மாறும் தன்மையிலான அமைப்புச்சாரா பணியாளர்கள் 95 விழுக்காட்டு அளவுக்கு மேலும் உள்ளனர்,
* இவர்கள் நாள் கூலி ரூ.30, 35 என நூறுக்கு மிகாமல் திங்களுக்கு ரூ.1000, 2000, 3000 எனப் பெற்று பல்லாயிரக்கணக்கான மருத்துவ மனைகளில் கல்விக்கூடங்களில் அலுவலக வளாகங் களில், பெரிய சிறிய வணிக வளாகங்களில், பெரிய சிறிய உணவகங்களில், ஊர்களின் சாலைகள், தெருக்களில் துப்புரவுத் தொழிலாளர்களாகவும், ஊர்ப்புறங்களில் உழவுத் தொழில் சிறு சிறு பணி களில், நெசவுத் தொழில் பணிகளில் வேலையாள் களாகவும், பல்லாயிரம் உணவுக்கூடங்களில் எடுப்பு வேலை செய்பவர்களாகவும் அரசு வரை யறை செய்துள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள 40-50 கோடி மக்களாக உள்ளனர்.
* இவர்களிலும் மேலாக கொடுமையான வறுமை யின் பிடியில் வாடி வதங்கும் 12-15 கோடி மக்களும் உள்ளனர்.
* இவர்களுடன் வணிக நிறுவனங்கள், மருத்துவ மனைகள், பள்ளிகள், சிறு சிறு தொழில் நிறு வனங்கள் என இவற்றில் கடைநிலையில் எழுத் தர்களாக, உதவியாளர்களாக நாளும் வயிறு கழுவுமளவுக்கு மட்டுமே ரூ.5000 அளவில்

திங்கள் சம்பளம் பெற்று வருபவர்களாக 20-25 கோடி மக்கள் உள்ளனர்.

* பல்லாயிரக்கணக்கான தனியார் பள்ளிகளில் ரூ.10000-க்குள் திங்கள் சம்பளம் வாங்குபவர்களாக சில கோடி மக்கள் உள்ளனர்.

* இவ்வாறாக நாட்டில் 90-95 கோடி மக்களின் பிழைப்பு நாள்களை நகர்த்துவதாக உள்ளது.

இவ்வாறெல்லாம் நாட்டின் அவலச் சூழல் இருக்கும் நிலையில் சில பொருளியலாளர்கள், பேரறிவுக் கல்வி சார் வல்லுநர்கள், கொஞ்சம்கூட மனச் சான்றின்றி கூச்ச நாச்சமின்றி ஏற்கெனவே கல்வி கடைச்சரக்காய் வணிகப் பொருளாய் பெரிய அளவில் மாறிக்கொண்டும் கல்வி அளிப்பது அரசின் பொறுப்பல்ல எனப் பெருமள வுக்குத் தனியாருக்கே தாரை வார்த்துவிடப்பட்டுள்ள சூழலில் இன்னும் கல்வியை ஏன் இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்றிக் கொள்ளக்கூடாது என்று கூடக் கருத்துரைக்கின்றது போல் கல்விக் கொள்கையும் கயமைத் தனம் கொண்டதாய் உள்ளது நாட்டிற்குத் தலைகுனிவு.

இந்தக் கொள்கை ஆவணம் கல்வி குறித்து பள்ளிக் கல்வி, உயர்கல்வி, ஆசிரியர் பங்கு எனப் பல்வேறு தலைப்புகளில் உள்ளது. ஒவ்வொரு தலைப்பின் பொருளையும் விரிவான ஆய்வுக்குட்படுத்த இயலாது என்பதால் பள்ளிக் கல்வி குறித்தும் ஆசிரியர்கள் பற்றிய பகுதிகளை மட்டும் குறித்து விவாதிப்போம்.

இக்கல்விக் கொள்கை ஒன்றிய அரசின் 1986 ஆண்டைய புதிய கல்விக் கொள்கைக்குப்பின் 34 ஆண்டுகள் கழித்து வெளியிடப்படுகிறது. இவ்வளவு நீண்ட நெடிய காலத்தில் பொத்தாம் பொதுவாக வெறும் தரம் என்ற சொல்லுக்குள் அடக்க முற்படும் இவ் ஆவணம் பள்ளிக் கல்வி எவ்வாறெல்லாம் மாற்றத்திற்குள்ளாகி யுள்ளது; வளர்ச்சியோ மேம்பாடோ எந்த அளவுக்குப் பெற்றுள்ளது; இதற்கான அடிப்படைக் கட்டமைப்பு களான கட்டடங்கள், கற்றலுக்கான துணைக் கருவிகள், கல்விக் கூடத்தின் சுற்றுச்சூழல் அடிப்படை வசதிகள் பற்றிக் குறைந்தது நாடு முழுமைக்கும் மாநில வாரியாகவும் ஆண்டுதோறும் இல்லாவிட்டாலும் ஐந்து ஆண்டுகால இடைவெளியில் ஆன விவரங்களைத் தந்திருக்கவேண்டும். மேலும் 5ஆம் வகுப்பு வரையி லான மாணவச் சிறார்களின் சேர்க்கை அளவு, அவர் களுக்கான போதிய வகுப்பறைகள், ஆசிரியர் மாணவர் விகிதம், ஆசிரியர்களே இல்லாத பள்ளிகள், ஓராசிரியர், ஈராசிரியர் பள்ளிகளின் எண்ணிக்கை, பள்ளிகள் ஊர்ப்புற சமூகப் பொருளாதாரச் சூழல், பள்ளிக்கல்வி அளிப்பதில் அரசின் ஒட்டுமொத்த பங்களிப்பு அளவு, தனியாரின் பங்களிப்பு அளவு என்பவையெல்லாம் குறித்த நெடிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இருக்க வேண்டும். இதுபோன்ற அடிப்படை அள்ளித்தெளித்த கோலமாய் அவசர அவசரமாகக் கல்வி கொள்கை அறிக்கை வெளியிடப்பட்டுவிட்டது.

அந்த ஆய்வின் அடிப்படையில் மேற்சொன்ன பொருள்கள் குறித்தெல்லாம் முதல் நிலை புள்ளி விவரங்களைத் (Primary Data) தர முற்படாமல் போனது பெரும் பிழை. உண்மை நிலையை நாட்டுக் குத் தருவதிலிருந்து ஒன்றிய அரசு தனது பொறுப்பைப் புறந்தள்ளிவிட்டுள்ளது. போகட்டும் குறைந்தது இப்பொருள் கள் குறித்து இரண்டாம் நிலை விவரங்களை (Secondary Data) நாட்டிலுள்ள கல்வி இயக்ககங்களிலிருந் தாவது பெற்று முழுமையான நுண்ணிய புள்ளி விவரங்களை (Micro Data)யெல்லாம் கொடுக்கத் தவறி விட்ட போதிலும் இந்த அரசு குறைந்தளவு பருண்மை யான (Macro Level Data) புள்ளிவிவரங்களையாவது கொள்கை அறிக்கையில் கொடுத்திருக்க வேண்டும். உண்மையில் அதன் அடிப்படையில்தான் தீர்வுகளை யும் முடிவுகளையும் முன்மொழிந்து முதன்மையான வற்றைத் தெரிவு செய்து நடைமுறைப்படுத்துவது பற்றி விவாதித்திருக்க வேண்டும். இவை எதன் அடிப்படை யிலுமின்றி, மனம் போனபடி செழிப்பான இந்திய ஒன்றிய 22 மொழிகளிலுமின்றி (இந்தி தவிர்த்து) சொல்லலங்காரத்துடன் ஆங்கிலத்தில் மட்டும் தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கூட்டாட்சியாக (Federal) இயக்குவதாகச் சொல்லப்படும் இந்த ஒன்றிய அரசின் சிந்தை நேர்மையானதா என்று அய்யுற வைக்கின்றது. மேலும் கல்விக் கொள்கை என்ற பெயரில் வரலாற்றுக் காலமெல்லாம் வெகு மக்களுக்குக் கல்வி மறுப்பைக் கோட்பாடாகக் கொண்டி ருந்த பார்ப்பன, சனாதன இந்துத்துவத்தை ஒன்றிய அரசு உள்நோக்கமாகக் கொண்டுள்ளதோ என்ற எண்ணமும் தோன்றுகிறது.

நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவது என்பது தான் இக்கல்விக் கொள்கையின் நோக்கம் என்று சொல்லப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் கல்வித் தரத்தின் அளவு கணக்கிடப்பட்டுள்ளது என்றால் அது 3ஆம், 5ஆம், 8ஆம் வகுப்பு மாணவர்களின் கணக்குப் பாடத்திறன், வாசிக்கும் திறன் கீழ்நிலையில் உள்ளது என்பதுதான் எனத் தெரிகின்றது. இதில் மாணவர்கள் கற்றல் திறன் மட்டும் கணக்கில் கொள்ளப்பட்டு கற்பித்தல் திறன் கருத்தில் கொள்ளப்படாதது அடிப்படை அறிவுக்குப் பொருந்திய ஆய்வுக் கண்ணோட்டமா என்ற அய்யம் எழாமலில்லை. மேலும் மாணவர் கற்றல் திறனுக்கு அடிப்படையாக அமைவது அவரின் இயல்பான அறிவுத் திறன், பள்ளிச் சூழல், கல்விச் சூழல், வகுப்பறைச் சூழல், கல்வித் துணைக் கருவிகள் பயன்படுத்துதல் என்பனவன்றி மிகவும் முதன்மையானதாகக் கொள் ளப்பட வேண்டியது கற்பித்தல் திறன். இதில் ஆசிரியர் திறன் என்று மட்டும் சுருக்கிப் பார்த்திட முனைவது அறிவுடைமையாகாது. ஆசிரியர்களின் கற்பித்தல்

திறன் மேம்பட அவர்களுக்கு எவ்வாறான கால இடை வெளியில் தொடர் பயிற்சி அளிக்கப்பட்டு வந்துள்ளது என்பதுதான் மிக மிக முதன்மையானது. இதுவன்றி ஆசிரியர்களின் நலன்கள் பேணப்பட்டு கற்பித்தல் திறன் உணர்வு மேலோங்க வழிகாணப்பட்டதா?

மேற்சொன்ன காரணங்கள் மட்டுமல்ல, ஒரு மாணவனின் கற்றல் திறனுக்கு உடன் பயிலும் மாண வர்களின் கற்றல் திறன், அவர்களது குடும்பத்தின் பொருளாதாரச் சூழல், கல்விச் சூழல், அவர்கள் வாழும் பகுதியின் பொருளாதார, கல்விச் சூழல், அவர்கள் சார்ந்த சமூகத்தின் கல்வி, பொருளாதார நிலை, அவர் கள் வாழும் ஊர்களின் பொருளாதார கல்வி நிலை போன்றவையெல்லாம் கூடத்தான் காரணங்கள் என் பதைக் கல்வியியல், சமூகவியலாளர்கள் உணர்த்து வர். இப்பொதுப் புரிதலையெல்லாம் கருத்திலும் கவனத்திலும் எடுத்துக் கொள்ளாததுடன் பொத்தாம் பொதுவாக மாணவர்களின் கற்றல் திறனைக் கணக்கிட அவர்களின் கணிதப் படிப்பு, பிற பாடப் படிப்பு அறிவு மட்டுமே கணக்கில் கொள்ளப்பட்டு அவர்களின் போதா மைக்கு அவர்கள் கற்றல் திறன் குறைபாடு மட்டுமே என்ற முடிவுக்கு வந்துள்ளது ஆய்ந்த அறிவின்பாற் பட்டதல்ல. இதனினும் கொடுமை என்னவெனில் பள்ளி மாணவர்களின் கற்றல் திறனின் போதாமைக்கு அவர்களை மட்டுமே முழுப் பொறுப்புள்ளவர்களாக்கி அதற்கான தீர்வாக அவர்களுக்குத் தேர்வு நடத்தி அவர்களைப் பாடம் படிக்கத் தூண்டலாமென்ற முடிவுக்கு வந்துள்ளது என்பது முறையானதா? மேலும் பாடத் திட்டத்தின் தரத்தை உயர்த்தலாம் என முன்மொழிவது முறையானதா? இல்லை, இல்லவே இல்லை. இது முற்றிலும் அடிமுதல் முடிவரை பெறுந் தவறானது.

அதிலும் 3ஆம், 5ஆம், 8ஆம் வகுப்பு மாணவர் களுக்கு நாடு தழுவிய பொதுத் தேர்வு நடத்திட வேண்டுமென்று இக்கல்விக் கொள்கை கூறுவது மாணவர்களை அச்சுறுத்தி அவர்களைக் கல்வியி லிருந்து அப்புறப்படுத்துவதற்குத்தான் அடிகோலும். இந்திய ஒன்றிய அனைத்து மாநிலத் தேசங்களின் பள்ளிக் கல்வி உயர்கல்வி என எந்நிலையிலுமுள்ள எவ் அகவையினரும் தேர்வு என்றாலே அச்சம் என்ற சிந்தை உள்ளவர்களாகவே இருக்கின்றனர் என்பது தான் அடிப்படை உண்மை.

என்வரையில் தன் போற்றி என்ற தன்மையி லின்றி நான் உணர்ந்ததைப் பகிர்வது பிழையாக அமையாது என்று நினைக்கிறேன். 1963ஆம் ஆண்டில் 8ஆம் வகுப்பில் முதல் மாணவனாக ஆண்டு இறுதித் தேர்வு முடிவுற்ற நிலையில் என் நண்பர் ஒருவரிடம் நான் 9ஆம் வகுப்புக்குத் தேர்ச்சி பெறுவேனா என அச்சத்துடன் கேட்க, அவர் நகைத்துவிட்டு நீங்கள் எப்படி தேர்ச்சி பெறாமல் இருக்க முடியும் என எனக்கு நம்பிக்கையூட்டினார். மாணவக் காலத்தில் குறிப்பாகப் பள்ளி இளமைக் காலத்தில் தேர்வில் தோல்வியடைந் தால் குறிப்பாக ஊர்ப்புற மாணவர்கள் துவண்டுவிடும் சிந்தை உடையவர்களாகத்தான் இருப்பர். தோல்வி யெனில் மாணவரே இனிமேல் படிப்பு ஏன் என் றெண்ணம் கொண்டவராக, குடும்பம், உற்றார், உறவி னர், சமூகம் அவர் படிப்பு தொடர்வதைக் கேள்விக்குள் ளாக்குவர் என படிப்பை இடையில் நிறுத்திட முனை வார். இதுதான் இங்குள்ள மாணவர்களின் பொதுச் சிந்தை. இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் படிப்பிலிருந்து இடைநின்றுவிட்டுப் போகட்டும் என்ற கெடு உள்நோக்கம் கொண்டு கல்விக் கொள்கை வரையப்பட்டதா?

எனவே முதலில் தொடக்கப் பள்ளிக் காலத்தில் தேர்வுதான் திறனைக் கணிக்கும் ஓர் அளவுகோல் என்பதே பெரும் பிழையான காரணி. அதைக்காட்டி லும் அதற்கு மாணவரை மட்டுமே காரணியாக்க முற்படுவது பிறழ் சிந்தை கொண்டவர் மட்டும்தான் அவ்வாறு எண்ண முடியும். அவ்வாறெனில் 3, 5, 8ஆம் வகுப்புக்குப் பொதுத் தேர்வு என்பதை அறவே கைவிட வேண்டும் என்பது அறிவுடைமை.

இக்கல்விக் கொள்கை 50 விழுக்காடு அளவிற்காவது மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் கல்வியை 2025-க்குள் அளித்திட வேண்டுமென இலக்கே குறித் துள்ளது. பள்ளிக் கல்விக் காலத்தில் மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் கல்வி அளித்தல் என்பதில் நேர்மையான நோக்கம் உள்ளதாகத் தெரியவில்லை. ஒடுக்கப்பட்ட சமூகம்சார் மாணவர்கள் அண்மைக் காலத்தில்தான் சில தலைமுறைகள்தான் படிப்பு வளையத்திற்குள் வந்துள்ளனர். இன்னும் கணிசமான மாணவர்கள் இந்தப் படிப்பு வளையத்திற்குள் இன்னும் வரவே இல்லை என்பதுதான் உண்மை நிலை. இந்நிலையில் அந்த மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் கல்வி அளிப்பது என்பது அவர்களைக் கல்விச் சூழலில் தொடர்ந்து இருக்கவிடாமல் இடையில் தடையிடுவது போல் தெரிகின்றது. இந்த இடைத் தடையைக் கடந்து அவர்கள் மீண்டும் கல்விச் சூழலுக்குள் வருவதற்குத் தயங்கும் மனநிலை ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது. உண்மையில் அது அவர்களை முறையான கல்விச் சூழலிலிருந்தே விலக்கிடும் மனநிலைக்கே தள்ளிவிடக்கூடும். எனவே ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் படிப்பு அளிக்க முற்படுவது என்பது முற்றிலும் கைவிடப்பட வேண்டும்.

மேலும் மாணவர் கற்றல் திறனுக்கு அடிப்படையான வற்றை முன்பத்தியில் சொன்ன பட்டியலில் ஆசிரியரின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதுதான் முதன்மை யான உடனடியாகச் செயற்படுத்தத்தக்கது. மற்றவை எல்லாம் காலப்போக்கில் அரசுகள் உண்மையில் மக்கள் பற்றுள்ளதாக, அக்கறையுள்ளதாகத் தொடர்ந்து

நிலைத்து செயற்த்திட்டங்கள் மேற்கொண்டால் பொதுச் சமூக மேம்பாட்டையும். அதற்கெல்லாம் பார்ப்பனிய, சனாதன சிறுமைக்குள் சிக்கித் தவிக்கும்சிந்தை கொண்ட இந்திய ஒன்றிய அரசுகளுக்கும் மாநிலத் தேச அரசுகளுக்கும் ஒரு கடப்பாட்டுணர்வு எக்காலத்தில் ஏற்படும் என்பதே மிகப்பெரும் வினா? எனவே அவற்றைக் காலம் நேர்செய்யும் என்று விட்டுவிடுவோம்.

ஆனால் பள்ளி மாணவர் கல்வித் திறன் மேம்பட தீர்வுகளாவன :

* அனைத்து வகுப்பு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு பாட ஆசிரியர் அமர்த்தப்பட வேண்டும். ஆசிரியரில்லா பிரிவு இருக்கக்கூடாது.
* ஒவ்வொரு வகுப்புப் பிரிவும் கற்றலுக்கான அனைத்துக் கருவிகளையும் கட்டடம், கரும்பலகை, எழுது பொருள், நல்லிருக்கைகள் இருக்க வேண்டும்.

(இவையெல்லாம் நாடெங்கிலுமுள்ள பள்ளிகளிலுள்ள பெரும் குறைகள் என அவ்வப்போது வெளிவரும் ஆய்வுகள் பதிவு செய்து கொண்டிருக்கின்றன. உண்மையில் இத்தேசியக் கல்விக் கொள்கை அறிக்கை முன்பே சொன்னது போல் நடப்பில் இருக்கும் குறைபாடுகளைத் திறந்த மனதுடன் வெளிப்படுத்தி, அதற்கான காலவரையிலான தீர்வுகளையும் சொல்லியிருக்க வேண்டும்).

* மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், எழுதுவதற்கான ஏடுகள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
* ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை அளவிட முற்படுவது முறையற்றது. அவர்களுக்குக் காலமும் குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையான பயிற்சி அளித்து கற்பித்தல் திறனை மேம்படச் செய்ய வேண்டும். அவர்களையும் தேர்வு என்ற நிலைக்குத் தள்ளுவது தற்கொலைக்கு ஒத்ததாகும் என அரசு உணர வேண்டும். எனவே அது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.
* மாணவர்களிடையே குழு கற்றல் முறையை அறிமுகப்படுத்த வேண்டும்.
* ஆசிரியர் மாணவர் விகிதம் கல்விக் கொள்கை சொல்லும் 1:30 என்பதன்றி 1:25 என்ற அளவிலாவதுதான் இருக்க வேண்டும். அப்போதுதான் ஆசிரியரின் மாணவர் மீதான தனிக்கவனம் சிறப்பாக இருக்கும்.
* ஆசிரியர்களிடையேயும் கற்பித்தல் குறித்த குழு விவாதத்துடன் கூடிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

இந்தத் தேசியக் கல்விக் கொள்கை இன்னும் 10 ஆண்டுகளில் 100 விழுக்காடு மக்களையும் படிப்பறிவு பெற்றவர்களாக மாற்றும் என்கிறது. இது ஒரு வெற்றுப் பேச்சுத்தான். ஏனெனில் இந்த இலக்கை எட்ட மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் - இனி ஆண்டு தோறும் பள்ளிக் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டு அளவு எவ்வளவு என்றோ, அதற்கேற்ப எவ்வெவ்வகையிலெல்லாம் நிதி ஆதாரம் திரட்டப்படும் என்றோ, எவ்வெவ்வகையிலெல்லாம் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவது போன்றவை பற்றியோ விவரங்கள் விரிவாகப் பேசப்படவில்லை. எனவே இது முற்றிலும் பொய்யுரை. ஆனால் இன்னும் 10 ஆண்டுகள் கால வரை என்கிறது கல்விக் கொள்கை. ஆனால் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 1950-லிருந்து 1960-க்குள் 10 ஆண்டுகளுள் 14 அகவைக்குள்ளோர் அனைவருக்கும் கட்டாய இலவயக் கல்வி அளிக்கப்பட அரசு ஆவன செய்யும் என அரசமைப்புச் சட்டப் பிரிவு 45 இலக்குக் குறிப்பிட்டது. விடுதலை பெற்று இந்திய ஒன்றியம் 73 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வெறும் 75 விழுக்காட்டு மக்களுக்கே படிப்பறிவைத் தந்துள்ளது. ஆனால் இலக்கு ஆண்டு 1950-லிருந்து பத்து ஆண்டுகள்தான். இதற்கு இந்திய ஒன்றிய அரசு (சட்டமன்றம், நிருவாகம், நீதித்துறை) வெட்கித் தலைகுனிய வேண்டும். ஆனால் இதற்கென எவ்வித ஆக்கப்பூர்வமான திட்டத்தையும் வகுத்திட வழிகோலாமல் இன்னும் 10 ஆண்டுகள் நீட்டித்து இலக்கை எட்டும் என கல்விக் கொள்கை சொல்வது நகைப்புக்குறியதாகத்தான் உள்ளது.

மேற்சொன்ன பிரிவு 45 வழிகாட்டு நெறிகள் பகுதியில் உள்ளது. இதை அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைப் பகுதிக்குள் சேர்க்கிறோம் என்று இந்த இந்திய ஒன்றிய அரசுகள் (சட்டமன்றம், நிருவாகம், நீதித்துறை) 2010-இல் அரசமைப்புச் சட்டம் 1986-இல் திருத்தம் செய்து பிரிவு 21அ-ஐ சேர்த்தது. ஒன்றிய அரசின் அனைத்து அலகுகளும், நான்காம் அலகான ஊடகங்களும் முதலில் இருந்த அரசமைப்புச் சட்ட 45ஆம் பிரிவில் சொல்லப்பட்டிருந்த 1960 வரையிலான பத்தாண்டுக் காலவரையறையை அப்படியே மறைத்து விட்டதற்குத் துணைபோய்விட்டன என்பதை மனச்சான்றுள்ள சமூகமாக இருப்பின் அமைதியாக இருந்திருக்காது. இருப்பினும் மக்கள் நலத்தின் உண்மையான பற்றுக்கொண்ட அமைப்புகள் இந்த இருட்டடிப்பை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து அரசமைப்புச் சட்டத்தில் அது திருத்தப்பட்டதிற்கு முன்பு இருந்த அரசமைப்புச் சட்ட 45ஆம் பிரிவை அப்படியே அனைத்து அரசமைப்புச் சட்ட நூல்களில் அடிக்குறிப்பாகச் சேர்க்கப்பட ஆவனவெல்லாம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இந்திய ஒன்றிய அரசுகளால் படிப்பறிவு 1960-க்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டியதைக் கொடுக்காமல் வஞ்சித்து வருகின்றனர் என்ற பதிவு இடம்பெறும்.

இக்கல்விக் கொள்கை தாய்மொழிவழிக் கல்வியை 5ஆம் வகுப்பு வரையிலும் வாய்ப்பிருப்பின் 8ஆம் வகுப்பு வரையிலும் அளித்திடுவது பற்றிச் சொல்லிச்

செல்வதைச் சுட்டி ஒன்றிய பா.ச.க அரசும் பார்ப்பன, சனாதனக் கட்சிக் கூட்டம் வெற்றுப் பெருமை பேசி கொண்டு வருகிறது. உண்மையில் தாய்மொழிக் கல்வியை கட்டாயமாக்கும் வகையில் இதில் ஏதும் கூறப்படவில்லை. ஆனால் உண்மையில் வெறும் தழுக்காக வாய்ப்பிருப்பின் அவ்வப்பகுதி மொழிகளி லேயே / தாய்மொழியிலேயே பள்ளிக் கல்வி வழங்க லாம் என்றுதான் இக்கல்விக் கொள்கை குறிப்பிடுகிறது.

மேலும் இக்கல்விக் கொள்கை நாடு முழுவதற்கும் மும்மொழிக் கொள்கையை முன்னெடுக்கிறது. இங்கு இவ்வரசின் உள்வஞ்சக நோக்கம் இந்தியை இந்தி மொழி பேசா மக்களுள்ள மாநிலத் தேசங்களில் வலுக்கட்டாயமாகத் திணிக்கத் திட்டமிட்டுச் செயல்படு கின்றது. அதாவது நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களும் தாய்மொழி, ஆங்கிலம் இரண்டையும் தவிர மூன்றாம் மொழி ஒன்றையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிறது. அந்த மூன்றாம் மொழி மாணவர் கள் விருப்பத்திற்கேற்ப இந்திய ஒன்றியத்திலுள்ள 9ஆம் அட்டவணையிலுள்ள எந்த மொழியாகவும் இருக்கலாம் என்கிறது. காட்டாக தமிழ்நாட்டிலுள்ள ஒரு மாநிலப் பள்ளி மாணவர்கள் மூன்றாம் மொழியாக வங்கமொழி அல்லது மராட்டிய மொழி என வெவ்வே றான மொழி ஏதாவது ஒன்றை விரும்பினால் அம்மொழிப் பாடங்களுக்கெல்லாம் தனித்தனியே அம்மொழி ஆசிரியர் களை நியமனம் செய்யுமா அந்த மாநில அரசுகள்? முடியவே முடியாது. ஆனால் விருப்ப மொழி என்ற பெயரில் இந்தி மட்டுமே என மறைமுகமாக இந்தி மொழியை அம்மொழி பேசாத மக்கள் மேல் வலுக்கட் டாயமாகத் திணிக்க முற்படுகிறது இந்தக் கல்விக் கொள்கை. ஆனால் அதே நேரத்தில் மத்திய தேசம், உத்திர தேசம், அரியானா போன்ற மாநிலங்களில் இந்திதான் வட்டாரத் தாய்மொழி. அந்த மாநிலப் பள்ளி மாணவர்கள் இந்தியுடன் ஆங்கிலம் படிப்பார்கள். அவர்களுக்கு மூன்றாம் மொழியாகத் தமிழையோ, வங்க மொழியையோ என வேறெந்த இந்திய ஒன்றிய மொழி ஏதும் கற்பிக்கப்படுவதில்லை. ஆங்கிலேயன் ஆட்சிக் காலத்தில் நிருவாக வசதிக்காய் பல்வேறு மொழி பேசும் தேசங்கள் இந்திய ஒன்றியம் என்று அமைக்கப்பட்டது. ஒரு மாநிலத் தேசத்தில் அம்மக்கள் தாய்மொழியின்றி வேறு மொழிகள் அவர்கள்மேல் திணிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழி தரப்பட்டது. நாடு விடுதலை அடைந்த பின்னும் நேரு அந்த நிலை நீடிக்க உறுதி செய்து ஆணையிட்டார். ஆனால் இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் இந்தி மொழி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து நாட்டின் அலுவல் மொழியா கவும் ஆக்கிவிட்டது. இதில் கூடப் பிற மொழியினர் மீது இந்தித் திணிப்பு ஏன் வரவேண்டும். எனவே இக்கல்விக் கொள்கை விருப்பப்பட்ட மாநிலம் மும்மொழிக் கொள் கையை ஏற்கலாம் என்று திருத்தப்பட வேண்டும்.

இவையெல்லாமின்றி இக்கல்விக் கொள்கை என்ன காரணத்தினால், என்ன தேவைக்கு, என்ன நன்மைக்கு சமற்கிருத மொழி பற்றிப் பல இடங்களில் பேசுகிறது. ஆனால் ஒன்றிய அரசமைப்புச் சட்ட 9ஆம் அட்டவணையிலுள்ள வேறு 20 மொழிகள் பற்றிப் பேசவில்லை. உண்மையில் சமற்கிருத மொழியின் நிலை என்ன?

உலக மொழிகளுள் தொன்மொழிகள், செம்மொழி களான தமிழ், சீனம், இலத்தீன், கிரேக்கத்தைப் போன்று சமற்கிருத மொழியும் தொல் மொழி, செம்மொழி என்றெல்லாம் சொல்லப்பட்டு, இந்திய ஒன்றிய அரசும் அறிவித்தும் விட்டது; இருந்துவிட்டுப் போகட்டும். அதன் இலக்கிய, இலக்கண வளம், உலகில் பல நாடுகளில் போற்றப்பட்டு பல பல்கலைக்கழகங்களிலும் இம்மொழி கற்பிக்கப்பட்டு வருவதாகவும் பெருமை பேசப்பட்டு வருகிறது. ஆனால் இம்மொழி இறைமொழி யென்றும், பார்ப்பனர்களில் ஒரு ஓதுவார்க் கூட்டம் மட்டும் இம்மொழிப் பாக்களை மனனம் செய்து கற்கவும், இறைவனின் வழிபாட்டு மொழியாகச் சொல்ல வும் என்றுதான் அறியப்படுகிறது. அதுமட்டுமல்ல, பார்ப் பனர்கள் தவிர்த்த எவரும் எங்கும் இம்மொழியைப் படிப்பதற்காகக் கேட்கவும், பார்க்கவும், திரும்பச் சொல்லவும் முற்படுவது பெரும் குற்றமாகக் கருதப்பட்டு, மீறுபவர் கள் கொடுந்தண்டனைக்கும் உள்ளாக்கப்படுவர் என ஈராயிரம் ஆண்டுகளாக இந்த சமற்கிருத வேதம் படிப்பு ஏனையோர் அனைவருக்கும் மறுக்கப்பட் டுள்ளது.

ஆனால் உலகில் இந்திய ஒன்றியம் பிற வெளி நாடுகளில் உள்ள பார்ப்பனர்கள் உள்ளிட்ட வேறெந்த நாட்டினருக்கும் சமற்கிருதம், தாய்மொழி என்ற அடிப்படைத் தகுதியே அற்ற மொழி என்றுதான் நம்பப் பட்டு வருகின்றது. இருப்பினும் எவரோ அதைத்தன் தாய்மொழி என்று சொல்லிக் கொண்டாலும் சரி, வெறும் பத்தாயிரம் இருபதாயிரம் பேர் மட்டும் பேசும் மொழி என இந்திய ஒன்றிய மக்கள் தொகைக் கணக் கெடுப்பு புள்ளிவிவரங்களிலிருந்து காணலாம்.

ஆனால் தாய்நாடற்ற, தமக்கெனத் தாய்மொழி யற்ற இந்திய ஒன்றியத்திலுள்ள வெறும் 4-5 விழுக்காடு அளவிலுள்ள பார்ப்பனச் சனாதனக் கூட்டம் ஒன்றிய அரசு ஆட்சியைப் பிடித்துக் கொண்டு நாட்டிலுள்ள 137 கோடி மக்களுக்கும் மேலானவர்கள் யாவருக்கும் தெரியாத, புரியாத சமற்கிருத மொழி எண்ணை நாட்டின் பணத்தாள்களில் பதித்துவிடச் செய்துள்ளனரே, ஏன்? எதற்கு, யாருக்காக? புரியவே இல்லை.

வேறென்ன; இந்தக் கூட்டத்தின் மொழிவெறி என்று சொல்வதன்றி வேறென்னவென்று சொல்லமுடியும். எதிர்வினை ஏதுமில்லாதே நட்புக்கு வந்துவிட்டதே. ஆனால் உலகில் பத்துக்கோடி அளவில் உள்ள மக்களின் தாய்மொழியாம் தமிழ்ச் செம்மொழியின்

உண்மையான இலக்கிய, இலக்கணச் சிறப்பையும் வேர்ச் சொற்கள் பல ஆயிரங்கள் கொண்டு உலகி லுள்ள பிற மொழிகளையெல்லாம் மிஞ்சி நிற்கின்ற தமிழ் மொழியின் மேன்மையைப் பற்றிச் சொன்னால் விவரித்தால் இங்குள்ள பார்ப்பனர் கூட்டம் மொழி வெறி என்று வெற்றுக் கூச்சல் போலத் தொடங்கி விடுகிறது. அடிவருடிகள் சிலர் இதற்குத் துணை போகின் றனர் என்பதுதான் விளங்கா வியப்பாயிருக்கின்றது.

ஆனால் தேசியக் கல்விக் கொள்கை வரைவில் சமற்கிருத மொழியின் சிறப்பு விதந்து குறிப்பிடப்படுவ துடன் சமற்கிருத மொழி என்ற சொற்கள் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் செத்த இந்தச் செம்மொழிக்கு ஒன்றியத்தில் பலப்பல பல்கலைக்கழகங்கள், பலப்பல ஆயிரங் கோடிகள் பன்னெடுங்காலமாக ஒதுக்கீடு செய்து செலவிடப்பட்டு வருகிறது.

சரி, ஆட்சி அதிகாரங்கள் இந்தப் பார்ப்பனக் கூட்டத்தின் கையில் குவிக்கப்பட்டுவிட்டது. சமற்கிருதம் செம்மொழிதான்; ஆனால் அந்தச் செத்த மொழியை உயிருடன் வைத்திட முனைவது சரிதான். ஆனால் அது மக்கள் மொழியாக அதன் 2000 ஆண்டு வரலாற்றில் இருந்திடக்கூடாது என இந்தப் பார்ப்பனக் கூட்டம் திட்டமிட்டுச் செயல்பட்டுவிட்டு இப்போது இம் மொழி உலா வரவேண்டுமென்ற வெற்று வேட்கையில் காலமெல்லாம் மக்கள் மொழியாம் தமிழ்ச் செம்மொழி யையும் பிற உயிருள்ள மக்கள் மொழிகளான அரச மைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள 22 மொழிகளை யும் செழிப்பான மொழிகாளக வளர்த்திட போதுமான நிதி ஒதுக்கீடு செய்திட மறுத்து இந்திய ஒன்றிய அரசுகள் வஞ்சகம் செய்துவிட்டு சமற்கிருதத்திற்கு பலப் பல நூறு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து செல வழித்து வீணடித்து வருவது பார்ப்பனர் உள்ளிட்ட 137 கோடி ஒன்றிய மக்களுக்கும் இழைக்கும் வன்கொடுமைச் செயலாகும். இந்தச் சங்கிகள் இந்த மொழி வளர்ச்சிக் கென்று செலவிட்டு மக்கள் நலன் சார்ந்த என்ன பயன் பெற்றனர் என்பது பெரும் வினா? சமற்கிருதப் பல்கலைக் கழகங்கள் பலவற்றை அமைத்துக் கொண்டே வந்து நாட்டிலுள்ள சிறு கூட்டம் பல ஆயிரம் கோடி நிதியைக் கொள்ளையிட்டுக் கொழுத்து வருகின்றனர் என்பதன்றி வேறென்னவாக இருக்கமுடியும்.

ஒன்றை இந்தக் கூட்டம் புரிந்து கொள்ள வேண்டும். உலக மக்கள் மொழியாகக் கருதப்படும் ஆங்கிலத்தை ஆங்கிலேயர்கள் 150 ஆண்டுகளுக்கும் மேல் ஆட்சி மொழியாகவும் கல்வியில் பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும் கொண்டிருந்தும் நாடு விடுதலை அடைந்தும் இன்னும் தொடருகின்ற போதிலும் ஒன்றி யத்தில் 10 விழுக்காட்டுக்குள்ளான மக்களுக்கான மொழி யாகத்தான் மாறியுள்ளது என்பதுதான் உண்மை. ஆனால் சென்ற 2000 ஆண்டுக்கும் மேலான எந்தக் காலத்திலும் மக்கள் மொழியாக இல்லாதவாறு சமற்கிருத மொழியைப் பார்த்துக் கொண்ட இந்தப் பார்ப்பனக் கூட்டம் சில காலமாகக் கல்வியில் பாடமொழியாக ஆக்கி மக்கள் வாழ்க்கைக்கு ஒவ்வாத, எவ்விதத்திலும் பயனில்லாத இந்த மொழியைத் தேசியக் கல்விக் கொள்கையில் உயர்த்திப் பிடிப்பதில் ஏதோ உள் நோக்கம் இருப்பதாகத் தெளிவாகத் தெரிவதுடன் பிற இந்திய மொழிகள் புறக்கணிக்கப்படுவது கண்கூடு.

73 ஆண்டைய விடுதலை பெற்ற இந்திய ஒன்றியத்தில் நாட்டுக்கே உயிரான தேசியக் கல்விக் கொள்கையாக இருக்க வேண்டிய வரைவை ஆங்கிலம், இந்தி தவிர்த்த மாநிலத் தேசங்களின் எந்த மொழி யிலும் மக்களுக்குத்தர முன்வராமல் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டது, இந்த ஒன்றிய அரசின் கயமைத் தனத்தைத்தான் காட்டுகின்றது. இதுபோன்று நாடு தழுவிய கொள்கை ஆவணங்கள், சட்டங்கள் யாவும் வெளியிடப்படும் போது அட்டவணையிலுள்ள 22 மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படும் வகையில் ஒவ்வொரு மொழிக்குமான மொழிபெயர்ப்புக்குழு உடனடியாக அமைக்கப்பட ஆவன செய்யாத கையா லாகாத அரசு ஒன்றிய மக்கள் அனைவருக்குமான அரசாக எப்படி இருக்க முடியும்? உண்மையில் மக்களுக்கு எதிரான அரசு என்றுதான் சொல்ல முடியும்.

137 கோடி அளவுக்கு மிகப்பெரும் மக்கள் தொகை கொண்ட இந்திய ஒன்றியம் பல்வேறு இன, மொழி, பண்பாடுகளைக் கொண்ட வெவ்வேறு வகைப்பட்ட மக்களைக் கொண்டதாகும். இந்த ஒன்றியத்தின் பெருமை இதன் பன்முகத் தன்மைதான் உலகே பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்த இந்திய ஒன்றியமும் அய்க்கிய அரசுகள் (United Kingdom - UK), கனடா (Canada), அய்ரோப்பிய ஒன்றியம், சுபெயின் (Spain), சுவிட்சர் லாந்து போன்ற பல நாட்டு மக்கள் பல்வேறு மொழி யைத் தாய்மொழியாகக் கொண்டு அவரவர் தாய் மொழி பாதுகாக்கப்பட்டு இணைத்த ஒரே நாடாக இணக்கமாக இருந்து வருகின்றன. இவையெல்லாவற் றையும்விட பலதரப்பட்ட எதிர்மறைத் தன்மையிலான வெவ்வேறு பண்பாடுகளைப் பின்பற்றி தத்தம் மொழி யையும் இன நலங்களையும் பாதுகாத்து காப்பாற்றிக் கொண்டு வரவேண்டும் என மக்கள் ஒன்றிணைத்து இந்திய ஒன்றிய நாடாக உள்ளனர். இதற்கு எதிராக ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே வரி, ஒரே பண்பாடு கொண்டதாக இந்திய ஒன்றியம் மாற்றப்படுவதற்கு முனையும் பார்ப்பன, சனாதன இந்துத்துவ இந்து ராட்டிரிய சுயம் சேவக்கின் அடிவருடியாக உள்ள பாரதிய சனதாக் கட்சி அரசு அடிப்படையில் ஒன்றை மறந்துதான் செயல்படுகிறது.

வெவ்வேறான மொழிகளையும் பண்பாட்டையும் கொண்ட மக்களின் ஒற்றுமை என்பது வேறு, ஓர்மைப் படுத்துவது என்பது முற்றிலும் ஒற்றுமைக்கு எதிரானது. ஒற்றுமை பேணப்பட வேண்டும்; காப்பாற்றப்பட வேண்டுமென்பது முதன்மை. இதை மனதில் கொண்டு

தேசியக் கல்விக் கொள்கை அனைத்துத் தேசிய இன, மொழி, பண்பாடுகளைக் கொண்ட மக்களின் அவரவர் சிறப்புத் தன்மை பாதுகாக்கப்படுவதுடனான கல்விக் கொள்கையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

**அதற்கான தீர்வுகள் :**

* அந்தந்த மாநிலங்கள் தங்களுக்கேற்ற கல்விக் கொள்கையை வகுத்தெடுத்துக் கொள்ளும் வகையில் அரசமைப்புச் சட்ட ஒத்திசைவுப் பட்டியலிலிருந்து கல்வி நீக்கப்பட்டு மாநிலப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.
* எந்த வடிவத்திலும் எந்த மொழியும் பிற மொழி மக்கள் மீது திணிக்கப்படாதவாறு ஒன்றிய அரசு இருமொழிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.
* சமற்கிருதம், இந்தி மொழிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது போன்று அனைத்து இந்திய மொழிகளுக்கும் அம்மொழி பேசும் மக்கள் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் அம்மொழிகள் வளர்ச்சி பெற, மேம்பட ஏதுவாக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
* அனைத்து மாநிலங்களும் தாய்மொழிக் கல்வியை மட்டும் பின்பற்றப்பட வேண்டுமென கட்டாயப் படுத்த வேண்டும்.
* குறிப்பாக உயர்கல்விக்கே பெருமளவு கல்வி நிதி ஒதுக்கப்படுவது எவ்வகையிலும் அடித்தட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படைக் கல்வி உரிமை பறிக்கப்படுவதாக அமைகிறது. கல்வி என்பது அனைத்து மக்களுக்குமானது என்ற உணர்வுடன் பெரும் அளவிலான நிதியைத் தொடக்க, நடுநிலைக் கல்விக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும்.
* இளம் பள்ளிப்பருவ மாணவர்கள் தேர்வு என்ற மன அழுத்தத்திற்கு ஆளாகக்கூடாது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு 3, 5, 8ஆம் வகுப்புகளுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள பொதுத் தேர்வுகள் கைவிடப்பட வேண்டும்.
* இது பள்ளிக் கல்வித் தரம் உயருவதற்கானதல்ல என்பதால் தொடக்கக் கல்விச் சூழலை மேம் படுத்தியும், ஆசிரியர்கள் கற்பித்தல் திறனையும் மேம்படுத்த வேண்டும்.
* பள்ளிப் படிப்புக் காலத்தில் வாழ்க்கைத் தொழில் கல்வி அளிக்கப்படும் என்று நல்லெண்ணம் கொண்டதுபோல் பசப்பு, பாசாங்கு மொழியில் பேசும் இக்கல்விக் கொள்கை உண்மையில் வெகு மக்களான ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து வரும் மாணவர்களைப் படிப்பிலிருந்து விலக்கி, படிப்பை அவர்களுக்கு மறுப்பதற்கான கெடு உள்நோக்கம் கொண்டது. எனவே வாழ்க்கைத் தொழில்கல்வி என்ற கருத்தியல் கல்விக் கொள்கையிலிருந்து அறவே அகற்றப்பட வேண்டும்.

## வேலூர் புலவர் குமர.தன்னொளியன் இயற்கையானார்!



26.6.2020 அன்று தன் 83ஆம் அகவையில் இயற்கையான தோழர் தன்னொளியன் அவர்களுக்கு வீரவணக்கம்!

வேலூரில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் படைத்தளபதியாக செயல் பட்டவர்.

எப்போதும் திருந்திய தனித்தமிழிலேயே உரையாடும் இயல்பினர். தன்மானக் கொள்கை மறவராக வாழ்ந்தவர். தம் மகன்களின் திருமண விழாக்களை தன்மான முறையில் நிகழ்த்தியவர்.

வடார்க்காடு மாவட்ட-வேலூர் மாவட்டத் தமிழாசிரியர் கழகத் தலைவராகச் சிறந்த முறையில் இயங்கியவர். ஆசிரியர்-அரசு ஊழியர் கூட்டமைப்பில் ஈடுபாட்டுடன் செயல்பட்டவர். தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்த வலியுறுத்தி தமிழ்ச் சான்றோர் பேரவை சார்பில் நடைபெற்ற நூறு தமிழர்கள் சாகும்வரை உண்ணா நிலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர். தமிழீழ ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் வேலூரில் நடைபெற்ற அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்றுச் செயலாற்றியவர்.

சுயம்பிரகாசம் எனத் தன் பெற்றோர் இட்ட பெயரை தன்னொளியன் என நற்றமிழ்ப் பெயராக்கிக் கொண்டவர். தம் மகன்களுக்கு நெடுஞ்சேரன், நெடுஞ்சோழன், நெடுஞ்செழியன் எனப் பெயரிட்டவர், “தம் பெயர்த்தியருக்கு அரும்பு,அருவி, பாவை,பூவை, அன்பரசி, ஆம்பல் எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற செயல்பாடுகளில் மிகவும் ஈடுபாட்டுடன் பங்கேற்பும் பங்களிப்பும் நல்கியவர்.

மா.பெ.பொ.க. பொதுச்செயலாளர்- சிந்தனையாளன் இதழ் ஆசிரியர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள்பால் தனி அன்புடையவர்.

சிறந்த பண்புகள் அமையப்பெற்ற தோழர் தன்னொளியன் அவர்களின் அன்புத் துணைவர் தமிழ்ப் புலவர் கலைவாணி அவர்களுக்கும் அவரின் மகன்கள், மருமகள்கள் மற்றும் பெயர்த்திகள் யாவருக்கும் மனம் கசிந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

**மார்க்சியப்பெரியாரியப்பொதுவுடைமைக் கட்சி**
**புரட்சிக்கவிஞர்கலைஇலக்கியமன்றம்**
வேலூர்

# இறைமறுப்பாளரும் இன்தமிழும்

- பேராசிரியர் **இரா. சோதிவாணன்**

15-3-2020 ஞாயிற்றுக்கிழமை அன்று தினமணியில் 'தமிழ்மணி' பக்கத்தில் வழக்கம்போல் கலாரசிகன் (ஆசிரியர் திரு. கே. வைத்தியநாதன்) எழுதி இருக்கும் வரிகள் வெளிவந்திருக்கின்றன.

தொல்லியல் துறையில் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றிப் பணிநிறைவு பெற்ற திரு. கி. சிறிதரன் எழுதி வெளிவந்திருக்கும் நூல் 'வழிகாட்டும் கல்வெட்டுகள்' என்பதாகும். கலாரசிகன் அந்நூலுக்கு ஆறு பத்திகள் செலவிட்டிருக்கிறார். ஆறாம் பத்தியில் மட்டும்தான் நூல் பற்றிப் பொத்தாம் பொதுவாகச் சில வரிகள் உதிர்த்திருக்கிறார், முதல் அய்ந்து பத்திகளில் இறை மறுப்பாளர். சமய மறுப்பாளர் பற்றியே சாடியிருக்கிறார். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் என்று பலரும் கூறுவர், இவர் வாழைப்பழத்தில் கன்னக்கோலையே ஏற்றியிருக்கிறார். இவர் கூற்றை ஒவ்வொரு சிறு பகுதியாக இங்கே எடுத்துக்காட்டி அவற்றுக்கு விடைகூற விழைகிறேன்.

"தமிழ், தமிழன், தமிழினம் என்று ஒருபுறம் பேசிக்கொண்டு. இன்னொருபுறத்தில் இறை மறுப்பு சமய மறுப்பு என்கிற நிலைப்பாட்டைக் கைக்கொள்வது போன்ற பகுத்தறிவின்மை வேறு எதுவும் இருக்க முடியாது" என்று இவர் முன்னுரை எழுதுகிறார், இது அந்நூலுக்கு முன்னுரை போலவா தெரிகிறது; பூணூலுக்கு முன்னுரை போல் அன்றோ தெரிகிறது.

பகுத்தறிவாளரைப் பகுத்தறிவின்மையர் எனக் கலாரசிகன் கூறிக்கொள்வதில் மனநிறைவு கொள்கிறார் போலும்.

இன்றைக்கு 2500 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய பகுத்தறிவாளர் புத்தரைப் பற்றி அவர் அறிந்திருப்பார். புத்தர் கூறிய பொன்மொழிகளில் கடவுள் பற்றிய கருத்தைக் காணமுடியவில்லை, "நீயே உனக்குத்தலைவன். உன்னையன்றி வேறு யார்தான் உனக்குத் தலைவராகக் கூடும்? ஒருவர் தன்னைத்தானே அடக்கி ஒழுகக் கற்றுக்கொள்வாரானால் அவர் பெறுதற்கரிய தலைவரைப் பெற்றவர் ஆவார். அழுக்குகளில் எல்லாம் அறியாமை என்னும் அழுக்கு மிகக் கொடியது. இது பெரிய குற்றம். இவ்வுலகத்தில் தாயை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. தந்தையை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. துறவிகளை வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. பேறறிஞராகிய வாலறிவரை (ஞானிகளை) வணங்குவது மகிழ்ச்சிக்குரியது. அய்ம்பூதங்களின் சேர்க்கையால் உண்டான பொருள்கள் அழிந்துவிடும்" என்றெல்லாம் புத்தர் பொன்மொழிகள் புகன்றுள்ளார். இன்று உலகில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் தொகையினர் புத்தரைப் போற்றிப் பின்பற்றுகின்றனர்.

19ஆம் நூற்றாண்டில் அயோத்திதாசர் முன்னெடுத்த பவுத்தக் கருத்தியல் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்கான பாதை கட்டமைக்கப்பட்டது. பிற்காலத்தில் அம்பேத்கரின் பவுத்தச் சமயத் தழுவல் பவுத்த சமயத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்தியது.

இருபதாம் நூற்றாண்டில் குமுகாயச் சீர்திருத்தச் சிற்பி-பகுத்தறிவுப் பேராசிரியர் பெரியாரும் புத்தரைப் பின்பற்றச் சொன்னார்.

இவர்கள் இறைமறுப்பாளர்களாகவே இருக்கட்டும். இறைப் பற்றாளர்களும் பகுத்தறிவாளர்களாகவே இருந்திருக்கிறார்கள். சிவப்பற்றுக்கொண்ட சித்தர்கள் பகுத்தறிவைப் புகட்டி இருக்கிறார்கள். நடமாடும் மனிதர்க்கு ஒன்று ஈந்தால் அது படமாடும் கோவிலுக்குச்சென்று சேரும் என்று திருமூலர் கூறுகிறார். இதையே அறிஞர் அண்ணா. 'ஏழையின் சிரிப்பில் இறைவன் காண்போம்' என்றார். சிவ வாக்கியர் புரட்சியான கருத்துக்களைக் கூறிச் சென்றுள்ளார். "வேதம் ஓதுவோர் திருவடி ஞானம் பெற்றதுண்டோ? கோயில் எது? குளம் எது? கண்ட இடமெல்லாம் கும்பித்திரியும் மூடர்களே! கோயில் உங்கள் மனத்துக்குள் இருக்கிறது. அது அழிவதுமில்லை. அந்தக்குளம் வற்றுவதும் இல்லை. இறந்தவர்கள் பிறப்பதில்லை. உள்ளத்தின் அழுக்கை உதறாவிடில் உங்களது மவுனமும் ஞானமும் யோகமும் எதற்கு உதவும்? நீங்கள் காட்டில் சென்று தவம் இயற்றினாலும் உள்ளத்தின் அழுக்குப் போகுமா?

நட்ட கல்லைத் தெய்வம் என்று
நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று
சொல்லும் மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ?
நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ?"

என்றெல்லாம் சிவ வாக்கியர் அறிவுக்கு ஏற்ற புரட்சிக் கருத்துகளைக் கூறியுள்ளார். பெரியார் தமக்கே உரிய அதிரடி முறையில் சொல்லியுள்ளதைப் பாருங்கள். "பெண்களே! கற்சிலையில் கடவுள் காட்சி கண்டீர்களா? கைத்தடியால் அடித்துப் பாருங்கள். அதனால் அவர் நொந்து அழுகிறாரா? அல்லது சினந்து எழுந்து வந்து உங்கள் முன் நிற்கிறாரா? ஒன்றும் நிகழாது. அது கற்சிலை

என்று உணருங்கள்'' என்று பெண்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறார்.

பெரியாரின் பகுத்தறிவுப் படைவீட்டில் மறவராக விளங்கிய பாவேந்தர் பாரதிதாசன். தமிழ், தமிழன், தமிழினம் என்று முழங்கியதில் தவறென்ன உள்ளது? 'தமிழியக்கம்' என்ற தமிழ்க்கொள்கை முழக்கமுரசு நூலாகப் படைத்து இறை மறுப்பாளர்க்கும் தமிழ், உயிர் என்று காட்டினார். நாட்டில் உள்ள துறைகள் தோறும் தமிழ் பொங்கிப் பெருக வேண்டும் என்று உணர்வு ஊட்டினார். 'கோயிலார்' என்ற தலைப்பில் அவர் பாடியுள்ளதைக் கேளுங்கள்.

''மடிகட்டிக் கோயிலிலே மேலுடையை
இடுப்பினிலே வரிந்து கட்டிப்
பொடிகட்டி இல்லாது பூசியிரு கைகட்டிப்
பார்ப்பா னுக்குப்
படிகட்டித் தமிழரெனப் படிக்கட்டின் கீழ்நின்று
தமிழ் மானத்தை
வடிகட்டி அவன் வடசொல் மண்ணாங்கட்
டிக்குவைப்பீர்
'மந்த்ரம்' என்றே''

என்ற பாவேந்தரின் பாடலில் தமிழ், தமிழன், தமிழினம் என்ற நெஞ்சத்துடிப்பு தெரியவில்லையா?

மேலும் பாவேந்தர் கோயிலிலும் 'தமிழ்' ஒலிக்க வேண்டும் என்று விழைகிறார்; தமிழுக்குத் தலைமை இடம் வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதனால்தான்

''சொற்கோவின் நற்போற்றித் திருஅகவல்
செந்தமிழில் இருக்கும் போது
கற்கோயில் உட்புறத்தில் கால்வைத்த தெவ்வாறு?
சகத்ர நாமம்?
தெற்கோதும் தேவாரம் திருவாய்நன் மொழியான
தேனிருக்கச்
செக்காடும் இரைச்சலென வேத பாராயணமேன்
திருக்கோயில்பால்''

என்று வினாக்கள் தொடுக்கிறார்.

காளியை. கண்ணனை. பராசக்தியை வழிபடும் பாரதியார்கூட,

''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் – பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?
மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்! – எத
னூடும் நின்றோங்கும் அறிவொன்றே
தெய்வமென்றோதி யறியீரோ?''

என்று தன் உள்ளுணர்வில் பட்ட அறிவொளியைத் தெய்வமென்று பாடுகிறார். தனியொருவனுக்கு உண விலை எனில் இச்சகத்தினை அழித்திடுவோம் என்று வெகுண்டு பாடும் பாரதியார், ''அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்... அன்ன யாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' என்று கனிந்து அறிவுப் புரட்சி செய்கிறார்.

அடுத்து, கலாரசிகன், சமய இலக்கியங்கள் இல்லாமல் தமிழ் இல்லை என்று கூறுகிறார். சங்க இலக்கியங்கள் எனப் பெருமையாகக் கூறப்படும் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சமய இலக்கியங்களா? அவற்றில் தமிழ், தமிழினத்தின் பண்பாடு, நாகரிகம் மலர்ந்து மணங்கமழவில்லையா?

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்த, புலனழுக்கற்ற அந்தணாளன் ஆகிய கபிலர், குறிஞ்சித் திணை ஒழுக்கமாகிய தமிழ்க் காதலைக் 'குறிஞ்சிப் பாட்டு' என்றுதானே பாடிக்காட்டினார்.

தொல்காப்பியர்கூட அகத்திணை இயலில், முதற் பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றை முறை சிறந்தனவே என்கிறார். முதற்பொருளில் நிலமும் பொழுதும் என்ற இரண்டின் தன்மை கூறப் படுகிறது. கருப்பொருள் பட்டியலில் 'தெய்வம்' ஒன்றாகச் சொல்லப்படுகிறது.

திருமுருகாற்றுப்படை - முருகனின் அறுபடை வீடுகள் பற்றி அழகிய தமிழில் நக்கீரர் பாடியுள்ளார். எட்டுத் தொகையில் ஒன்றான பரிபாடலில் 22 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. திருமால், செவ்வேள், வையை ஆறு பற்றிச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. பாட்டு எழுதியவர் ஒரு புலவர். அப்பாட்டுக்கு இசை அமைத்தவர் மற்றொரு வல்லுநர். தமிழும் தமிழி சையும் கொஞ்சிப் பண்பாடுகின்றன.

சமய இலக்கியங்கள் இல்லாமல் தமிழ் இல்லை என்பது ஒரு மயக்கக் கூற்று. அவ்வாறே சமய இலக் கியங்கள் மட்டுமே தமிழாகிவிடாது என்பதும் மெய்க் கூற்று. தமிழ் நாகரிகத்தின் கட்டடக் கலைக்குச் சான் றாகக் கோயில்கள் விளங்குகின்றன என்று கலாரசிகன் கூறுகிறார். அதை யாரும் மறுக்க மாட்டார்கள். அதற்கு முன்னதாகக் ''கோ இல்'' என்பது அரசன் வாழும் இல் லத்தைக் குறித்தது என்கிறது ஆய்வுக் கூற்று. அரசன் இல்லம் (அரண்மனை) பற்றி நக்கீரர் நெடுநல்வாடை யில் அழகுற அமைத்துக் காட்டியுள்ளார். மனைவகுத்த முறை, மதில், வாயில், நிலை, கதவு, அரண்மனை முற்றம், கட்டுக்கள், கருவறை ஆகிய கோ இல்லத்தின் அமைப்பு முறையை நிரல்பட நேர்த்தியாகச் சொல்லி இருக்கிறார்.

கல்லணை கூட எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தமிழனின் கட்டுமான அறிவாற்றலைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. கோயில் கட்டடக்கலை மட்டும் தமிழனின் முழு வாழ்வுக்கலை ஆகிவிடமுடியாது. நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், மேடாக (மலையாக) இருந்தாலும் பள்ளத்தாக்காக இருந்தாலும்,


அங்கே வாழ்கின்ற ஆடவர் நல்லவராக இருப்பின் அது நல்ல உறைவிடமாகத் திகழும். கோயில் நகரமாகவே இருந்தாலும், அங்கே வாழும் மக்கள், நல்ல மன முடையவர்களாக இல்லையெனில் அக்கோயில்களால் என்ன பயன் உண்டாகும்? ஆறுகாலப் பூசையிலும் ஒருவன் கடவுளையே நினைத்து நெஞ்சுருகிக் கொண்டி ருந்தால் அவன் வாழ்க்கையில் முன்னேறிவிடுவானா? அவன் வாழ்க்கையை, உழைப்பாலும், முயற்சியாலும், உண்மையாலும் தானே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஊழ்வினை, பரிகாரம், கிரகப் பலன் என் றெல்லாம் மனிதனை அச்சுறுத்தி வைப்பதற்கா கோயில் கள், சமயங்கள் வேண்டும்? பெரியார் இவற்றை எல்லாம் பகுத்தறிந்து மனிதனாக வாழ்க என்று கூறினால் அவரைச் சாடுவதற்கு நெஞ்சம் துணிகிறதா?

"இந்து சமயப் புறக்கணிப்பு என்பது ஒரு வகையில் தமிழனின் அடையாள அழிப்பு என்றுதான் கூற வேண்டும்" எனக் கலாரசிகன் அலைமோதுகிறார். தமிழனின் அடையாளம் இந்து சமயமா? இன்று கீழடி யின் அகழ்வாராய்ச்சி தமிழனின் நகர நாகரிக வாழ்க்கை அடையாளத்தைக் கி.மு.வுக்கே இட்டுச் சென்று காட்டு கிறதை எல்லோரும் அறிவார்கள்.

கலாரசிகன் 'வழிகாட்டும் கல்வெட்டுகள்' நூலைப் பக்தர்கள் படிக்கிறார்களோ இல்லையோ, பகுத்தறிவு வாதி பேசும், தமிழை நேசிக்கும் இறை மறுப்பாளர்கள் கட்டாயம் படிக்க வேண்டும் என்று பரிந்துரைத்து முடிவுரை எழுதி இருக்கிறார். கலாரசிகனுக்குப் பகுத்தறி வாளர் - தன் மதிப்புக்காரர் - இறை மறுப்பாளர் மீது ஏனிந்த எரிவுப் பாய்ச்சல் என்று எனக்கு விளங்க வில்லை. வழிகாட்டும் கல்வெட்டுகள் என்னும் நூலின் சிறப்புகளைக் கோடிட்டுக் காட்டுவதை விட்டுவிட்டு, இறை மறுப்பாளரை முக்காடு போடாமலே வெளிப்படை யாகவே 'வேக்காடு' காட்டி நோக்காட்டு அனுப்பியிருப்பது கலாரசிகனின் - கலைச்சுவைஞனின் எழுத்து அறமா?

அவருக்குப் பெரியார் மொழியிலேயே விடைகூறி என் கட்டுரையை முடிக்கிறேன், "நமது தோழர் சி.கே. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ. அவர்கள் அரைகுறை சாத்திரஞானம் கூடாது" என்னும் கட்டுரை மூலம் சுய மரியாதைக்காரர்களை தாக்க நினைத்து எழுதியவற்றை ஆராயும் தோறும் அவர் விடயத்தில் 'மணற்சோற்றில் கல்லாராய்வது' போன்ற பாமர விடயங்களே காணப்படு மாயின் இவரது ஆங்கில பி.ஏ. பட்டத்துக்கும், தமிழ்ப் புலமைக்கும் சமயப் பற்றுக்கும், சாத்திர ஞானத்துக்கும் என்ன மதிப்பேற்படும் என்பது நமக்கு விளங்க வில்லை. இனிமேலாவது நமது இயக்கத்தவர்களை நமது முதலியாரவர்கள் தோழமை கொண்டு அவர் களிடமிருக்கும் உயர்ந்த தன்மைகளாகிற தன்னலங் கருதாமை, பிறர் உழைப்பில் வாழாமை மக்கள் நலத் துக்காகவே உழைத்தல் முதலியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

## திருவல்லிக்கேணி பெரியார் பற்றாளர் தி.மு.க.செயல்வீரர் ஏ.ஜே.ஜெகதீசன் மறைந்தார்



பழைய வடஆர்க்காடு மாவட்டம் ஆர்க்காடு நகரில் கண்ணப்பன்-தேசோவதி இணையர்க்கு மகனாக 11.03.1930 அன்று ஏ.ஜே.ஜெகதீசன் பிறந்தார். இளம் வயது முதலே ஆர்க்காடு நகரத் திராவிடர் கழகத்தில் நகரச் செயலாளராகப் பணியாற்றினார். 1949இல் தி.மு.க.வில் இணைந்தார்.

இடஒதுக்கிட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றம் 1950இல் தீர்ப்புக் கூறியபோது, இடஒதுக்கீட்டுக்கு எதிரான இந்திய அரசமைப்புச் சட்டம் ஒழிக அதைத் திருத்து என்ற கோரிக்கைப் போராட்டத்தில் கலந்து கொண்டார்.

1996 முதல் 2006 வரை பத்து ஆண்டுகள் சென்னை மாநகர மன்ற உறுப்பினராகச் செயல் பட்டார். 2001இல் கலைஞர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து மறியல் செய்து சிறை சென்றார். சிந்தனை யாளன் உள்ளிட்ட இயக்க இதழ்களைத் தவறாமல் வாங்கி படிக்கும் பழக்கமுள்ளவர்.

வயது மூப்பின் காரணமாக 14.08.2020 மாலையில் மறைவுற்றார். அன்னாருக்கு இராணி என்ற துணைவியும், இளஞ்செழியன் என்ற மகனும் இரண்டு மகள்களும் 6 பெயரப் பிள்ளைகளும் உள்ளனர். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தி னருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். 15.02.2020 காலை மா.பெ.பொ.க. சார்பில் கலச. இராமலிங்கம், வாலாசா வல்லவன் இருவரும் சென்று நேரில் அஞ்சலி செலுத்தினர்.

குலக்கல்விக்கு எதிராக முதலமைச்சர் இராசாசி வீட்டின் முன் என்.எசு.இளங்கோ தலைமையில் நடைபெற்ற மறியல் போரில் கலந்துகொண்டு சிறை சென்றார். நேருவுக்கு எதிராக அண்ணா சாலையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு காவலர் தாக்குதலால் கால் எலும்பு முறிந்தது.

1963, 1965, 1986 இந்தி எதிர்ப்புப் போராட் டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் எரி சாராய ஊழலைக் கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு மூன்று மாதம் சிறை சென்றார்.

செய்தி : **வாலாசா வல்லவன்**

# கொடிய கொரானா நோய் சுட்டும் பாடங்கள்

- குட்டுவன்

உலகளவில் கொரானா நோய்த் தொற்று மானுடத்தை உலுக்கி வருகிறது. சமூகப் பொருளாதாரத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றி வளர்ந்த நாடுகள் குறைந்த வளர்ச்சி யைக் காணுகிற வளர்கின்ற நாடுகள் என்ற வேறுபாடுகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. வளர்ந்த நாடுகள் வளர்கின்ற நாடுகளுக்குப் போதிய நிதி தொழில் நுட்ப ஆதாரங்களை வழங்க வேண்டும் என 2000 புத்தாண்டு குறிக்கோள்களாக அறிவிக்கப்பட்டன. உலகில் உள்ள நாடுகள் இந்த அறிவிப்பை மதித்து ஏற்றுக் கொண்டு வளர்கின்ற நாடுகளுக்கு நிதி பல தொழில்நுட்ப வசதிகளை வழங்க வேண்டும் என வலியுறுத் தப்பட்டது.

அரசியல் ரீதியாக உலகில் ஐந்து நாடுகள் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் பாதுகாப்பு அவையில் இடம் பெற்றுள்ளன. இந்த நாடுகள் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தனித்த முத்திரையோடு அடையாளத்தோடு ஆடிய ஆட்டங்கள் எத்தனை. பாதுகாப்பு அவையில் இடம் பெற்ற அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு, சீனா நாடுகளில்தான் நிதி வளங்களும் தொழில் நுட்பத் திறன்களும் அதிக அளவிற்கு இராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளும் இருக்கின்றன. இந்த நாடுகளை ஏகாதிபத்திய நாடுகள் எனப் பல அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மேற்கூறிய ஐந்து நாடுகள்தான் உலக நாடுகளுக்கு இராணுவத் தளவாடங்களை ஏற்றுமதி செய்கின்றன. எனவேதான் நோபல் பரிசுப் பெற்ற அமெர்தியா சென் போன்றவர்கள் இந்த நாடுகளை மரண வணிகர்கள் (Merchants of Death) எனத் தனது நூலில் (Argumentative Indian) மேற்கோள் காட்டியுள்ளார். மேற்குறிப்பிட்ட மரண வணிகர்களாகச் செயல்படுகிற இந்த நாடுகளையும் கொடிய கொரானா நோய்த் தாக்கி அந்நாடுகளை மரண பயத்தில் வைத்துள்ளது என்பது இயற்கையின் விளையாட்டோ என்று எண்ணத் தோன்றுகிறது. சீனாவில்தான் இந்த நோய்த் தொற்று தொடங்கியது. உலகளவில் ஆகஸ்ட் 13ஆம் நாள் புள்ளிவிவரப்படி இரண்டு கோடியே 17 இலட்சம் மக்களைத் தாக்கியுள்ளது. 7 இலட்சத்து 30 ஆயிரம் மக்கள் மடிந்துள்ளனர். இத்தகைய புதிய தாக்குதல் ஒரு நோய்த் தொற்றால் ஏற்படும் என 2020ஆம் ஆண்டு தொடக்கத்தில் யாரும் நினைத்துப் பார்க்கவில்லை. இந்த நோய்த் தொற்றுக்கு அஞ்சி உலகளவில் இயங்கி வந்த பல பெருந்தொழில்கள் நிறுத்தப்பட்டன. அனைத்துப் போக்குவரத்துகளும் பல நாடுகளில் முடக்கப்பட்டன. இதன் விளைவாக பூமியிலிருந்து வெளிப்படும் கரியமிலவாயு வானத்து எல்லையைத் தாக்கவில்லை. இதன் காரணமாக நான்கு மாதங்களிலேயே சுற்றுச்சூழலின் பாதுகாப்பு பெருமளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுவாசிக்கும் காற்றில் மாசு இல்லை. நீரில் மாசு கலக்கவில்லை. நிலத்தில் நோய்களை உருவாக்கும் கழிவுகள் கொட்டப்படுவது நின்றுள்ளது. எனவே கொரானா நோய்த் தொற்று சொல்லும் முதல் பாடம் என்ன?

வெறும் வளர்ச்சி வளர்ச்சி எனக் கூக்குரலிட்டுக் கொண்டே இயற்கை வளங்களை நீர் ஆதாரங்களை அழிக்கின்ற போக்கினை உலகளவில் தடுக்க வேண்டும் என்ற பாடத்தை கொரானா கற்பித்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக வளர்ந்த நாடுகள் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அமெரிக்கா முற்றிலும் புறந்தள்ளி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இன்று வரை கையொப்பமிடவில்லை. உலகிலேயே கொரானா நோய்த் தொற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில்தான் அதிகளவில் உள்ளது.

அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் டிரம்ப் இதை முற்றிலும் உணராமல் ஓர் அரசியல் கோமாளி போலச் செயல்படுகிறார். மரண எண்ணிக்கையில் உலகளவில் மூன்றாம் இடத்தில் இருக்கின்ற இந்தியாவிலும் அரசியல் கோமாளித்தனத்திற்கு அளவே இல்லை. சான்றாக கொரானா எனும் கொடிய நோய் வழங்கிவரும் பாடத்தை உணராமல் 2020 சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தை மோடி அரசு தான்தோன்றித்தனமாக அறிவித்துள்ளது.

எவ்விதத் தடையுமின்றி முதலாளித்துவ பன்னாட்டு உள்நாட்டு பெரு நிறுவனங்கள் இயற்கை வளங்களைத் தொழில் வளர்ச்சி எனும் போர்வையில் சூறையாட இச்சட்டம் வழிவகுக்கிறது. அமெரிக்காவிலே பல மாநிலங்கள் குடியரசுத் தலைவர் டிரம்பினுடைய பல அறிவிப்புகளை ஏற்றுக் கொள்ளவில்லை. மாநிலங்களே தங்களுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்புச் செயல்திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றன. உண்மையான கூட்டாட்சி இயலைப் பின்பற்றி வருகின்ற நாடுகளில் ஒன்றல்லவா. நியுயார்க் நகரின் மேயர் டிரம்ப் அவர்களைப் பார்த்து உங்களது அறிவிப்புகள் செயல்பாடுகள் முன்னுக்கு முரணான அறிக்கைகள் இந்த கொரானா நோய்த் தொற்றின் தாக்கத்தை அதிகரிக்கவே வழிவகுத்துவிட்டது எனக் குறிப்பிட்டார். டெக்சாஸ் மாநிலத்தைச் சார்ந்த ஒரு உயர் காவல் அதிகாரி உங்கள் (டிரம்ப்) வாயை மூடிக்கொண்டு அமைதியாக இருங்கள் என்று கூறினார். ஆனால் இந்தியாவில் நடப்பது என்ன? கொரானா நோய்த் தொற்றுக் காலத்திலும் சிறிதளவும் பொறுப்பின்றி பொருளாதாரம் பெருமளவில் சரிவதைக் கண்டு மோடி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இத்தகையப் பின்னணியில் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டு வளர்ச்சி அமைப்பு 2020ஆம் ஆண்டு மானுட மேம்பாட்டு அறிக்கையில் (Human Development Report 2020) இக்காலக்கட்டத்திற்குத் தேவையான செயல்திட்டங்களை அறிவித்துள்ளது. இந்த அறிக்கையில் நாம் இயற்கையோடு கொண்ட உறவைச் சீர் செய்ய வேண்டும். எதிர்கால மக்களினுடைய நலன் கருதி இப்புவியிடம் நல்லுறவைப் பேணுகிற அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.

இப்புவியிலிருந்து வேறுபட்டு மக்களின் எதிர்காலத்தையும் முன்னேற்றத்தையும் பற்றி நினைத்துப் பார்க்க முற்படுவது ஓர் அறிவார்ந்த செயலாக இருக்க முடியாது. நாம் புவியோடு புதைந்து இருக்கிறோம். இதை மறுப்பது எதிர்கால தலைமுறைக்குத் தீமை விளைவிப்பது மட்டுமல்லாமல் ஏற்கெனவே அழிந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்க்கையை அழிவுப் பாதைக்கு எடுத்துச் சென்றுவிடும்.

மானுட மேம்பாட்டு அறிக்கை 2020இல் மூன்று அடிப்படைக் கூறுகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

1. ஏற்கெனவே வறுமை ஒழிப்பு, குடிநீர் வசதி, போதிய சுகாதார வசதி கல்வி மேம்பாடு பெண்கள் நலன் வேலைவாய்ப்பு, கருவுற்ற தாய்மார்களுக்கும் பிறந்த குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து அளித்தல், போன்ற பல்வேறு மானுட மேம்பாட்டுக் குறியீடுகளை 29 உலக மானுட மேம்பாட்டு அறிக்கைகள் எடுத்துக்காட்டியுள்ளன. இந்த முதன்மையான காரணிகளின் அடிப்படையில் உலகில் உள்ள பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாடுகின்றனர். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில்தான் இந்த மக்கள் தொகை எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. தற்போது கொரானா நோய்த் தொற்றால் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைக் கூடப் பெறாமலிருக்கும் இந்த மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சமத்துவக் கண்ணாடி கொண்டு காணுங்கள் என்று உலக நாடுகளுக்கு இவ்வறிக்கை வேண்டுகோள் விடுத்துள்ளது.

2. பொருளாதார வளர்ச்சியையும் பொதுச் சுகாதாரத்தையும் ஒருங்கிணைத்து மக்களின் வாழக்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் எதிர்காலத்தில் உருவாகக் கூடிய அதிர்ச்சிகளை ஓரளவிற்குக் குறைக்க இது வழிவகுக்கும்.

3. கொரானா நோய்த்தொற்று காலத்தில் ஒரு பன்முகத் தன்மையுடன் கூடிய அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். காரணம் இந்நோய் பல நிலைகளில் பல தளங்களில் மக்களைத் தாக்கிக் கொண்டு வருகிறது. ஏற்கெனவே பொருளாதார வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துறை சார்ந்த அணுகுமுறைகளை மாற்றி பொது நிதி ஆதாரத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் சமூகக் கட்டமைப்பையும் உயர்த்துவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

இந்த கொரானா நோய்த் தாக்குதலுக்குப் பிறகு கடந்த நான்கு மாதங்களில் உலகின் 14 நாடுகளில் ஐக்கிய நாடுகள் மன்றத்தால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் மக்கள் தெரிவித்த கருத்துகள் அடிப்படையில்தான் மேற்கூறிய கருத்துருக்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு மானுட மேம்பாட்டு அறிக்கையில் இணைத்துள்ளது. இந்த ஆய்வில் 71 விழுக்காடு மக்கள் சுற்றுச்சூழல் சீரழிவுதான் இந்த நோய்க்கான காரணங்களில் ஒன்றாக எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கொரானா நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு மேற்கூறிய கருத்துருக்களின் அடிப்படையில் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் செயல்படுமா? என்பதே நம்முன் உள்ள முதன்மையான பிரச்சினையாகும். சீனாவைப் போன்றோ மற்ற நாடுகளைப் போன்றோ இந்தியாவின் சமூக பொருளாதார அரசியல் தன்மைகள் முற்றிலும் வேறுபடுகின்றன.

பல்வேறு மொழி பேசுகிற பல்வேறு மத நம்பிக்கைகள் உடைய பல்வேறு பண்பாட்டுப் பின்னணிகளை உடைய பல்வேறு இனங்கள் வாழ்கிற பல நாடுகளின் தொகுப்பாகவே இந்தியப் பெரும் கூட்டமைப்பு உள்ளது. மருத்துவ முறையில்கூட தமிழர்களின் மருத்துவமுறை தனித்த அடையாளங்களோடு அரசு மருத்துவமனைகளில் கொரானா நோய்த்தடுப்பிற்கு உதவியாக உள்ளது. இதைப் பற்றி அறிந்தும் குறுகிய அரசியல் காரணங்களுக்காக ஒரே நாடு ஒரே மொழி ஒரே மதம் என பாசக ஆட்சி கூறி வருகிறது. மோடி அரசு இரண்டாவது முறையாகப் பதவியேற்ற பின் காசுமீர், நாகாலாந்து போன்ற மாநிலங்களின் தனித்த இன மத பண்பாட்டு அடையாளங்களை அழிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மோடி அரசின் நிர்வாகம் ஒரு தோல்வியடைந்த ஆட்சியைத்தான் அடையாளப் படுத்தப்படுகிறது. பொய்கள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. கொரானா நோய்த் தொற்று தாக்கிய பிறகுதான் பொருளாதாரம் வீழ்ந்து விட்டது என்ற பொய்த் தோற்றத்தை அளிக்க முற்படுகின்றனர்.

ரூ.500 ரூ.1000 பணத்தாள் மதிப்பிழப்பு நடவடிக்கைதான் இந்தியப் பொருளாதாரத்தை வீழ்ச்சிப் பாதைக்கு முதலில் எடுத்துச் சென்றது. இரண்டாவதாக சரக்கு சேவை வரி என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட மிகவும் கொடுமையான வரிவிதிப்பு இந்தியாவினுடைய எல்லாத் தொழில்களையும் வணிக அமைப்புகளையும் தேக்க நிலைக்குத் தள்ளிவிட்டது. சிறுகுறு தொழில்கள் முற்றிலுமாக முடங்கிப் போனதால் பல கோடி இளைஞர்கள் கொரானா நோய்த்தொற்று தாக்கத்திற்கு முன்பே வேலை இழந்துவிட்டனர். உலக சுகாதார நிறுவனம் அறிவித்த எச்சரிக்கைகளை ஒன்றிய அரசு கண்டு கொள்ளவே இல்லை. இதன் காரணமாகத்தான் கடந்த நான்கு மாதங்களில் நாளுக்கு நாள் எல்லா மாநிலங்களிலும் இந்த நோய்த் தொற்று பரவி முழுமையான அளவில் பொருளாதாரத்தையும் ஏழை மக்களின் வாழ்நிலையையும் சிதைத்து வருகிறது.

ஏறக்குறைய 30 கோடி அமைப்பு சாராத் தொழிலாளர்கள் தங்கள் தங்கள் மாநிலங்களுக்கு நடந்தும் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்தும் சென்றுள்ளனர். பெரு நகரங்களில் பெரும் தொழில்களில் பணியாற்றிய தொழிலாளர்களும் வேலைகளை இழந்து வருகின்றனர். பெரும் வணிக வளாகங்களில் பணியாற்றிய பல கோடி இளம் வயதினர் வேலைகளை இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் தில்லியில் உட்கார்ந்துகொண்டு தொலைக்காட்சி வழியாக நிர்வாகம் செய்துவிடலாம் என்ற பகற்கனவில் உள்ளார் பிரதமர் மோடி. இந்த நோய்த் தொற்று எப்போது முடியும் எப்போது பள்ளி கல்லூரிகள் தொடங்கும் எப்போது உயர் கல்வி நிறுவனங்கள் இயங்கும் என்பதை யாரும் அறுதியிட்டுக் கூற முடியாது. சுற்றுச்சூழல் மாசு பெருமளவில் கடந்த 4 மாதங்களில் குறைந்து

வருவதால் கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குப் பருவமழை எதிர்பார்த்ததைவிட 46 விழுக்காடு அதிகமாகப் பெய்துள்ளது. பொருளாதாரத்தின் முதன்மைத்துறையான வேளாண் துறையில்தான் உற்பத்தி நடவடிக்கை நடைபெற்று வருகின்றன. வேளாண் தொழில்தான் வயிற்றுக்குச் சோறிடுகிறது. வேலையிழந்து வரும் கோடிக்கணக்கான இளைஞர்களைத் தாங்கி நிற்கிறது.

சீனாவிற்கு இரண்டு முறை நான் பயணம் செய்த போது அரசு நிர்வாகத்தில் அதிகார பரவலாக்கல் முறை இருப்பதை என்னால் உணர முடிந்தது. மாசேதுங் அவர்கள் ஒரு கிராமத்தைத்தான் உற்பத்திக் குழு (Production Team) என்று அறிவித்தார். பல நூற்றுக்கணக்கான மிகச் சிறிய அளவிலான கிராம குழுக்கள் இணைந்ததுதான் கம்யுன் முறை என்று அழைக்கப்பட்டது. இந்த கம்யுன் அமைப்பு ஊரகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தது. இந்த கம்யுன் அமைப்பைச் சுற்றித்தான் பல இலட்சக்கணக்கான சிறுகுறு தொழில்கள் தொடங்கப்பட்டன. சான்றாக கொரானா நோய்த்தொற்று முதன்முதலில் இனம் காணப்பட்ட ஊகான் நகருக்கு இருமுறை பயணம் செய்துள்ளேன். அங்குள்ள நிர்வாக அமைப்பு சுயாட்சித் தன்மையோடு இயங்கி வருவதை நேரில் கண்டேன். இதன் காரணமாகத்தான் நோய்த் தொற்று பெருமளவில் பரவாமல் தடுக்கின்ற முழு அதிகாரங்களையும் அந்த நகர நிர்வாகம் பெற்றிருந்தது என்ற உண்மையைத் தற்போது ஊடகங்கள் வாயிலாக வெளி வருகின்றன.

மாவோவின் அணுகுமுறையிலிருந்து விலகி டெங் அணுகுமுறையை சீனா கடைப்பிடித்த காலத்திலும் பெரும் பாலங்கள் நீண்ட தொடர் வண்டி பாதைகள் பெரும் தொழில் நகரங்கள் உருவாயின என்றாலும் பொதுக் கல்வி பொதுச் சுகாதாரம் போன்ற மக்கள் வாழ்வியலோடு தொடர்புடைய இத்துறைகளுக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறு நகரங்கள் நகரங்கள் மாநில அளவிலான அரசு அமைப்புகளுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டன. மாவோ 1972ஆம் ஆண்டில் அவருடைய நீண்ட கால நண்பரும் புரட்சிக் காலத்தில் அவருடைய கருத்துகளை உலகளவில் ஆங்கில மொழியில் எடுத்துச் சென்ற அமெரிக்கப் பத்திரிக்கையாளர் எட்கர் ஸ்னோவிடம் அமெரிக்கா 50 மாநிலங்களுக்கிடையே தனது செல்வத்தையும் பொறுப்புகளையும் விரிவாக்கி அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு பகிர்ந்து வளர்ந்த முறையை சீனா கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு மத்திய அரசு எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. மாநில உள்ளாட்சி அமைப்புகளை நம்பித்தான் செயல்பட முடியும் என்று மாவோ குறிப்பிட்டார். இக்கருத்தைச் சீனா இன்றளவும் பின்பற்றி வருகிறது என்பதைக் கொரானா நோய்த் தொற்றுப் பரவலைத் தடுத்த தன்மைகளிலிருந்தே அறியலாம்.

இதற்கு மாறாக இந்தியா தனது நிர்வாகத்தை முழு அளவில் ஒற்றையாட்சி முறையாக மாற்றிவிட்டது. இன்று பிரதமர் நரேந்திர மோடி ஒரு சர்வாதிகாரியாகச் செயல்படுகிறார். மோடியின் எதேச்சதிகாரமான நிர்வாக நடவடிக்கைகள் பிரச்சினைகளை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குகின்றன. நன்றாக இயங்கி வருகின்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ்நாடு மருத்துவக் கட்டமைப்பு வசதிகளைச் செம்மைப்படுத்தி வருவதாலும் அரசு மருத்துவமனைகள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நகரங்களிலும் இருப்பதால்தான் இந்த நோய்த் தொற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ்நாட்டிலிருந்து திரட்டப்பட வரி வருமானங்களை குறிப்பாக தமிழ்நாட்டிற்குத் தரப்பட வேண்டிய சரக்கு சேவை வரியின் பங்கை அளிக்காமல் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் முதல்வர் எடப்பாடி பழனிசாமி பிரதமர் கூட்டுகிற இணைய வழிக் கூட்டங்களில் தமிழ்நாட்டிற்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகையையும் கொரானா நோய்த்தொற்றுப் பரவலைத் தடுக்கும் உரிய நிதி ஆதாரத்தையும் பேரிடர் நிதியிலிருந்து கொடுக்க வேண்டிய தொகையையும் தராமல் இருக்கிற நிலையைச் சுட்டி வேண்டுகோள் விடும் காட்சிகளை நாம் தொலைக்காட்சி வாயிலாகக் காண்கிறோம். ஒன்றிய அரசின் அதிகாரக்குவியல் முழுமையாக மாற்றப்பட்டு மாநிலங்களின் உரிமைகள் முழு அளவில் பிரித்துத் தரப்பட்டால்தான் எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை பெறும். இன்றைய கொரானா நோய்த் தொற்று பாதிப்பால் தமிழ்நாட்டின் நிதியாதாரங்களும் நாளுக்கு நாள் சிதைந்து வருவதும் மக்களின் வறுமை நிலை அதிகரித்து வருவதும் பெரும் அறைகூவல்களாக அமைகின்றன. இக்காலக்கட்டத்தில் மானுட மேம்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொரானா நோய்த் தொற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு தனது அதிகாரக் குவிப்பில் நின்று கொண்டு எவ்வித ஆக்கப்புர்வமான திட்டங்களையும் செயல்பாடுகளையும் நடைமுறைப்படுத்த முடியாது.

இக்காலக்கட்டத்திலாவது மாநிலங்களுக்குத் தன்னுரிமை அளிப்பார்களா? அல்லது ஒன்றிய அரசும் வீழ்ந்து மாநில அரசுகளும் அதனுடன் வீழ்ந்து, வருகின்ற பத்தாண்டுகளில் தீர்வு காண முடியாத நிலைக்கு இந்திய நாட்டை தள்ளி விடுவார்களா?


## பத்மாவதி அம்மையார் மறைவு



தோழர் வே.ஆனைமுத்துவின் உற்ற தோழரும் திருச்சி உறையூர் பெரியார் தொண்டருமான கோ.முத்து கிருட்டிணன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் 2020 சூலை 31ஆம் நாள் உறையூரில் மறைந்தார். தாயாரை இழந்து துயரத்திற்கு ஆளாகியுள்ள அவரின் மகன்கள் மு.நரசிம்மன், மு.வெங்கடேசன், மு.சந்தானகிருஷ்ணன் ஆகியோருக்கும் குடும்பத்தாருக்கும் சிந்தனையாளன் ஆசிரியர்குழு ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# சிந்தனையாளர்

# புலவர் பூ. பொய்யாமொழி மறைந்தார்



அரியலூர் மாவட்டம், பொன்பரப்பிக்குடிகாடு இரா.பூவராகன்-முருகாயி அம்மாள் மகனாகத் தோன்றியவர் பூ.பெரியசாமி. அவருடன் பிறந்தவர்கள் பூ.சாமிக் கண்ணு, பூ. ஞானமூர்த்தி, பூ. செல்லம்மாள்.

பெரியசாமி ஆறாம் வகுப்பு வரையில் பெரியசாமி என்றே அழைக்கப்பட்டார். வேலூர் கந்தசாமிக்கவுண்டர் பள்ளியில் சேரும் போது, அவருடைய பெயரை "பொய்யாமொழி" என்று புலவர். வை. பொன்னம்பலனார் மாற்றினார்.

9, 10, 11-ஆம் வகுப்பு வரை திருவரங்கம் உயர் நிலைப் பள்ளியில் படித்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார்.

1953-54-இல் பொன்பரப்பியில் ஆசிரியராகப் பணியேற்றார். 1956-57-இல் விளந்தை ஆண்டி மடத்தில் ஆசிரியராகவும், 1959-66-இல் பக்கத்தில் உள்ள தொட்டியத்தில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.

தொட்டியத்தில் பணியாற்றும் போது, ஆண்டுதோறும் தந்தை பெரியார் அவர்களையும், தோழர் வே. ஆனைமுத்து அவர்களையும் அழைத்து அப்பகுதியில் திருமணங்களையும், பொதுக் கூட்டங்களையும் நடத்தினார்.

தொட்டியம் பணிமுடிந்து மருதூர், உடையார் பாளையம், குவாகம், நல்லாம்பாளையம் ஆகிய இடங்களில் பணியாற்றி, 1989-இல் நல்லாம் பாளையத்தில் பணிஓய்வு பெற்றார்.

செந்துறைப் பகுதியில் பல சீர்திருத்தத் திருமணங்களை புலவர் வை. பொன்னம்பலனார் தலைமையில் நடத்தினார். 1968-இல் மருதூர் பள்ளியில் பணியாற்றிய போது, தந்தை பெரியாரை அழைத்து இலக்கிய மன்ற விழாவை நடத்தினார்.

23.3.1979-இல் புதுடெல்லியில் இடஒதுக்கீடு போரி பேரணியும், மாநாடும் நடத்தினர். அம்மாநாட்டிலும், பேரணியிலும் பொய்யாமொழி கலந்து கொண்டார்.

16.6.1992 அன்று தமிழக அரசை வற்புறுத்தி, இலவச மின்சாரம் கேட்டு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ச.இராமதாசு போராட்டம் நடத்தினார். அப்போராட்டத்தின்போது திராவிடர் கழகத்தின் சார்பில் பொய்யாமொழியும், வன்னியர் சங்கத்தின் சார்பில் பொய்யாமொழியின் மகன் மன்னர்மன்னனும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போராட்டத்தின் போது துணைக் காவல் அதிகாரி பிரேம்குமார் பொய்யாமொழியின் வீட்டைச் சூறையாடி 36 பவுன் நகைகளைக் கொள்ளையடித்து, பொய்யாமொழியைக் கைது செய்து திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

பொய்யாமொழி அவர்கள் தன் 58ஆம் அகவையில் இருந்து உற்றார், உறவினர்களைக் கூட்டித் தன் பிறந்த நாளைக் கொண்டாடினார், தனது 91ஆம் பிறந்த நாளில் இலிங்கத்தடிமேடு ஆதரவற்றோர் பள்ளியில் எல்லோருக்கும் உணவளித்துத் தானும் உண்டார்.

**95-ஆம் பிறந்த நாளைத் தன் வீட்டில் 10.11.2019 அன்று எளிய முறையில் கொண்டாடினார். தன் 95ஆம் அகவையில் 21.4.2020 விடியற்காலை 4.30 மணியளவில் மாரடைப்பால் இயற்கை எய்தினார்.**

அவரது உடல் உற்றார், உறவினர், ஊர்ப் பொது மக்கள் முன்னிலையில் 22.4.2020 அன்று எரிக்கப் பட்டது.

6.5.2020 புதன்கிழமை அன்று பொ.வே. சிதம்பரம், பொய்யாமொழி அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

புலவர் பூ.பொய்யாமொழியை இழந்து துயர் உறும் துணைவியார் மங்கையர்க்கரசி, மக்கள் பொ. அருள்மொழி, பொ. மணிமொழி, பொ. தேன்மொழி, பொ. அன்புமொழி, பொ. மன்னர்மன்னன், பொ. கனிமொழி ஆகியோரில் எஞ்சியோருக்கு மா.பெ.பொ.க. சார்பில் மனங்கனிந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**24-4-2020** **- வே.ஆனைமுத்து**

# மூணாறு மண்ணில் உயிரோடு புதையுண்ட தமிழ்ப் பாட்டாளிகளின் துயரம் தணிக்க

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் பெட்டிமுடியில் சென்ற ஆகஸ்டு 7ஆம் நாள் இரவு பெய்த பெரு மழையினால் மலையிடிந்து பாறைகள் உருண்டு மண் சரிந்ததில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களான 20 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தி அனைவர்க்கும் அதிர்ச்சியளித்தது. மண்ணில் புதையுண்டவர்களில் மூவர் மட்டுமே அதிசயமாகத் தப்பித்து வந்து தகவல் தெரிவித்ததன் பேரில் 16 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.

இந்தத் தொழிலாளர்கள் பல்லாண்டு முன்பு கேரளத்துக்கு வேலை தேடிச்சென்று அங்கேயே குடும்பம் குடும்பமாக வாழ்ந்து வந்தவர்கள். இவர்களின் குடியிருப்புகள் அங்கே தேயிலைத் தோட்டத்திலேயே ராஜமலையை ஒட்டிய மலைச்சரிவுக்குக் கீழே இருந்தன. இவர்களைப் போன்ற ஏராளமானோர் தமிழ்நாட்டின் நெல்லை தூத்துக்குடி விருதுநகர் மாவட்டச் சிற்றூர் களிலிருந்து புலம்பெயர்ந்து கேரளம் சென்றவர்கள். இடுக்கி மாவட்டத் தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களில் 90 விழுக்காட்டுக்கு மேல் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று 11/08 வரை 52 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இனி யாரும் உயிரோடு மீட்கப்படும் வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. மீட்புப் பணிகள் விரைந்து நடைபெற்றி ருந்தால் மேலும் சிலரையாவது உயிரோடு மீட்டிருக்க முடியும். முதலில் மீட்கப்பட்ட 27 உடல்களை உறவினர் கள் மன்றாடிக்கேட்டும் அவர்களிடம் ஒப்படைக்காமல் ஒரே குழிக்குள் புதைத்த கேரள அரசின் செயல் கண்டிக்க த்தக்கது.

இது வரை தமிழக அரசு பெட்டிமுடிப் பெருந்துயரம் குறித்து எவ்வித எதிர்வினையும் ஆற்றவில்லை. தமிழகத்துக்கு வெளியே வாழும் தமிழர்கள் குறித்துத் தமிழக அரசு தனக்குள்ள அறப்பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம். உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்தினர்க்குக் கேரள அரசு போலவே தமிழக அரசும் இழப்பீடு தர வேண்டும் எனக் கோருகிறோம். பெருந்தொற்றுக்கான ஊரடங்கு முடக்கத்தின் போது வெளிநாடுகளிலும் வெளி மாநிலங்களிலும் சிக்கிக் கொண்ட தமிழர்கள்பால் தமிழக அரசு காட்டிய அதே அலட்சியப் போக்குதான் தொடர்கிறது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளும் வாழ்க்கை நிலைமைகளும் எவ்வளவு அவலமாய் உள்ளன எனபதை பெட்டிமடித் துயரம் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. இந்நிலைமைகள் அடியோடு மாற்றியமைக்கப்பட வேண்டும். டாடா போன்ற சுரண்டல் பெருங்குழுமங்களின் கையிலிருக்கும் இந்தத் தோட்டங்களை நாட்டுடைமையாக்கித் தொழிலாளர் கூட்டுறவுகளைக் கொண்டு நடத்த வேண்டும்.

இறுதியாக ஒன்று: இயற்கையின் பெரும் படைப்பு களில் ஒன்றாகிய மலைகளை வாங்குவதும் விற்பதும் குத்தகைக்கு விடுவதும் தாயை விற்பதும் வாங்குவதும் குத்தகைக்கு விடுவதும் போன்ற இழிசெயல்களாகும் என்பதை அரசும் மக்களும் உணர வேண்டும். மாந்தர் இயற்கைக்குச் சொந்தமே தவிர இயற்கை மாந்தர்க்குச் சொந்தமில்லை.

**நம் கோரிக்கைகள்:**

1) மூணாறு பெட்டிமுடி மண்சரிவில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் கேரள அரசு ரூ.20 இலட்சமும் தமிழக அரசு ரூ.15 இலட்சமும் டாடா நிறுவனம் ரூ.15 இலட்சமும், மொத்தம் 50 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும்.
2) கேரளத்தில் காடுகள் அழிப்பினாலும் மக்கள்தொகைப் பெருக்கத்தாலும் பருவமழை மாற்றத்தாலும் அடிக்கடி ஏற்படும் கொடுநேர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளைப் பாதுகாப்பான முறையில் அமைத்துத் தர வேண்டும்.
3) தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிலைமை களும் வீட்டுவசதி உள்ளிட்ட வாழ்க்கை நிலைமை களும் உடனடியாக மேம்படுத்தப்பட வேண்டும். மீண்டும் ஒரு பெட்டிமுடி நிகழாமல் தடுப்பது இந்திய, கேரள அரசுகளின் கடமையாகும்.
4) தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிக் கொண்டு அவர்களது நலனில் எவ்வித அக்கறையும் காட்டாத டாடா போன்ற தனியார் குழுமங்களிட மிருந்து தேயிலைத் தோட்டங்களையும் பிறவகைத் தோட்டங்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும். முதல் நடவடிக்கையாக மூணாறு மண்சரிவு நிகழ்ந்த தேயிலைத் தோட்டத்தை உடனே நாட்டுடைமை யாக்க அவசரச் சட்டம் இயற்ற வேண்டும்.
5) தமிழகத்துக்கு வெளியே உள்ள தமிழர்களின் நலனைக் கவனித்துக் கொள்வதற்கென தமிழக அரசு தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும். அதன் முதல் பணியாக இத்தமிழர்களின் பதிவேடு ஒன்றை உருவாக்க வேண்டும்.
6) தேயிலை, காபி உள்ளிட்ட தோட்டங்களில் பணி யாற்றும் தொழிலாளர்களின் நலவுரிமைகளுக்காக இந்திய அரசும் மாநில அரசுகளும் புதிய சட்டம் இயற்ற வேண்டும்.

**தியாகு,** பொதுச்செயலாளர்
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

# வெறுப்புணர்வுச் சிந்தையுடன் இந்திய ஒன்றியம்

(தலையங்கம் : தி எக்கனாமிசிட் (The Economist Weekly, 2019) இலண்டனிலிருந்து வெளிவரும் உலகளாவிய திங்கள் இதழ்)

## மொழியாக்கம் இரா. பச்சமலை

## (நரேந்திர மோடியும் பா.ச.க.வும் மக்களிடையே பிளவுகள் ஏற்படுத்தி உலகின் மிகப்பெரும் சனநாயகத்தை அழிக்கின்றனர்)

துணைக்கண்டத்திலுள்ள இசுலாம் சமயம் தவிர்த்த அனைத்துச் சமயங்களையும் பின்பற்று வோர்கள் எளிதில் இந்திய ஒன்றியக் குடியுரிமை பெறுவர் எனச் சொல்லி இந்திய ஒன்றிய அரசு சட்டத்தைத் திருத்தி விட்டது. அதேநேரத்தில் நாட்டை ஆளும் பா.ச.க., இந்திய ஒன்றியத்தின் அனைத்து 1.3 பில்லியன் (130 கோடி) குடிமக்களையெல்லாம் கொண்ட ஒரு பதிவேடு தயாரிக்க விரும்புகிறது என்று, அதன் வழி சட்டப்படி யின்றி குடியேறியவர்களைக் குறிவைத்து வேட்டையாடத் திட்டமிட்டுள்ளது. அவை குடியுரிமை பற்றிய வழிமுறை கள்போல் தோன்றுகின்றது. ஆனால் நாட்டில் பெரும் மக்கள் தொகையாகவுள்ள இசுலாமியருள் பெரும்பா லோர் தாங்கள் இந்நாட்டுக் குடிமக்கள் என மெய்ப்பிப் பதற்கான ஆவணங்கள் இல்லாதவர் களாக உள்ள நிலையில், அவர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்படும் கொடுமைக்கு ஆளாக்கப்படுவர்.

இந்தப் பா.ச.க.வின் திட்டம் தவறான கணக்கு என நீங்கள் கருதுவீர்கள். இது பரவலான தொடர் எதிர்ப்பு களை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள், சமயச் சார்பற்ற வர்கள், பெரிதும் அடிமை மனப்பான்மை கொண்ட ஊடகங்கள் கூட சகிப்புப் பண்பும், பன்மைச் சமயச் சமூக நிலமாகவும் உள்ள இந்திய ஒன்றியத்தை வெறி கொண்ட குறுகிய-நாட்டுப் பற்றுக்கொண்ட- இந்து நாடாக மாற்றிட முனைப்புடன் செயல்படும் முதன்மை அமைச்சர் நரேந்திர மோடிக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கிவிட்டனர்.

உண்மையில் இந்தப் பேராசையுடனான சூழ்ச்சி நடவடிக்கை பல பத்தாண்டுக் காலம் திட்டமிட்ட தூண்டு தலாகத் தோன்றுகின்றது.

அயோத்தியிலிருந்த மசூதியை இடித்துவிட்டு அங்கு இந்துக்கடவுளான இராமன் கோவில் கட்டப் போராட் டங்கள் நடத்தி பா.ச.க. தன்னை முதலில் நாட்டின் முக்கியமான நிலைக்கு உயர்த்திக் கொண்டது. இந்தத் தீவிரவாத வன்முறைக் காலிகும்பல் 1992இல் மசூதியை இடித்து நொறுக்கியதன் தொடர்ச்சியாகக் கொலை பாதகமான பல கலவரங்களை நடத்தித் தன் கட்சியை முன்னுக்குத் தள்ளிக் கொண்டு வந்தது. அதே போன்று 2002இல் குசராத்தில் மோடி முதலமைச்சராக இருந்த போது, இசுலாமியர்கள் படுகொலை செய்யப்பட்டு அவர் நாடு முழுமைக்குமான இந்துத் தேசியவாதியாக ஆக்கப்பட்டார்.

அந்தோ! பா.ச.கட்சிக்குக் கிடைத்த தேனொத்த தேர்தல் வெற்றி இந்திய ஒன்றியத்திற்கு அரசியல் நஞ்சானது. இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றான சமயச் சார் பற்ற கோட்பாட்டைக் குலைத்துச் சிதைத்து பல பத்தாண்டுகளுக்குத் தொடரும் வகையில் மிக அண் மையில் திரு. மோடி முன்முயற்சிகள் எடுத்து வருகிறார். அவை நாட்டில் குருதி ஆறு ஓடச் செய்யும்.

நாட்டில் சமயம், தேசிய அடையாளம் என்ற பெயரில் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, மோடியும் பா.ச.க.வும் அரசியல் பயனடையலாம் என்பது துன்ப மான வருத்தத்திற்குரிய உண்மை. இதுபோன்றவை ஒன்றியத்தில் தொடர்ந்து இடையறாது நடைபெறும் மாநில, தேசியத் தேர்தல்களின் பின்னணியில் இந்து தேசியக் கூட்டத்திலுள்ள கட்சியின் தீவிரச் செயல்பாட் டாளர்கள், அவர்களின் கூட்டாளிகளை உரம்பெறச் செய்வதற்கு அத்தேர்தல்கள் அவர்களுக்கு எப்போதும் அரும் வாய்ப்பாக இருக்கலாம். சென்ற ஆண்டுத் தேர்தலில் பெரிய வெற்றி பெற்றதிலிருந்தே பா.ச.க. தடுமாறித் தத்தளித்துக் கொண்டிருந்த, சீர்கேடான நிலையிலிருந்த பொருளாதாரம் போன்ற அருவருப்புத் தருகிற இவர்களின் நடவடிக்கைகள் மீதான மக்கள் கவனத்தை இவர்கள் திசைதிருப்பவும் செய்தார்கள். மிக முக்கியமாக இந்துக்களை ஒழிக்கவும், பாக்கிசுத் தானுக்கு நாட்டைக் காட்டிக்கொடுத்து விற்றிடவும் அய்ந்தாம்படைப் பயங்கரவாதிகளாக இசுலாமியர் எப்போதும் திட்டமிடுவர் என மோடி மறைமுகமாகச் சுட்டிக்கூறி, அதைக் கரிசனத்துடன் ஒரு கணிசமான குறைந்த அளவு இந்திய ஒன்றிய வாக்காளர்களை நம்ப வைக்க முற்படுகிறார். இதுவே அவர் தன் பதவி யில் தொடர்ந்து இருந்து கொள்வதற்குப் போதுமானது. தேர்தலில் ஒரு தொகுதிக்குப் போட்டியிடும் வேட்பாளர் களுள் வாக்குப் பெறுவதில் முதலிடத்தில் வருபவர் வெற்றி பெற்றவர் என்ற தேர்தல் முறை இருந்து வருவ தாலும், சிதறுண்ட எதிர்க் கட்சிகளாக இருப்பதாலும் பா.ச.க. 37 விழுக்காடு வாக்குகள் மட்டும் பெற்று நாடாளுமன்றத்தில் தன்னளவிலேயே தனி அறுதிப் பெரும்பான்மை பெற்று வென்றுவிட்டது.

இப்போதுதான் பா.ச.க. புதிய சிக்கல்களைத் தேடிப் பிடிக்க முற்படலாம். அயோத்தியில் மசூதியை இடித்து, நொறுக்கப்பட்ட இடத்தில் இந்துக் கோயில் கட்டிக் கொள்ள லாம் என உச்ச வழக்கு மன்றம் அண்மையில் தீர்ப்பு அளித்து, பா.ச.க.வின் விருப்பமான குறிக்கோளை நிறைவேற்றியுள்ளது. சிக்கல்கள் உருவாக்குவதற்காக வெறுக்கத்தக்க குடியுரிமைச் சட்டத்தைப் பா.ச.க. கையில் எடுத்துக்கொண்டு பெருமளவில் கலவரங்களைத் தூண்டி விடுகின்றது.

நாட்டுக்குள் ஊடுருவியவர்கள் என்ற பெயரில் அவர்களை வேட்டையாடிக் களையும் நோக்கத்தில், உண்மையான இந்தியர்களுக்காக ஒரு பட்டியல் ஆவணம் உருவாக்கப்பட வேண்டுமென்ற திட்டம் நாட்டின் 1.3 மில்லியன் (130 கோடி) மக்களையும் பாதிக்கும். இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுவது, அது எதிர்க்கப்படுவது, அதன்பின் மாற்றப்படுவது என்ற நிலை பல்லாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு, இப்பொழுது தான் இந்த ஆவணம் தயாரிக்கப்படவிருக்கிறது. அதனால் மக்களின் உணர்வுகள் மறுபடியும் மறுபடியும் கொழுந்து விட்டு எரியும். இதன்படி மக்கள் பட்டியலில் சேர்க்கப் படாததின் விளைவுகள் என்னவாகப் பின்னிக் கொண்டி ருக்கப் போகிறதோ? உண்மையில் இது முற்றிலும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது எனத் திரு. மோடி வாதிடுகிறார். இதற்கிடையில் பா.ச.க.வின் தேர்தலுக்கு விலைமதிப்புள்ளதான இந்துக்கள், மக்கள் தொகையில் 80 விழுக்காடு அளவுக்கு இருப்பினும்-நிழற்சக்திகளால் அச்சுறுத்தப்பட்ட போதிலும், அதுதான் மோதுவ தற்குத் திறன் கொண்டதாக உள்ளது என்ற குழப்பங்கள், இக்கருத்தை வலுப்படுத்த உதவுகின்றன.

இது, உலகிலுள்ள மிகப்பெரும் சனநாயகம், இந்திய ஒன்றியம் எனும் மகிழ்வூட்டும் எண்ணத்தைக் குலைத்து அழிப்பதாக இருக்கிறது. மோடியின் கொள்கைகள் உடன் வாழும் நம் நாட்டவரான இசுலாமிய மக்களுக்கு எதிராக வேறுபடுத்துகிறது. ஆப்கானிசுத்தான், வங்க தேசம், பாகிசுத்தான் ஆகிய நாடுகளில் துன்புறுத்தலுக்கு உள்ளான இந்துக்களை மட்டும் காப்பாற்றிக் கொண்டு அதேபோல் துன்புற்ற ஒரு இசுலாமியரைக்கூடச் சமய சார்பற்ற ஒன்றிய அரசு வேண்டுமென்றே வெளிப் படையாகத் தனிமைப்படுத்த உறுதி கொள்வது ஏன்? அமைதி காப்புக்குழுக் கூட்டத்தினர்களால் இசுலாமியர் கொல்லப்படும் மனப்போக்கை பா.ச.க.வினரின் அருஞ் செயல்களாகக் காட்டப்படுவது முதல் வரன்முறையில் லாது கைது செய்யப்படல், ஓசையில்லா ஊரடங்குகள், ஐந்து திங்களாக இணையத் தொடர்புகளை முடக்குதல் என, காசுமீர் பள்ளத்தாக்கு வாழ் ஒட்டுமொத்த மக்க ளைத் திரண்ட தண்டனைக்கு உள்ளாக்குதல் வரை மரியாதைக் குறைவாக நடத்தும் நிகழ்வுகளின் தொடரில் ஒன்றுதான் குடியுரிமைச் சட்டக் குளறுபடி.

பல மொழி, இனம், சாதி, சமயங்களைக் கொண்ட பல ஒன்றிய மாநில தேசங்களை உள்ளடக்கிய நாடாக இருப்பதால் நாடு விடுதலை அடைந்ததிலிருந்து அதன் சனநாயகம் நொறுங்கிவிடும் என இந்திய ஒன்றியம் குழப்பமுடனான எதிர்பார்ப்புடன் இருந்துவருகிறது. சமயச் சார்பற்ற, ஒருநிலை சார்பற்ற அரசு பிற பல வகைகளில் குறைபாடுடையதாக இருப்பினும் எல்லாக் குழு மக்களையும் காப்பாற்றும்.

இவர்களுள் ஒரு பிரிவினரை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தொடர்ந்து துன்புறுத்தி வருவது எல்லோ ருக்கும் எதிரான உள்ளார்ந்த அச்சுறுத்தலாகிவிடும் என்பதுடன், அது அரசியல் அமைப்பை மீளா இடருக் குள் தள்ளிவிடுவதாக அமைந்துவிடும். இந்தி அல்லாத பிற மொழிகள் பேசுவோர், தம் மதம் பற்றிப் பா.ச.க. கொண்டுள்ள கருத்துக்களை எதிர்ப்போர்களாக உள்ள கீழ்ச்சாதி இந்துக்கள், பிற சிறுபான்மையர் என அவர் களுக்கு நன்மை பயக்காத திட்டங்களைப் பா.ச.க. செயல் படுத்தி வருவதை வாக்காளப் பெருமக்கள் நினைவுகூர்வர்.

கும்பல் உணர்வைத் தூண்டிவிட்டு, மனித உயிர் களைப் பலிவாங்கும் அவருடைய போக்கால், திரு. மோடி, வன்முறை மறுப்புக் கொள்கை பரப்புவரான மகாத்மா காந்தியின் நினைவுகளையும் சிதைத்து வருகிறார். தற்போது, இசுலாமியர் இந்துப் பெண்ணை விரும்புகிறார்கள்; அல்லது மாட்டுக்கறி உண்ணப் பசுவைக் கொல்வது போன்றவை இந்து சமயத்தைச் சிறுமைப்படுத்துவதாகும் எனச் சொல்லி, பல இசுலாமி யர்கள் சட்டத்திற்குப் புறம்பாகத் துன்புறுத்தப்பட்டு அல்லது அடித்துக் கொல்லப்படுகிறார்கள். அடுத்தடுத்து இசுலாமியர்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டி விட்டு, ஆயிரத்திற்கும் அதிகமானவர்களைக் குசராத்தில் கொன்று குவித்தது போன்று, பல கொள்கைகளுக்கு இட்டுச்செல்ல எப்போதும் இந்துக்களை உசுப்பிவிட்டு, இசுலாமியர்களுக்குக் கோபமூட்டி பா.ச.க. நாடெங்கும் மேலும் குருதி சிந்தச் செய்துவிடும்.

தன் அரசியல் பலனுக்காக வகுப்பு உணர்வுகளை இடையறாது தூண்டிவிட்டு, அதை அதிகப்படுத்தியோ, மட்டுப்படுத்தியோ தன் கட்டுக்குள் வைத்துக் கொள்ள திரு.மோடி கற்பனை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் சமயஞ்சார் சமய வெறி உணர்வை இவர் வெறுப்புடன் தூண்டுபவராக இருப்பினும், அனைத்துப் பதவி நிலை யிலுள்ள இந்துத் தேசியவாதிகள் உண்மையான மத நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். அவர்களை அவர்களின் நன் நம்பிக்கையிலிருந்து எளிதில் விலக்கி விட முடியவில்லை என்பதை குசராத் படுகொலை வெளிப்படுத்துகிறது. பாக்கிசுத்தான் பற்றிப் போர்க்கால நிலையை ஒத்த வெறியூட்டும் வெற்றுப் பேச்சுடன் காசுமீர் குறித்துத் தலையை உடைத்துக் கொண்டு குடியுரிமை குறித்து, படுமோசமான ஒருபக்கச் சாய்வான அணுகுமுறையுடன் முதன்மை அமைச்சர் உணர்ச்சி வெறியாளரின் எதிர்பார்ப்புகளை எடுத்துரைத்தார். இதுபோன்றவற்றை நெடிதும் கடைபிடிக்க விரும்ப மாட்டார் - அவர் ஆட்சி நடத்த ஒரு நாடு உள்ளது - ஆனால் அவர்கள் இதுபோன்ற மனச்சான்று உறுத்தல் இல்லாதவர்களாக இருப்பர்.

**தகைமைக்குரிய சிலவற்றைக் காப்பாற்றுதல் :**

ஏற்கெனவே திரளான இந்தியர்கள் மகிழ்ச்சியுடன் போதுமானவற்றைப் பெற்றுள்ளனர் என்பதை அண் மையில் அவர்களின் எதிர்ப்புகள் காட்டுகின்றன. இந்தக் கிழமை குடியுரிமைச் சட்டத்தை நிறுத்தி வைக்க மறுத்துவிட்ட உச்ச வழக்கு மன்றம், இதைக் கவனத் திற்கொண்டு ஒரு சிறிதேனும் எதிர்பார்க்காத நேர் நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து இச்சட்டத்தை அரச மைப்புச் சட்டத்திற்கு எதிரானது என அறிவிக்க வேண்டும். மேலும் உலகின் இருபெரும் சமயங்களிடையே வெறுப்பு ணர்வைத் தூண்டிவிடாமல், வாக்காளர் பெருமக்களின் மனங்களில் அவர் இடம்பெற மாற்று வழிகளைக் காண திரு. மோடி முன்வர வேண்டும்.

# உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்- தொழிலாளர் விடிவெள்ளி காரல் மாக்ஸ்

- மரு.சோமாஸ்கந்தன்

எல்லாத் தத்துவங்களும் உலகம் எப்படித் தோன்றின, எப்படி இயங்குகின்றன என்றே சிந்திக்கின்றன. நமது வேலை உலகம் எப்படித் தோன்றியது என்று நம் சிந்திப்ப தில்லை; மாறாக உலகத்தை மாற்றியமைப்பதே! என்றார்.

**அதற்கு என்ன செய்வது?**

"உலகத் தொழிலாளர்களே! ஒன்று படுங்கள் நீங்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை, ஆனால் உங்களுக்காகப் பொன்னான ஓர் உலகம் காத்திருக்கிறது!" என்ற புகழ் பெற்ற வரிகள் உலகத்தின் மிகச் சிறந்த சிந்தனையாளர் காரல் மார்க்ஸ் எழுதியவை; உலக வரலாற்றின் போக்கி னையே மாற்றி அமைத்தது! அந்த மா மேதையின் வரலாறு! ஜெர்மனிக்கும் பிரான்ஸுக்கும் இடையே வளைந்தோடும் ரைன் நதிக்கரையில் பசுமை நிறைந்த விளை நிலங்களிடையே காணப்படும் பழைய நகரம் டிரையர். அந்த நகரின் பிராக்கன்ஸ் வீதியில் 664ஆம் எண்ணிடப்பட்ட இல்லத்தில், யூத இனத்தைச் சார்ந்த வழக்கறிஞர் ஹர்ஷல் மார்க்ஸ் தன் இல்லாள் ஹென்றிட் டாவுடன் வாழ்ந்துவந்தார்.

வானில் விண்மீன்கள் வழிகாட்டாமலும்,வேறு அற் புதங்கள் நிகழாமலும் 1818 ஆம் ஆண்டு மே 5ஆம் நாள் ஹர்ஷல் மார்க்ஸ்-ஹென்றிட்டா இணையருக்கு மூன்றாவது மகனாக, உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையில் மலர்ச்சியை ஏற்படுத்திட போகும் சிந்தனையாளன் கார்ல் மார்க்ஸ் தோன்றினார்.

ஹர்ஷல் மார்க்ஸ் - ஹென்றிட்டா இணையருக்கு ஒரே மகன் காரல்மார்க்ஸ்; மூன்று பெண்குழந்தைகள்- சோபியா (மார்க்ஸின் தமக்கை) எமிலி, லூயிஸ் (மார்க்ஸின் தங்கைகள்).

ஒரே ஆண் மகவு என்பதால் பெற்றோர்க்கு மார்க்ஸ் செல்லப்பிள்ளை.ஆதலால் சிறுவயதில் மூர்க்கனாகவும், முரடனாகவும், வம்புகள் வளர்ப்பவனாகவும் வளர்ந்து வந்தான்.

காரல் மார்கஸின் தந்தை ஹர்ஷல் மார்க்ஸ் வழக்கறிஞர் என்றபோதிலும், போதிய வழக்குகள் வராததால் அதிக வருவாய் கிட்டவில்லை.அன்றைய ஜெர்மனியில் யூதர்கள் அலட்சியப்படுத்தப்பட்டனர். கத்தோலிக்கக் கிறித்துவர்களுக்கு மதப்பற்று அதிகம். மதப்பற்று மதவெறியாகி யூதர்களை விரோதிகள்போல் நடத்தினர்.

இதனை உணர்ந்த ஹர்ஷல் மார்க்ஸ் பிராட் டஸ்டன்ட் கிறித்துவராக மாறினார்.பெயரையும் ஹென்றிச் மார்க்ஸ் என்று மாற்றிக்கொண்டார்.மதம் மாறியது, பெயரும் மாறியது, வருவாயும் பெருகியது வசதியும் பெருகியது, வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது.

**காரல் மார்க்ஸ் சிறுவயதில்:**

சிறுவயதில் மூர்க்கனாகவும், கோபக்காரனாகவும், வல்லடி வழக்குகளில் ஈடுபடுவனாகவும் இருந்தான்,. அதனால், தினம் தினம் மார்க்ஸால் அவன் தாய்க்கு மிகுந்த தொல்லைகள் தோன்றின. தந்தைக்கு அவன் செல்லக் குழந்தை. வீட்டிலிருந்தபடியே தந்தையின் மேற்பார்வையில் கல்வி கற்றான். ஆயினும் அவனின் குறும்பும் போக்கிரித்தனமும் சிறிதும் மாறாமல் வளர்ந்தே வந்துள்ளன.

**கல்வி:**

ஆகவே, மார்க்ஸுக்கு 12 வயதாகும் போது ஜிம்னாசியத்தில் (பள்ளிக்கூடம்) சேர்த்துவிட்டார் அவர் தந்தை.தந்தையின் மீது மிகுந்த பற்றுக்கொண்டிருந்த மார்க்ஸ் அவரது புகைப்படத்தைத் தன் சட்டைப் பையில் எப்போதும் வைத்திருப்பார். இந்தப் பழக்கம் அவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்திருந்தது. அவர் படித்த அந்தப் பள்ளியின் கணித ஆசிரியர் ஜோஹன் டிரையர், நகரத்திலிருந்த புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டி ருந்தார். அந்த ஆசிரியர் ஒரு துண்டறிக்கையைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அவர் மார்க்ஸின் உள்ளத்தில் புரட்சி எண்ணங்களை விதைத்தார். உதவித் தலைமை ஆசிரியர் விஸ்டுஸ், ஜோஹனின் அரசு விரோதச் செயல்களை அரசிற்குத் தெரியப்படுத்தியதால் ஜோஹன் கைது செய்யப்பட்டார், ஜோஹனின் கைது மார்க்ஸ் உள்ளத்தில் ஆவேசத்தையும் புரட்சி எண்ணத் தையும் ஆழமாக விதைத்தது.

ஜோஹன் கைதுக்குக் காரணமான விஸ்டுஸ் தலைமை ஆசிரியர். பள்ளி வாழ்க்கையின் இறுதி நாளில் தலைமை ஆசிரியரைச் சந்தித்து விடை பெற மார்க்ஸ் மறுத்துவிட்டார். ஆனால், காரல் மார்க்ஸ் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இலக்கியங்களுக்குப் புதிய விளக்கங்கள் தருவதில் வல்லவர். எதிர்காலத்தில் சிறந்து விளங்குவார் என்று 25-8-1835 இல் பள்ளியிலிருந்து நற்சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

பள்ளி வாழ்க்கை முடிவுற்றபின், காரல் மார்க்ஸ் கல்லூரியில் சேர்ந்து மெய்யியல் (தத்துவம்) படிக்க விரும்பினார். ஆனால் அவருடைய தந்தையின் விருப்பம் மார்க்ஸ் சட்டம் படிக்கவேண்டும் என்பதாகவிருந்தது.

**கல்லூரி வாழ்க்கை:**

தந்தையின் விருப்பத்திற்காக சட்டம் பயில, பான் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.தந்தையின் விருப்பத்திற் காக சட்டம் பயின்றதால் மார்க்ஸிற்கு படிப்பில் நாட்ட மில்லை. அதனால் அவர், பான் நகரில் அமைந்திருந்த

குடிகாரர் சங்கத்தில் உறுப்பினராகிப் பின் அதன் தலைவராகவும் பொறுப்பேற்றார்.ஒரு நாள் அச்சங்கத்தில் நடைபெற்ற உச்சக்கட்ட கேளிக்கையின் போது கைது செய்யப்பட்டார். இதனால் வெகுண்ட தந்தை, மார்க்ஸை, பாதிப் படிப்பில் பான்பல்கலைக் கழகத்திலிருந்து விடுவித்து, பெர்லின் பல்கலைக் கழகத்தில் சேர்த்துவிடத் திட்டமிட்டுச் செயல்பட்டார். பெர்லின் பல்கலைக் கழகம் 2 மாதங்களுக்கு விடுமுறையாதலால், காரல் மார்க்ஸ் தன் இல்லத்திலேயேத் தங்கிப் பொழுதைக் கழித்தார்.

காரல் மார்க்ஸின் வீட்டிற்கு அடுத்த வீட்டில், ரைன்லாந்து பகுதியின் உயர்ந்த பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்த லுட்விக் வான் வெஸ்டு ப்ளான் என்ற பிரபு வாழ்ந்து வந்துள்ளார். அவருக்கு அறிவிலும் அழகிலும் சிறந்து விளங்கிய பெண் ஜென்னி 1814 ஆம் ஆண்டு பிறந்தவர். காரல் மார்க்ஸைவிட நான்கு ஆண்டுகள் மூத்தவர்.

அண்டை வீடாகயிருந்ததால், சிறுவயதிலிருந்தே மார்க்ஸின் சகோதரிகளுக்கும் ஜென்னிக்கும் இடையே ஆழமான தோழமை நிலவியது. மார்க்ஸின் தமக்கை சோபியா, ஜென்னியின் உயிர்த் தோழியாக இருந்தார்.

காதல் பிறந்தது:

கண்ணொடு கண்ணிணை நோக்குஒக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல். (1109)

மார்க்ஸின் தமக்கையின் மூலம் ஜென்னியின் தொடர்பு ஏற்பட்டது ஜென்னியைக் கண்டான். காதல் கொண்டான். அண்ணலும் நோக்கினான் அன்னவளும் நோக்கினாள், காதல் மலர்ந்தது

மார்க்ஸின் கவிமனம் அவளைக் கண்டதும், உலகின் மிகச் சிறந்த பூ ஒன்று இருக்குமானால், அது அவள் முன் தோற்றுப்போகும் என்று எண்ணியது. காரல் மார்க்ஸின் எரிமலை இதயத்தில் வாடாத மலராக ஜென்னி வாழ்ந்தாள்.

ஆரவாரமற்ற ஆழ்ந்த அறிவும், தன்னலமற்ற தியாகமும், பெண்களை மதிக்கும் சுபாவமுமே ஓர் ஆணின் உண்மையான அழகு என்பதை ஜென்னி நன்கு உணர்ந்திருந்தாள் ஆதலாள் மார்க்ஸைக் கண்டதும் ஜென்னியின் உள்ளத்தில் காதல் மலர்ந்தது.

ஜென்னியின் தந்தையும், மார்க்ஸும் அடிக்கடி சந்தித்து ஷேக்ஸ்பியர் கவிதைகளை உரக்கப் பாடி வியந்து பேசி மகிழ்வர், இருவரும் ஷேக்ஸ்பியரின் தீவிர இரசிகர்கள். அதனாற்றான் ஜென்னியின் தந்தைக்கு மார்க்ஸின் மீது நம்பிக்கையும்,மதிப்பும், பிரியமும் இருந்தன; ஜென்னியை மார்க்ஸிற்கு மணமுடிக்கவும் விரும்பியிருந்தார்.

ஜென்னி போன்ற அழகும் அறிவுமிக்க பெண்ணைத் தன் வாழ்வின் இணையாக்கிக் கொள்ள வேண்டு மானால், அதற்குத் தன்னைத் தகுதி படைத்தவனாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்று மார்க்ஸ் எண்ணி னார்.

**மீண்டும் கல்லூரி வாழ்க்கை:**

ஆதலினால், மார்க்ஸ்,1836 ஆம் ஆண்டு பெர்லின் பல்கலைக் கழகத்தில் தத்துவம் படிக்க விண்ணப்பித்து, தத்துவம், வரலாறு, பொருளாதரம்ஆகிய பாடங்களைப் படிக்கத் தொடங்கினார். அந்தப் பல்கலைக் கழகத்தில், ஆய்வு மாணவர்கள் சங்கம் நிறுவி, அரசியல், வரலாறு, பொருளாதரம் ஆகிய பொருள்கள் பற்றி விவாதித்தனர். முதல் நாள் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு, இரவு முழுதும் படித்து மறுநாள் எவரும் வினா எழுப்பவொண்ணா தவாறு விடையளித்து, எதிர் கருத்தினரைக் கவர்ந்தார். ஆழ்ந்து படிப்பதிலும் விவாதங்களில் கலந்து கொண்டு ஆய்வுரையாற்றுவதிலும் பெரும்பொழுது கரைந்தது. இவற்றுடன் தத்துவமேதை எபிக்யூரஸ் குறித்து ஆய்வுக் கட்டுரை வரைந்து, முனைவர் பட்டம் 1841 ஆம் ஆண்டு பெற்றார். முனைவர் பட்டம் பெற்றதும், மார்க்ஸ், ஜென்னி யைக் கரம் பற்றுவதற்கு ஓரளவு தகுதி பெற்றுவிட்டதாக அகமகிழ்ந்தார், கருமமே கண்ணாயிருந்த மார்க்ஸ், இப்பொழுது தன் உயிரினும் மேலாய் நேசித்தத் தன் காதலி ஜென்னிக்கு தன் உள்ளத்து உணர்வுகளை எழுத்தில் பதித்து ஒரு கடிதம் அனுப்பிவைத்தார். ஜென்னி தன் விரல்கள் நடுங்க அந்தக் கடிதத்தை எடுத்துப் படிக்கமுற்பட்டாள்.

**கடிதத்தின் இறுதி வரிகள்**

இனி வரும் நூற்றாண்டுகள் அனைத்துக்கும் காதல் என்றால்ஜென்னி - ஜென்னி என்றால் காதல்! இந்த வரிகளைப் படித்ததும் ஜென்னியின் மாவடுக்கண் களிலிருந்து கண்ணீர் மழையெனப் பொழிந்தது! உணர்ச்சிப்பெருக்கில்! கல்லூரியில் பயிலுங்காலத்தில், மார்க்ஸ், தான் கல்லூரிப் பேராசிரியராகப் பணியேற்க வேண்டும் என்று விரும்பியிருந்தார்.பெர்லின் பல்கலைக் கழகத்தில் மார்க்ஸின் கருத்துக்களுக்கு ஆதரவாகவும், மிகுந்தத் தூண்டு கோலாகவும் இருந்த இரண்டு இடதுசாரிப் பேராசிரியர்கள் இருந்தனர்.ஒருவர் ஃபயர் ஃபாக்ஸ், மற்றொருவர்; கோபன். இருவரும் இடதுசாரிக் கொள்கையினர். அன்றைய பிற்போக்கு பிரஷ்ய (ஜெர்மனி) மன்னர் ஆட்சியில், இடதுசாரிக் கொள்கையுடைய பேராசிரியர்கள் பல்கலைக் கழகங்களில் பணிபுரிவ தற்குத் தடை விதிக்கப்பட்டது. ஆகவே மார்க்ஸ் ஆசிரிய ராகப் பணியில் அமரவேண்டும் என்ற விருப்பத்தைத் துறந்தார்.

இதனால், தத்துவங்களில் மூழ்கிக் கிடந்த மார்க்ஸ மனம் எரிமலையாயிற்று. மன்னனும் ஒரு சாதாரண மனிதனே; மன்னன் மகேசனால் தேர்ந்தடுக்கப்பட்டவன் என்பது கட்டுக்கதை; மன்னனும் மதவாதிகளும் கூட்டுக் களவாணிகள். மன்னனுமில்லை மகேசனுமில்லை. மக்கள் அனைவரும் சமம் என்று எண்ணி மார்க்ஸ் செயலாற்ற முனைந்தார். மார்க்ஸின் இந்தப் போக்கு அவரின் தந்தையை நிலைகுலையச் செய்தது.

இந்தச் சூழலில்தான் 1838 இல் மார்க்ஸின் தந்தை மரணத்தை முத்தமிட்டார். தந்தையின் மரணம்

மார்க்ஸுக்குப் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்தது. ஜென்னியைத் தவிர்த்து ஆதரவாக எவருமிலர். மார்க்ஸ் ஜென்னியை மணமுடிக்கத் தனக்கொரு வேலை அவசியம் என்றுணர்ந்தார். எனவே ''ரைன் கெஜட்'' என்ற செய்தித்தாளில் துணை ஆசிரியராகப் பணியில் அமர்ந்தார்.1842 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் முதன்மை அசிரியராக உயர்ந்தார். அந்தப் பத்திரிக்கைக்கு, இலண்டனிலிருந்து ஏங்கெல்ஸ் என்பவர் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார். அந்தக் கட்டுரைகள் மார்க்ஸின் கவனத்தை ஈர்த்தன. அவரது கட்டுரைகள் வந்தவுடனே மார்க்ஸ், மிகுந்த ஆவலுடன் முதல் வாசகனாக வாசித்து மகிழ்ந்தார். மார்க்ஸின் ஆசிரிய உரைகள் புரட்சிகரமான, ஜனநாயக உணர்வுகளைத் தூண்டுவனவாக வளர்ந்து வந்துள்ளன. அந்த நிலையில் அரசு தினமும் பத்திரிக்கையைத் தணிக்கை செய்யத் தொடங்கியது. மேலும் 1843 சனவரி முதல் தேதியன்று, பத்திரிக்கையைத் தடை செய்ய அரசுத், திட்டமிட்டிருந்தது. இதனையறிந்த மார்க்ஸ் தடை செய்வதற்கு முன்பே ஆசிரியப் பொறுப்பிலிருந்து விலகினார். இருப்பினும் அந்தப் பத்திரிக்கை நின்று போனது.

இதனிடையே ஜென்னியின் தந்தை வான் வெஸ்ட்ப்ளான் மறைந்தார்.அதனால் ஜென்னியின் குடும்பம் க்ரூட்ஸ்னக் நகருக்குக் குடிபெயர்ந்தது. அப்போது ஜென்னிக்கு அகவை 29. கீழ் வானில் எழும் ஞாயிறுக்காக மலரக் காத்திருக்கும் தாமரை என ஜென்னி காதலன் வருகைக்காகக் காத்திருந்தாள்.

1843ஆம் ஆண்டு ஜூன்19, அன்று கார்ல் மார்க்ஸ்-ஜென்னி திருமணம் எளிமையுடன் நடந்தேறியது.

உலகின் தலை சிறந்த காதல் இலக்கணப் புத்தகம் மூடிவைக்கப்பட்டது!

அதேநாளில், உலகின் தலைசிறந்த குடும்ப வாழ்க்கை இலக்கணப் புத்தகம் திறந்து வைக்கப்பட்டது!

திருமணத்திற்குப் பின் தன் கணவரோடு, தான் வாழ்ந்த இல்லத்தை விட்டு 1843 அக்டோபர் திங்களில் வெளியேறி, பாரிஸுக்குப் பிழைப்பைத் தேடிவந்தனர். பாரீஸ் நகரில் எண் 38, வன்னியே என்னும் வீதியில் மார்க்ஸ் தன் புது மனைவியுடன் குடியேறினார்.

ஆர்னால்ட் ரூஜ் என்பவர், மார்க்ஸை ஆசிரியராகக் கொண்டு ஜெர்மன்-''பிரெஞ்சு மலர்'' என்ற இதழை வெளியிட்டார்..முதல் இதழோடு அது நின்றுவிட்டது. அவ்வாறு வெளியான முதல் இதழ் மார்க்ஸ்-ஏங்கல்ஸ் ஆகியோரின் கட்டுரைகளைக் கொண்டதாக இருந்தது. அந்தக் கட்டுரைகள் பொருள் முதல் வாதம், கம்யூனிசம் போன்ற கொள்கைகளை விளக்குவனவாக இருந்தன. மார்க்சிய தத்துவம் உருவாகத் தொடங்கிய காலம், அது.

ரைன் மாகாணத்தின், பார்மன் நகரத்தில் 1820 ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் நாள் பிறந்தவர் பிரடரிக் ஏங்கல்ஸ்.செல்வச் சீமான். நெசவாலை முதலாளியின் மகன் என்ற போதிலும் ஏழைத் தொழிலாளிகளின் நிலை குறித்து மெத்தக் கவலைப்பட்டு, அவர்கள் எழுச்சி பெறக் கட்டுரைகள் எழுதி வருபவர். அவர் இலண்டனிலிருந்து தன் சொந்த ஊரான பார்மன் போகும் வழியில், பாரீஸில் இறங்கி மார்க்ஸை 1844 ஆகஸ்டு மாத இறுதி நாளில் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார். மார்க்ஸின் அறிவாற்றலைப் போற்றி நட்பு கொண்டார். அந்த நட்பு வாழ்நாள் நட்பாய் அமைந்திருந்தது.

பாரீஸ் நகரில் அப்போதிருந்த பல்வேறு உயர் நடுத்தர வர்க்கத்தினர் பேசி வந்த போலியான சோஷலிச கருத்துகளை எதிர்த்து இருவரும் கடுமையாகப் போராடி வந்தனர்

'உலகின் எந்த மூலையில் இருந்தாலும், தொழிலாளன் என்பவன் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவனே! அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே தொழிலாளர்கள் வாழ்வில் விடுதலை கிடைக்கும்'' என்று கூறியதோடு நில்லாமல் அவர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் மார்க்ஸ் இறங்கினார். அதற்காக முன்னேற்றம் என ஓர் இதழைத் தொடங்கினார்.அதில் மக்களையும், தொழிலாளர்களையும் புரட்சிப் பாதைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். ஜெர்மானிய மன்னர் நான்காம் ஃபிரடெரிக், பிற்போக்காளரின் முதன்மைப் பிரதிநிதி என்று சாடினார். இதனால் ஜெர்மன் அரசு, பிரெஞ்சு அரசிடம், மார்க்ஸையும் அவரது தோழர்களையும் பயங்கரமான புரட்சியாளர்கள் என்று முத்திரை குத்தி நாடு கடத்தும்படி வேண்டிக் கொண்டது. 1845 ஜனவரி 11 ஆம் நாள் பிரான்சில், முன்னேற்றம் தடை செய்யப்பட்டது. மார்க்ஸ் மட்டும் இரவோடு இரவாக பாரிசிலிருந்து வெளியேற ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையில் மார்க்ஸ் மன்னிப்புக் கேட்டால், பாரீசில் அமைதியாகக் குடும்பம் நடத்தத் தடையில்லையென்றும் கண்டிருந்தது.

மார்க்ஸ் இரவோடு இரவாக பாரிஸ் நகரிலிருந்து வெளியேறி, பெல்ஜியம் தலைநகர் பிரெஸ்ஸல் சென்றடைந்தார், பெல்ஜியும் அரசு மார்க்சைக் கண்டு அஞ்சியது; குறிப்பாக அவரின் பேனாவைக் கண்டு மிகவும் மிரண்டது. அவர் பேனாவைத் தொடக்கூடாது; தொட்டால் சிறைவாசம் என்று எச்சரித்தது..கார்ல் மார்க்ஸ் அந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டார்.ஆனால் ஜெர்மனி தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தது.அந்த நிலையில் தனக்கும் ஜெர்மனிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெரிவித்து, ஜெர்மன் குடியுரிமையை இரத்து செய்துவிட்டார்.அதன் பிறகு மார்க்ஸ் எந்த நாட்டின் குடியுரிமையையும் பெறவில்லை.; நாடற்றவரானார் மார்க்ஸ்.

மார்க்ஸைத் தேடி ஏங்கல்ஸ், தான் எழுதிய ''இங்கிலாந்தில் தொழிலாளர் நிலை'' என்ற நூலுடன் பெல்ஜியம் வந்தார். அந்த நூல் காரல் மார்க்ஸை வெகுவாகக் கவர்ந்தது. உலகம் முழுக்கத் தொழிலாளர்கள் எப்படி வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பதை விளக்கியுள்ளது அந்த நூல். அந்த நூல் அளித்த உணர்வால் இருவரும் இணைந்து, தொழிலாளர்களை ஒருங்கிணைத்து முதலாளித்துவத்துக்கு எதிரான ஒரு சக்தியாக பொதுவு

டைமைச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். தொழிலாளர்களை அவர்கள் "கம்யூனிஸ்டுகள்" என்று அழைத்தனர். 1847 ஜூன் மாதத்தில் இலண்டன் மாநகரத்தில் உலகத் தொழிலாளர்களை ஒன்றிணைத்து முதல் கம்யூனிஸ்டு சங்கத்தை உருவாக்கினர். அடுத்த ஆண்டு இரண்டாவது மாநாடு இலண்டனில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் மார்க்ஸ்-ஏங்கல்ஸ் இணைந்து உருவாக்கிய கம்யூனிஸ்டு அறிக்கையில், சமூக வாழ்க்கை பற்றிய புதிய உலகக் கண்ணோட்டம் வெளிப்பட்டது. தங்களின் புரட்சிகர எண்ணங்களால் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் இதயங்களில் உன்னதத் தலைவர்களாக உருவெடுத்தனர்.

இதன் விளைவாக 1848 ஆம் ஆண்டு பிப்ரவரி 24 ஆம் தேதியன்று முதல் புரட்சி பாரிசில் ஏற்பட்டது. மன்னர் லூயிரிபிலிப் தப்பி ஓடினார். மன்னர் ஆட்சி ஒழிந்து மக்கள் ஆட்சி மலர்ந்தது.

பெல்ஜியம் நாட்டின் மன்னர் தன் பாதுகாப்பை பலப்படுத்திக் கொண்டு, காரல் மார்க்ஸையும் அவர் மனைவி ஜென்னியையும் சிறையில் அடைத்தார்.பின் மன்னர், அவர்கள் இருவரும் 24 மணி நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று ஆணையிட்டார்.இவ்வாறு பன்முறை பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி என்று நாடு கடத்தப்பட்டார்.

**அப்போது அவர் கூறியது எல்லா நாடும் என் நாடே!**
**எல்லா மக்களும் என் மக்களே!**

இந்த வரிகள் நம் புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார் பாடிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வரியை நினைவூட்டுகிறது!

பெல்ஜியத்திலிருந்து அவர்கள் இருவரும் இலண்டன் நகர் வந்து சேர்ந்தனர். வாழ்க்கை என்பது போராட்டம் தான் பலருக்கு.ஆனால் மார்க்ஸிற்கு, போராட்டமே வாழ்க்கையாக அமைந்திருந்தது.

மார்க்ஸிற்கு இலண்டனில் நிரந்தரமாக வேலை ஏதும் கிட்டவில்லை.வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தார். அவரின் வாழ்நாள் நண்பர் ஏங்கல்ஸ், அவ்வப்போது தன்னால் முடிந்த அளவிற்கு உதவிகள் வழங்கி வந்துள்ளார்.

"அமெரிக்காவிலிருந்து வெளிவந்த" நியூயார்க் ட்ரிபியூன் என்ற இதழுக்கு, அவர் எழுதிய கட்டுரைகளுக்குக் கிடைத்த சொற்ப வருமானம் குடும்பம் நடத்த உதவியது. அந்த வருமானமும் சிலகாலத்திற்குப் பின் நின்று போனது. வீட்டு வாடகைக் கூடத் தர இயலாத வறுமை அவரை வாட்டியது!

மார்க்ஸ்-ஜென்னி இணையருக்கு 7 குழந்தைகள் பிறந்தனர். மூன்று குழந்தைகளைத் தவிர, ஏனையோர் சிறுவயதிலேயே இறந்து விட்டனர். 1850, ஆகஸ்டு மாதத்தில் ஜென்னி 5 ஆவது குழந்தைப் பேறடைந்தாள். கைக்குழந்தை, லிட்டில் பாக்ஸ்க்கு நிமோனியா காய்ச்சல். கையில் பணம் இல்லை உதவி வேண்டி அவரது உறவினர் கார்லைத் தேடிச்சென்றாள். ஆனால் அவர் உதவ மறுத்துவிட்டார். தன் வறுமைக்கு லிட்டில் பாக்ஸ் முதல் பலி என்றாள். மார்ச் 28, 1851 இல் புதிய குழந்தை பிரான்சிஸ்கா பிறந்தாள். பிறந்த சில நாள்களில் அந்தக் குழந்தை இறந்து விட்டது. பிறந்த இக் குழந்தையின் மரணம் குறித்து, ஜென்னி சோகத்துடன், "பிறந்த போது தொட்டில் வாங்கப் பணமில்லை. இறந்தபோது சவப் பெட்டி வாங்கப் பணம் இல்லை" எனக் கூறியது அவலத்தின் உச்சம்! 1849 முதல் 1855 வரை வறுமையின் கோரப்பிடியில் சிக்கி அவதிக்குள்ளான நிலையிலும், மார்க்ஸ் தொடர்ந்து பொருளாதாரம் பற்றி அரிய கட்டுரைகளை எழுதி வந்தார். இந்த ஆய்வுக் கட்டுரைகளுக்காக நாள் முழுதும் இலண்டன் மியூசியம் நூலகத்திலுள்ள அரிய நூல்களை வாசிப்பதிலும் குறிப்புகள் எடுப்பதிலும் கண்ணுங் கருத்துமா யிருந்தார்

1856 ஆம் ஆண்டில் தனது தாயார் இறப்புக்காக ஜென்னி, ஜெர்மனி சென்றார். மார்க்ஸால் அந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை.; ஜென்னிக்குக் கடிதம் எழுதினார்.அதில் அவர், "உன் பிரிவு எனக்குள் மிகுந்த மனக் கிளர்ச்சியைத் தருகிறது என் சக்திகள் அனைத்தும் அதில் கரைந்து போவதைக் கண்கூடாகப் பார்க்கிறேன். ஒரேமுறை மீண்டும் உன்னை என் இதயத்தோடு அணைத்துக்கொண்டால் போதும். என் இதயம் அமைதியாகிவிடும். அதன் பிறகு, எனக்கு இந்த உலகில் எதுவும் வேண்டியிருக்காது" எனத் தன் பிரிவின் வலியை விவரித்திருந்தார்.

1859 ஆம் ஆண்டில் மார்க்ஸ் எழுதிய பொருளாதரக் கட்டுரைகள் எங்கல்ஸின் முன்னுரையோடு ஒரு நூலாக வெளிவந்தது.

1867 செப்டம்பர் 14 இல் மார்க்ஸின் ஒப்பற்ற நூல் மூலதனம் வெளியானது. இந்த நூல் வெளியாவதற்கு அவரது நண்பர் ஏங்கல்ஸ் செய்த உதவிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளார். மூலதனம் வெளியான அந்தக் காலகட்டத்தில். சார்லஸ் டார்வின் எழுதிய "உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி" என்ற நூல் வெளியானது. அந்த நூல் மத நம்பிக்கைகளைத் தகர்த்தது..

டார்வின் நூலைப் பாராட்டி, மார்க்ஸ் கடிதம் எழுதினார், அந்தக் கடிதத்தில் மூலதனம் நூலினை, சார்லஸ் டார்வினுக்குச் சமர்ப்பிக்க விரும்பி அவரின் ஒப்புதல் வேண்டியிருந்தார்.,

டார்வின் ஒப்புதல் தர மறுத்துவிட்டார். அதற்கு டார்வின், தற்போதைய நிலையில், "தான் மத நம்பிக்கைகளுக்கு எதிரான வேலைகளில் ஈடுபடுவதில்லை என்று தன் குடும்ப உறவுகளிடம் உறுதியளித்துள்ளதால் தன் பெயரைக் குறிப்பிடவேண்டாம்" என்று வேண்டினார். டார்வின் பதில் மார்க்ஸுக்கு வியப்பாயிருந்தது. அதன் பின்னர், மார்க்ஸ், தன்னுடைய தோழரும், சோஷலிச இயக்கத் தியாகி வில்லியம் உல்ஃப் என்பவருக்கு மூலதனம் நூலினைச் சமர்ப்பணம் செய்தார்.

வறுமை வாட்டிய போதும், மார்க்ஸின் சிந்தனைக்கு உரம் ஊட்டிவந்த அவரின் காதல் மனைவி ஜென்னி 1881 ஆம் ஆண்டில் புற்று நோய்க்குப் பலியானார். மனைவியின் இழப்பால் இடிந்து போனார் மார்க்ஸ். இடிமேல்

இடி தாக்கியது போன்று மார்க்ஸின் மூத்தமகள் ஜென்னி, தாயைப்போன்று பொறுமையும் சாயலும் கொண்ட வளை, மனைவி மறைந்த மறு ஆண்டே இழந்து விட்டார். மார்க்ஸ். மார்க்ஸ் உள்ளமும் உடலும் ஒய்ந்து போனார். அந்த உலகம் போற்றும் சிந்தனையாளர் **1883 மார்ச் 14 பகல் 2.30 மணிக்கு சாய்வு நாற்கலியில் அமர்ந்தார். தன் பையில் எப்பொழுதும் இருக்கும் தன் தந்தை, மனைவி, மகள் ஜென்னியின் படத்தைப் பார்த்த வண்ணம் அந்தச் சிந்த்னைச் சிற்பி, சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்.**

மனைவியும், மகள் ஜென்னியும் அடக்கம் செய்யப் பட்ட இலண்டன் ஹைகேட் மைதானத்தில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது. அப்பொழுது இரங்கல் உரையில் ஏங்கல்ஸ், இவ்விதம் கூறிணார்.

''அவர் யூதனாகப் பிறந்தார் கிறிஸ்தவனாக வாழ்ந்தார், மனிதனாக இறந்தார் காலங்கள் தோறும் அவரின் பெயரும் புகழும் நிலத்து நிற்கும்''

**மார்க்சியம் வாழ்க!**
**தொழிலாளர் புரட்சி ஓங்குக!**

## பேரா. மு.பி. பாலசுப்பிரமணியம் மறைவு



தமிழாலயம் இதழின் ஆசிரியர், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வர், செம்மொழித் தமி ழாய்வு மத்திய நிறுவனத்தின் உறுப்பினர், திராவிட இயக்கக் கொள்கையாளர் பேராசிரியர் மு.பி.பாலசுப்பிரமணியம் (82) அவர்கள் 27.6.2020 அன்று உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

## கே.பக்தவத்சலம் மறைவு



'செவ்வாய்தோறும் செந்தமிழ்' என்று சென்னைப் பாரிமுனை ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் 56 ஆண்டுக்காலமாகச் செந் தமிழ் வளர்த்த பெருந்தகையாளர், அறிஞர்கள் பலரின் உரையை அரங் கேற்றிய அறிஞர் கே. பக்தவத்சலம் (80) அவர்கள் 30-6-2020 அன்று மாரடைப்பால் காலமானார்.

## மன்னர்மன்னன் மறைவு



புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதி தாசனாரின் மகன் திரு. மன்னர்மன் னன் (92) அவர்கள் மூப்பின் காரண மாக உடல்நலக் குறைவால் 06.7.20 அன்று புதுவையில் இயற்கை எய்தினார்.

புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின்
புரட்சிப்பாவலருமான

## தமிழேந்தி (சோ.சு.யுவராசன்)

### அவர்களின் முதலாண்டு நினைவேந்தல்



மார்க்சிய-பெரியாரிய-அம்பேத்கரியப் பெருந் தொண்டரும், மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியின் முன்னணிச் செயல்வீரரும், புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் புரட்சிப்பாவலரு மான காலஞ்சென்ற தமிழேந்தி (சோ. சு. யுவராசன்) அவர்களின் முதலாண்டு நினைவேந்தல், கொரோனா பெருந்தொற்றின் காரணமாக பொதுவிழாவாக அன்றி, காணொலி நினைவுரைகள் அடங்கிய இணையவழி நினைவேந்தலாக அரக்கோணத்திலுள்ள அவர்தம் இல்லத்திலிருந்து பதிவேற்றம் செய்யப்பட்டு செம் மையாக நடந்தேறியது.

தமிழேந்தி ஐயாவின் மூத்த மகள் அருவி நினை வேந்தலின் முகவுரையைத் தொடங்கிவைக்க, சமூக-அரசியல்-பண்பாடு சார்ந்த பல்வேறு முற்போக்கு இயக்கத்தினரும் அறிவார்வலர்களும் தோழர்களும் தமிழேந்தி ஐயாவுடனான தமது தனிநட்பையும், கொள்கை-கோட்பாடு-போராட்டக்களம் சார்ந்த அனுபவங்களையும் செறிவாகவும் சுருக்கமாகவும் தத்தம் உரைகளில் அடுத்தடுத்துப் பகிர்ந்திருந்தனர். ஐயா வே.ஆனைமுத்து, க.முகிலன், தொல். திருமா வளவன், பேராசிரியர் சுபவீ, பெ.மணியரசன், கொளத் தூர் மணி, தியாகு, பொழிலன், புனித பாண்டியன், இரா. உமா, ஓவியா, திருமுருகன் காந்தி ஆகியோர் உள்ளிட்ட பற்பல தோழர்களும் தம் மெய்யுரைகளின் வாயிலாக தமிழேந்தி ஐயாவை நெகிழ்வுடனும் மகிழ்வுடனும் நினைவுகூர்ந்துச் சிறப்பித்தனர். ஐயாவின் மகன் பாவேந்தன் முடிவுரையாற்றி நினைவேந்தலை முடித்துவைத்தார்.

# தாம்பரம் "தோழர். கி.கரிபால்டி" மறைந்தார்

மார்க்சியப் பெரியாரியச் சிந்தனையாளரும், தாம்பரம் மா.பெ.பொ.க தோழர் கி.மாஜினி, தமிழக முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னைய்யா ஆகியோரின் மூத்த சகோதரருமான கி.கரிபால்டி நோய் தொற்று காரணமாக கடந்த 30.7.2020, மாலை 4.30 மணியளவில் குரோம்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்றுவந்த நிலையில் மறைந்தார்.

மா.பெ.பொ.க தாம்பரம் கிளை சார்பில் ஆறு மாநாடுகள் உள்ளிட்ட கட்சியின் ஏராளமான கூட்டங்களுக்கு உடன் இருந்து ஒத்துழைப்புத் தந்தவர் தோழர் கரிபால்டி. "பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்" இரண்டாம் பதிப்பின் போதும், "ஆனைமுத்து கருத்துக் கருவூலம்" வெளியிட்ட போதும், முன்பதிவுத் திட்டத்திற்கு தாம்பரம் தோழர்களுடன் உடன் இருந்து களப்பணி ஆற்றியவர் இவர். சாலை இளந்திரையன், சாலினி இளந்திரையன் ஆகியோரின் அறிவியக்கப் பேரவையில் தோழர் நாத்திக நந்தனார், செயலரசு (எ) ஆர்.கிருட்டிணமூர்த்தி ஆகியோருடன் இணைந்து 1977ஆம் ஆண்டு முதல் களப்பணி ஆற்றியுள்ளார். மா.பெ.பொ.க. தாம்பரம் செயல்பாடுகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஆதரவு தந்தவர் தோழர் கரிபால்டி. பெரியார் "ஈ.வெ.ரா.சிந்தனைகள்" "வெளியிட்டு விழா"விற்கான அழைப்பிதழ், வண்ணச் சுவரொட்டிகள், வடிவமைப்பிற்குத் தாம்பரம் மாஸ் மீடியா நிறுவனத்தின் மூலம் பெரும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

தோழர். ஆனைமுத்து தலைமையில், தாம்பரம் நகர் முழுவதும் 25இடங்களில் மா.பெ.பொ.க.கொடி ஏற்று விழா மற்றும் சைக்கிள் பேரணி, 1990இல் நடைபெற்றபோது பங்கேற்ற 30க்கும் மேற்பட்ட தோழர்களுக்குச் சுவையான அசைவ உணவு தயாரித்து, மகிழ்ச்சியாக அவருடைய வீட்டிலே விருந்தளித்து மகிழ்ந்தார்கள் தோழர்கள் கரிபால்டி, கிருசா கரிபால்டி.

30.7.2020 மாலை மறைவுற்ற தோழர் கரிபால்டியின் உடல் மறுநாள் 31.7.2020 காலை 10மணி அளவில் மேற்குத்தாம்பரம் மின் மயானக் சுடுகாட்டில் எரியூட்டப்பட்டது. நோய் தொற்றையும் பொருட்படுத்தாமல் தோழர் கரிபால்டியின் மீது கொண்ட அன்பின் பால் இருநூறுக்கும் மேற்பட்ட தோழர்கள் இடுகாட்டில் கூடி வீரவணக்கம் செலுத்தினர். தோழர் கரிபால்டியின் மறைவிற்குத் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வர் பன்னீர் செல்வம், இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டனர். தமிழக அமைச்சர்கள் மற்றும்



அரசியல் பிரமுகர்கள் ஆறுதல் கூறினார்கள். தோழர் வே.ஆனைமுத்து, தோழர் சங்கரய்யா, சுப. வீரபாண்டியன், தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா ஆகியோர் குடும்பத்தினருக்கு தொலைபேசி மூலம் ஆறுதல் கூறினார்கள்.

தோழர் கரிபால்டி அவர்களின் நினைவு கூரும் படம் திறப்பு மற்றும் வீரவணக்கம் நிகழ்வு ஆகஸ்டு 05.08.2020 ஆம் நாள் அவரது இல்லத்தில் நடைபெற்றது. தோழர் கரிபால்டியின் சகோதரரும், முன்னாள் அமைச்சருமான சின்னைய்யா வீரவணக்கம் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நெகிழ்வாய் கண்ணிர் மல்கப் பேசினார். படத்தைத் திறந்து வைத்து தோழர். என்கிற ஆர்.கிருஷ்ணமூர்த்தி நீண்ட உரை நிகழ்த்தினார். தோழர்கள் வி.ஆர்.சிவராமன், ஆனை. பன்னீர் செல்வம், துரை.மணிவண்ணன் வெஸ்லி, முரசு பன்னீர் செல்வம், சந்திரசேகர், அரேவா பன்னீர்செல்வம், பூவை மணி உள்ளிட்ட பலர் தோழர் கரிபால்டியின் பேராற்றலை நினைவுகூர்ந்து வீரவணக்கம் செலுத்தினர். அவரது இளைய சகோதரர் கி.மாஜினி நெஞ்சுருகும் கவிதையை வாசித்தார். தோழர் கரிபால்டியின் அன்பு மகள் க.கி.ஆதிரை தனது சார்பிலும்,தனது தாயார் கிருசா சார்பிலும் கண்ணீர் மல்க நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களுக்கு நோய் எதிர்ப்பு சானிடேசர், கபசுரக் குடிநீர், பூச் செடிகள் மற்றும் சுவையான உணவும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் தாம்பரம் மா.சுப்ரமணி, தங்கராசு, கோவிந்தன், கு.கிருஷ்ணமூர்த்தி, மேகநாதன், கே.பாலாஜி, காஞ்சனா ரவி, அன்பு பழனி, குணா உள்ளிட்ட ஏராளமான தோழர்களும், கரிபால்டியின் உறவினர்களும், நண்பர்களும் இந்தப் படத்திறப்பு, வீரவணக்கம் நிகழச்சியில் கலந்து கொண்டனர்.

- தாம்பரம் **மா.சுப்பிரமணி**

# "நான்"
# "ஊரடங்கும்" "இந்திய அரசும் தமிழக அரசும்" "சிந்தனையாளன்" இதழும்

"சிந்தனையாளன்" இதழ் நான் தொடங்கிய மூன்றாவது கிழமை இதழ். மக்கள் போதிய ஊக்கம் இல்லாததால், திங்கள் இதழாக இன்று வெளிவருகிறது.

"நான்" ஏன்?

2011ஆம் ஆண்டில், நானும் தோழர் தமிழேந்தியும் கடைசி தடவையாக, கோவை மாவட்டம் ஆவணக் காப்பகத்தில் படித்தோம். எல்லாம் பழைய ஏடுகள். நான் ஒரே நாளில் 15,000 பக்கங்களைப் படித்தேன் - எல்லாம் 150 ஆண்டு கடந்த ஏடுகள்; தூசி படிந்தவை; தூசி நச்சு ஏறியவை.

இன்று 'கொரோனா' நோய்அணு பரவாமல் தடுக்க முகக் கவசம் அணிவது போல், எல்லா மக்களும் முகக் கவசம் அணிய அறிவுரை கூறினால் போதும்.

ஆனால்; இந்திய அரசும் தமிழக அரசும் வலுக்கட் டாயமாக-மக்கள் செயல்படுவதைத் தடுத்தார்கள். முகக் கவசம் அணிந்த பிறகு ஒருவரோடு ஒருவர் பழகலாம், வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் காற்றிலுள்ள நுண்ணு யிர்கள் மூக்கு வழியாக இன்னொருவர் உட்கொள்ளும் காற்று வழியாக நுழையாது.

"நான்" அவ்வளவு தூசி படிந்த பக்கங்களை நாள் முழுவதும் படித்தேன். நச்சை உட்கொண்டேன்; உணர்வை இழந்தேன்.

அடுத்த நாள், அதிகாலை தமிழேந்தி ஒரு திருமணத்தில் பங்கேற்க, தொடர் வண்டிக்குப் புறப்படும் நேரத்தில்-சூலூர் க.தேவராசு, ம.சரவணக்குமார், புலவர் ந.கவுதமன் மூவரையும் உசுப்பி விட்டுப் புறப்பட்டார்.

"நான்" என்ன ஆனேன்?

நான் படுக்கையிலேயே மலம், சிறுநீர் கழித்துவிட்டேன்; உணர்விழந்துவிட்டேன். ஒரு மணிநேரம் கழித்து, முன்சொன்ன இருவர் கீதா விடுதிக்கு வந்தவுடன் என்னைக் கழுவி, தானியங்கியில் ஏற்றி, தனியார் மருத்துவமனைக்குப் போய்ச் சேர்த்தார்கள். மருத்துவர்களிடம் 1. க. தேவராசு-நான் பெரிய மகன், அடுத்தவர் 2. ம. சரவணக்குமார் இளைய மகன் என வாக்குமூலம் அளித்தார்கள்.

"நிறைய செலவாகுமே" என்று மருத்துவர்கள் கூற, அதற்கு இருவரும் இணக்கம் தெரிவித்தார்கள்.

நான் காலை 9 மணிக்குக் கண் விழித்தேன். ந. கவுதமன் நிறைய பணத்துடன்; கோவை கு. இராம கிருஷ்ணன் பலருடன் என் முன் நின்றனர்.

அடுத்த நாள் என் மூத்த மகன் ஆனை. பன்னீர் செல்வம் கோவைக்கு வந்தார்.

செலவான தொகையைப் பிறகு சூலூர் தோழர்களுக்குக் கொடுத்தேன். இது "நான்".

இப்போது, இந்திய அரசு, தமிழக அரசு இரண்டும் என்ன செய்தன?

1. 2020 மார்ச்சு 25 முதல் ஏப்பிரல் 14 வரை 21 நாள்கள்;
2. ஏப்பிரல் 15 முதல் மே 3 வரை 19 நாள்கள்;
3. மே 4 முதல் மே 17 வரை 14 நாள்கள்;
4. மே 18 முதல் மே 31 வரை 14 நாள்கள்;
5. சூன் 1 முதல் சூன் 30 வரை;
6. சூலை 1 முதல் சூலை 31 வரை;
7. 2020 ஆகத்து 1 முதல் 31 முடிய 31 நாள்கள்.

**ஆக, மார்ச்சு 25 முதல் 2020 ஆகத்து 31 முடிய 160 நாள்கள்!**

தமிழ்நாட்டில்,

1. பேருந்துகள், தொடர் வண்டிகள் ஓடவில்லை;
2. பள்ளிகள், கல்லூரிகள் இயங்கவில்லை;
3. சிறுதொழில்கள் இயங்கவில்லை;
4. தேநீர் விடுதிகள், பெரிய உணவகங்கள் தொடர்ந்து இயங்கவில்லை;
5. மருத்துவமனைகள் சரிவர இயங்கவில்லை;
6. சிற்றேடுகள் வெளிவரவில்லை;

**2020 ஏப்பிரல் முதல் 2020 சூலை வரை 4 மாதங்கள் 'சிந்தனையாளன்' திங்கள் இதழ் வெளியிடப் படவில்லை.**

இன்னும் எத்தனை நாள்கள் ஊரடங்கு நீட்டிக்கப் படுமோ, யார் கண்டார்? பெரியார்-நாகம்மை அறக்கட்டளை அறங்காவலர் கூட்டம், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியின் பொதுக்குழு 2020 மார்ச்சு 21, சனி, 22 ஞாயிறு இரு நாள்கள் நடத்தப்படவில்லை!

காவல் துறை கட்டுப்பாட்டுக்கு அஞ்சி 2020 ஏப்பிரல் 14 முதல் ஏப்பிரல் 29 வரை மேதை அம்பேத்கர், பாவேந்தர் பிறந்த நாள்கள் நடத்தப்படவில்லை.

என் பிறந்த நாள், எந்த ஆண்டிலும் வீட்டோடு சரி. இந்த 21-6-2020, 96ஆம் அகவை பிறந்த நாள் அப்படியே! நாம் "சிந்தனையாளன்" இதழ் உறுப்பினர்களுக்கு அன்பார்ந்த வேண்டு கோளாக, நீங்கள் எம் அமைப்புகளை மனமார நம்புங்கள்.

பெரியார் வரலாறு-நானும் கவிஞர் தமிழேந்தியும், மற்ற தோழர்களும் திரட்டிய சான்றாவணங்கள் மூன்றாண்டுகள் - 2009, 2010, 2011, என் 96ஆம் பிறந்த நாளில் வரவேண்டும் என 21.06.2020இல் 8-9-2019-இல் வேலூரில், மார்க்சியப் பெரியாரியப் பொதுக்குழுவில் முடிவெடுத்தோம். இன்னும் என் 96ஆம் அகவை முடிய, 9 மாதங்கள் இடைவெளி உள்ளது.

இது போதும்! நாம் முயன்றால் இன்னும் 4 மாதங்களில், அழகான பதிப்பாக "பெரியார் வரலாறு" வெளி யிட்டு, தமிழ் மக்களின்-பெரியார் பெருந் தொண்டர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம், வாருங்கள், வாருங்கள்!

1-8-2020 **- வே. ஆனைமுத்து**

# உழவினார் கைம்மடங்கின்...

முனைவர் இர. நடராசன்

(புதிய வெள்ளைக்காரன் என்னும் பெயரில் 14 சிறுகதைகளை எழுதி நூலாக்கி வெளியிட்டவர்)

அண்மையில் பெய்த பெருமழையால் பாலையாக இருந்த எங்கள் கிராமம் பச்சைப் பசேலெனச் சோலையாக மாறியுள்ளது. எங்கள் கிராமத்தை விட்டுப் 'புலம்பெயர்ந்து' நான் நகரவாசியாக மாறி முப்பது ஆண்டுகளாகின்றன. எப்போதாவது சொந்த பூமியை எட்டிப் பார்ப்பதோடு சரி! என்னால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றால் கூட எங்கள் கிராமத்து மக்கள் என்னை விடமாட்டார்கள். குறிப்பாக விவசாயம் செய்வதில் உள்ள சிரமங்கள், விவசாயம் தங்களை எப்படிக் கடனாளிகளாக ஆக்கிவிட்டது, மாற்றுவழி தெரியாமல் தாங்கள் எப்படி மாட்டிக் கொண்டு தவிக்கிறோம் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் வருத்தப்பட்டுக் கூறும்போது, நெஞ்சில் இரத்தம் வடியும்! இவர்களுக்கு என்ன வழி என்று தெரியாமல் நான் மட்டும் இவர்களை விட்டுவிட்டுச் சொகுசு வாழ்க்கை வாழும் குற்ற உணர்வு என்னை உறுத்திக் கொண்டே இருக்கும். தற்போது, கடந்த பல ஆண்டுகளாக இல்லாத மகிழ்ச்சியை அவர்கள் முகங்களில் இந்த மழை கொண்டு வந்திருக்கிறது என்பது எனக்கு ஓர் ஆறுதலான செய்திதான். ஏர் உழுவது, நாற்றுப் பறிப்பது, நடவு செய்வது என எல்லாரும் அவ்வளவு சுறுசுறுப்பாக இயங்குவதைப் பார்க்கும் போது, விவசாயம் செய்ய ஆட்கள் கிடைப்பதில்லை; இருப்பவர்களும் "விவசாயம் செய்ய விரும்புவதில்லை" என்ற பிரச்சாரங்களிலெல்லாம் உண்மை இருக்கின்றதா என்ற சந்தேகம் எனக்குள் எழுகின்றது.

பாரதியைப் போல,

"ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும் நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப்பார்த்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்"

நெஞ்சைப் பறிகொடுக்காமல் பட்டணத்து வாசியாக நான் ஏன் ஓடினேன்?

என்னுடைய மக்களை, என்னுடைய மண்ணை, என் தொழிலான விவசாயத்தை உதறிவிட்டு நான் ஓடிவந்தது பெருங்குற்றந்தான்! ஆனால், இந்தக் குற்றத்தை நான் ஏன் செய்தேன்? விளக்க முயல்கிறேன். தண்டனையைப் பின்னர் நீங்கள் தீர்மானியுங்கள்!

எங்கள் கிராமத்தினர் அனைவரும் நெல்பயிரிடும் வேளாண் பெருங்குடிமக்கள். அபிதான சிந்தாமணியில், கூறப்பட்டிருக்கும் 108 வகையான நெல் ரகங்களில் பெரும்பாலானவற்றை அவர்கள் பெயரிட்டுக் கூறும் போது எனக்கு பிரம்மிப்பாக இருக்கும். குறிப்பாக, ஆர்க்காடு, கிச்சிலி என்னும் ஆறு மாத சம்பாப் பயிர் வளரும் அழகைப் பார்த்தவர்களால் மட்டுமே அப்பெயர் சொல்லும் போது பரவசப்பட முடியும். அச்சு மட்டமாக வளர்ந்து, பூப்பூத்து, சாயாமல் நிற்கும்போதும், சரி நெற்கதிர்கள் முற்றித் தரையோடு படுத்து அறுவடைக்குத் தயாராகும் போதும் சரி, வயல்வெளிகளில் நடப்பது எவ்வளவு ரம்மியமாக இருக்கும் தெரியுமா? சம்பாப் பட்டத்தில் கிச்சிலி, நவரைப் பட்டத்தில் வெள்ளைக்கார், சொர்ணவாரிப் பட்டத்திற்குக் குள்ளக்கார் இப்படியாக, அதிக மழை வெள்ளத்தைத் தாங்கும் நெல் ரகங்கள், வறட்சியைத் தாங்கும் நெல் ரகங்கள் என்று எத்தனை எத்தனை நெல் ரகங்கள்! என்னென்ன பயிர் வகைகள்! இப்பொழுது இவை எதுவுமே இல்லை! இவற்றை ஒழித்தது யார் தெரியுமா? நானும், என்னைப் போன்ற வர்களும்தான்!

கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுக் கிராமத்தில் கால் வைத்தபோதுதான், "பசுமைப்புரட்சி" என்ற பெயரில் எங்கள் ஊரில் அரசாங்கம் உள்ளே நுழைந்தது.

"அதிக விளைச்சல் அதிக இலாபம்; கட்டு கலம் காணலாம்; கதிர் உழக்கு நெல் காணலாம்" என்றெல்லாம் சொல்லி, ஐ.ஆர். ரகங்களை எங்கள் ஊரில் தமிழக வேளாண்துறை எங்களைப் போன்றவர்கள் மூலம் நுழைத்தது.

"படித்தவன் சூதும் வாதும் செய்தால்
போவான் போவான்
ஐயோ வென்று போவான்"

அதனால், படித்தவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள் என்று படிக்காத எங்கள் ஊர் மக்கள் படித்த என் போன்றவர்களை நம்பி, புதிய நெல் ரகங்களுக்கு வழிவிட்டனர். குறிப்பாக, ஐ.ஆர்.8, ஐ.ஆர்.20 நெல் ரகங்கள் மிகவும் பிரபலம். அதிக உரமேற்று, அதிக விளைச்சலைத் தரும். மழை, வெள்ளத்திற்குப் பயிர் சாயாது 'நிறைந்த மகசூல் நிச்சயம்' என்ற எதிர்பார்ப்புகளோடு எங்கள் கிராமங்களில் இந்த விதைகளைப் பரப்பினோம்.

"சம்பாவில் ஐ.ஆர்.8, 20" நவரையிலும் சொர்ணவாரியிலும் ஆடுதுறை நெல் ரகங்கள் சிவப்பரிசி வேண்டுமா? டி.கே.எம்.9 சன்ன அரிசிக்குப் பொன்னி, பவானி, ஏ.எஸ்.டி.15, மோட்டா நெல் ரகமா ஐ.ஆர்.8,

ஜெயா, இப்படி வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி நெல் ரகங்களை வேளாண்மைத்துறை கொட்டித் தீர்த்தது.

தழை, மணி, சாம்பல் (NPK) சத்துக்கள் ஏக்கருக்கு முறையே 40:20:20 என்ற அளவில் இடவேண்டும் என்றார்கள். அதாவது ஒரு ஏக்கருக்கே 4 மூட்டை காம்ப்ளக்ஸ் உரம் 1 அல்லது 1½ மூட்டை யூரியா போட்டவர்களெல்லாம் உண்டு.

இப்படிச் செயற்கை உரங்களை இடுவதனால் என்ன நேரும் என்று எங்களுக்குத் தெரியாது; யாரும் சொல்லவுமில்லை. பயிர்களில் பூச்சித் தாக்குதல் ஆரம் பித்தது. பயிரை எடுத்துக் கொண்டு வேளாண் அலுவலகங் களின் படிக்கட்டுகளைத் தஞ்சமடைந்தோம்.

இது குருத்துப் பூச்சி - ஃபாஸ்மாபிடான் அதாவது டிமெக்ரான் தெளியுங்கள். இது இலைச் சுருட்டுப்புழு என்டோ சல்ஃபான் - தயோடான், எக்கலாக்ஸ் எது வேண்டுமானாலும் அடிக்கலாம். டி.டி.டி.25% (DDT25%) கூடத் தெளிக்கலாம். மருந்து எத்தனை லிட்டர் தண்ணீரில் எந்த அளவு கலக்க வேண்டும் என்று வகுப்பு எடுத் தார்கள். அடிப்பது யார்? நாங்களே கலக்கி நாங்களே ஒருவழியாகப் பூச்சி மருந்து தெளித்த போது அதன் பாதிப்பு படிப்பு அறிவில்லாத எங்கள் மக்களைத்தான் முழுதாகச் சென்றமடைந்தது. பூச்சித் தாக்குதலில் இருந்து ஓய்வதற்குள் பூஞ்சாணத் தாக்குதல், செங்கல் வடிவத்தில் நெற்பயிரில் சிவப்பாகத் திட்டுத்திட்டாகத் தெரிகிறதா? தெளியுங்கள் டைத்தேன் இசட் 78. இலை களின் ஓரங்கள் கருகுகின்றனவா? பிடியுங்கள் அக்ரிமைசின். அது பாக்டீரியல் இலைக் கருகல் நோய், கதிர் தோன்றும் போது பூச்சியா? 'புகையானாக' இருக்கலாம் அல்லது கதிர்நார்வாய்ப் பூச்சியாக இருக்கலாம் பி.எச்.சி.10% தூவுங்கள்; கார்பரில் தெளியுங்கள்! புரடீனியப் புழுக் களைப் பார்த்தால் விளக்குப் பொறி வைத்துப் பிடியுங்கள்!

இவற்றிடமிருந்தெல்லாம் தப்பி நெல் பயிரும் வளர்ந்து நெல் மகசூலும் பரவாயில்லைதான்! ஆனால் ஓரிரு போகங்களிலேயே மீண்டும் பிரச்சினை!

''ட்வார்ஃப் வகை'' என்றும் ''குட்டைவகைப் பயிர்கள்'' என்றும் கூறி பயிரிடப் போய் அவை புகழ்பெற்ற ஆங்கில நாவலான ''கலிவர்ஸ் டிரேவலில்'' வரும் ''**லில்லிபுட்டன்-குட்டை மனிதர்கள்**'' மாதிரியில் வளராமல் நின்றுவிட்டன. வயல்வெளிகளில் இந்தக் குட்டைப் பயிர்கள் வளர்ச்சியற்று, ஜப்பானிய 'போன்சாய்' போல நின்ற நிலையைப் பார்த்து நாங்கள் நெட்டை மரங்களாக நின்றுவிட்டோம். இந்நோய் இலைச் சிறுத்தல் நோயாம்! துங்ரோ வைரஸ் நோயாம்! இதற்கு என்ன செய்வது?

''நெல் பயிரிடுவதை நிறுத்துங்கள்! கழனியில் உள்ள நெற்பயிரின் கட்டைகளை எல்லாம் திரட்டி எரித்து விடுங்கள்; அப்பொழுதுதான் அடுத்த பயிராவது தப்பிக்கும்'' என்று சொன்னார்கள். எல்லா வகையான கடன் வசதி, 25 சதவீத, 50 சதவீத மானிய விலை யில் பூச்சி மருந்து, கைத்தெளிப்பான், விசைத் தெளிப் பான், ஏரியல் ஸ்ப்ரே... இப்படி கிராமத்தையே பூச்சி மண்டலமாக மாற்றிய பின் ''பயிரிடாதீர்கள்'' என்று ஆலோசனை வழங்கினார்கள்.

எங்கள் கிராம மக்கள் என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே, தூக்கு மாட்டிக் கொண்டு நான் சாகலாம். ஆனால் நான் வேதாளம் கதையில் வரும் விக்கிர மாதித்தன் போல, சற்றும் மனந்தளராமல் மீண்டும் வேளாண்மை அதிகாரிகளின் கருணைக்கே காத்து நின்றேன். அறிவியல் பூர்வமான விவசாயத்தின்பால் எனக்கிருந்த நம்பிக்கைதான் இதற்குக் காரணம். இந்த முறை அவர்கள் ''பிரிஸ்கிரிப்ஷன்'' வேறுவிதமாக இருந்தது.

''தழை, மணி, சாம்பல் சத்து சதவீதம் 40:20:20 என்பது மிகவும் அதிகம். இனி 30:15:15 என்று மாற்றி உரமிடுங்கள்! நாங்களும் வேறு நெல் ரகங்களை மாற்றித் தருகிறோம். இனி நாற்று விடும்போதே அக்ரசான், செரசான், திரப்டான் மூலம் விதை நேர்த்தி செய்யுங்கள்! நாற்றங்கால்களில் டி.ஏ.பி. (DAP) மட்டும் போதும். குருத்துப் பூச்சியைக் கட்டுப்படுத்த நாற்றங் காலிலேயே கார்போ பியூரான் குருணை மருந்துகளை இடுங்கள். வளர்ந்த பயிரில் களைக்கொல்லியைப் பயன் படுத்துங்கள். அந்துப் பூச்சிகளை விளக்குப் பொறி வைத்துக் கட்டுப்படுத்துங்கள்.''

**இந்தச் சுழற்சி முடிவதற்குள் துயரம் வேறொரு வடிவில் வந்தது. வயல் முழுவதும் பாய்ச்சிய நீர் நுரைத்துக் கொண்டு நின்றது. மண் இளகும் தன்மையே போய்விட்டது. மண் பரிசோதனை செய்தார்கள்! PH வேல்யூ தாறுமாறாக உள்ளதாம்! அதிகமான செயற்கை உரப் பயன்பாட்டால் மண்ணின் காரத்தன்மை அமிலத்தன்மை அதிகமாகிவிட்ட தாம்! 'ஜிப்சம்' இட்டுப் பாருங்கள் என்றனர். எங்கள் ஊரில் ஒரு பெரியவர் கேட்டார்.**

''ஏன் தம்பி? நிலத்தில் இருந்த நாங்கூழ்ப் புழு வெல்லாம் எங்கே போய்விட்டன? இப்புழுக்கள்தானே மண்ணை இளக்கும்? பூச்சி மருந்துகள் அவற்றையும் அழித்துவிட்டனவா?''

எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. மனோன் மணியம் சுந்தரனார், நடராசன் என்னும் கதாபாத்தி ரத்தின் மூலம் இப்புழுக்களின் பெருமையைப் பாடியது மட்டும் நினைவிற்கு வந்தது!

''ஓகோ! நாங்கூழ்ப் புழுவே உன்பாடு
ஓவாப்பாடே உணர்வேன் உணர்வேன்
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில்மிதும்
உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து நீ!''

மண்ணைத் தின்று, மெழுகு போலாக்கிப் பதப்படுத்தா விட்டால் பயிர்கள் எப்படி வளரும் என்று 19ஆம் நூற் றாண்டிலேயே மனோன்மணியம் வினவியது. ஆனால்

இந்தக் காலத்தில் போய் பூச்சி, பூஞ்சாண மருந்துகளால் மண்புழுக்களை அழித்து விட்டோமே என்ற கழிவிரக்கத்தால் மனம் தவித்தது! அதற்குத் தீர்வு என்ன?

தீர்வு இருக்கிறது என்று அதிகாரிகள் சொன்னார்கள்!

"நீலப்பச்சைப் பாசி நெல்லுக்கு நல்ல ராசி"

"அசோஸ் பைரில்லம், வேப்பம் பிண்ணாக்கு இவை நிலவளத்தை மேம்படுத்தும். செயற்கை உரம் இல்லாமல் விவசாயம் இனி இல்லை. பூச்சிக்கொல்லி பயன்படுத்தாமல் பயிர்கள் இல்லை என்றாலும் மண் வளம் காக்க இயற்கை உரட்டு நிலவளத்தை மீட்டெடுங்கள்! மாற்றுப் பயிர்த்திட்டம் பயிர்ச்சுழற்சி முறை கட்டாயம் தேவை."

அதாவது, விட்டஇடத்திற்கே மீண்டும் விவசாயம் வந்துவிட்டது. இதற்குள் என்னவெல்லாம் நடந்துவிட்டன.

* பாரம்பரிய விதைகளெல்லாம் காணாமல் போய் விட்டன. பன்னாட்டு விதை நிறுவனங்களின் பிடியில் நம் விவசாயம் சிக்கிக்கொண்டுவிட்டது.
* மேலை நாடுகளில் தடைசெய்யப்பட்ட பூச்சிக் கொல்லி மருந்துகள் இங்கு தாராளமாகக் கிடைக்கின்றன.
* காம்ப்ளக்ஸ், யூரியா, பொட்டாஷ் உரங்கள் விலை மூன்று மடங்கு, நான்கு மடங்கு உயர்த்தப்பட்டுவிட்டன.
* மின்பற்றாக்குறை-கிணற்றுப் பாசனம் அடியோடு பொய்த்துப் போய்விட்டது-இருக்கும் மின்சாரத்தைக்கூட பயன்படுத்த இயலாச் சுற்றுச்சூழல் அமைப்பு! பன்னாட்டு கம்பெனிகளின் கழிவறைகள் கூட ஏ.சி.யில் மிதக்கும் போது, ஏழை விவசாயிகளுக்கு மானியத்தை நிறுத்த வேண்டும் என்ற பொதுக் கருத்தோட்டம் பரப்பப்படுகிறது.
* விவசாய மானியத்திற்கு எதிராக மக்கள் கருத்து உருவாக்கப்படுகிறது. விவசாய மானியம் 50 விழுக்காட்டுக்குமேல் வளர்ந்த நாடுகளில் உள்ள தனைத் திட்டமிட்டே மறைத்தோ அல்லது இருட்டடிப்புச் செய்தோ செய்திகள் வெளிவரு கின்றன.
* உணவு உற்பத்தி வியாபாரமாக்கப்பட்டுப் பாரம்பரிய நெல், தானிய உற்பத்தியைவிட பணம் ஈட்டும் பயிர் வகைகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது.

மொத்தத்தில், உணவு எப்படிக் கிடைக்கின்றது, யார் இவற்றை உற்பத்தி செய்கிறார்கள் என்பவை பற்றிய எந்தப் புரிதலும் இல்லாமல், நுகர்வதற்கு மட்டுமே நுகர்வோர் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவை மிக மிக ஆபத்தான போக்குகள்! எங்கள் மக்களின் இயலாமையைப் புரிந்துகொண்ட பல நிறுவனங்கள் எங்கள் விவசாயிகளிடமிருந்து அவர்களின் மண்ணைப் பிடுங்க முயற்சிக்கின்றன. நான் என்ன செய்ய முடியும்?

"நிலம் எங்கள் தாய்!" எனினும் என் தாயைத் தவிக்கவிட்டு விட்டு நான் ஓடிவந்துவிட்டேன்! சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாகிறார்கள்! நகர்ப்புறத்தில் நானாவித வசதிகளோடு நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இது குற்றமில்லையா?

"உழவினார் கைம்மடங்கின்" உலகமே இயங்காது என்கிறார் வள்ளுவர்! எனக்கு என்னவோ அவர்கள் கைம்மடங்குவது முஷ்டியை உயர்த்துவதற்காக என்று தோன்றுகிறது!

அதன்பின் உலகமே அவர்கள் கைகளில்தானே!

## தனகோடி அம்மாள் மறைவு

2.2.2020 ஞாயிற்றுக்கிழமையன்று அதிகாலையில் விழுப்புரம் மாவட்டம், மணம்பூண்டியில் வசித்து வந்த மணம்பூண்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும் முகையூர் ஒன்றிய முன்னாள் ஒன்றிய தி.மு.க. செயலாளர் க. பாண்டுரங்கன் அவர்களின் துணைவியாரும்,

தந்தை பெரியார், தவத்திரு. ஞானியார் அடிகளின் நேசனும் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் விசுவாசியும், சிந்தனையாளன் வாசகரும், மணம்பூண்டி ஊராட்சி மன்ற தி.மு.க. செயலாளருமான பா. கார்த்திகேயனின் தாயாருமான திருமதி. இசையரசு (எ) தனகோடி அம்மையார் இயற்கை எய்தினார்.

செய்தியறிந்து மாவட்ட ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளை தி.மு.க. முன்னோடிகள், பெரியார் தொண்டர்கள் உள்ளிட்ட அனைத்துக் கட்சி முன்னோர்கள் திரளாக வந்திருந்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

செய்தி : **சேகர் (எ) ஆ. குணசேகரன்**

## சிந்தனையாளன் பொங்கல் மலர்-2020

வெளியீட்டில் என் பணி என்பது பற்றி மாநாட்டில் நன்றியுரைக்காக கு. தொல்காப்பியனை அழைத்த போது மேடையில் ஏறி கூட்டத்தைப் பார்த்ததும் நான் பேச வேண்டிய வார்த்தைகள் எதுவும் வாயைவிட்டு வரவில்லை. இருப்பினும் நான் நன்றி கூற நினைத்தவர்களுக்கு இதன் மூலம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று எழுதி இருந்தார். பிப்ரவரி மாத சிந்தனையாளன் இதழில் குறிப்பிட்டிருந்தார். அதை நான் அதாவது கு. தொல்காப்பியனின் அம்மாவாகிய கு. இன்பவடிவி (எ) கு. இன்பவல்லி படித்தேன். அப்போது நான் அடைந்த மகிழ்ச்சி அளவில் அடங்காது. அப்போது என் நினைவிற்கு வந்தது வள்ளுவரின் குறள்தான்

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற குறள் வாக்கு அப்படிப்பட்ட மகிழ்ச்சியை நான் அடைந்தேன். வாழ்க அவரின் தொண்டு என வாழ்த்துகிறேன்.

இங்ஙனம் உன் அம்மா

**கு. இன்பவடிவு**

# முனைவர் லேனா தமிழ்வாணனின் பாராட்டு மடல்

பெறுநர்

மானமிகு திரு. வே. ஆனைமுத்து அவர்கள்
பதிப்பாசிரியர்
பெரியார் சிந்தனைகள், சென்னை-53.

அன்புமிக்க ஐயா அவர்களுக்கு,

வணக்கம். வாழிய நலம்.

உங்களின் அரும்பணியை அறிமுகப்படுத்தியமைக்காக மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் வேலூர் மாவட்ட ஒன்றியச் செயலாளர் திரு. ரவி அவர்களுக்கு, நானும் என் இளவல் ரவி தமிழ்வாணனும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வது எங்கள் கடமை.

**20 தொகுதிகளையும் கண்டும், உணர்ந்தும், புரட்டிப் பார்த்தும் பிரமிப்பில் ஆழ்ந்துபோனேன். இவை உங்களது 85-ஆவது வயதில் பதிப்பிக்கப் பட்டவை என எண்ணும்போதே அப்படி ஒரு வியப்பு மேலிடுகிறது. எப்போது எழுத்திலிருந்தும், பதிப்புப் பணியிலிருந்தும் விடுபடலாம் என்று நான் சிந்திக்கத் துவங்கிய இவ்வேளையில், உங்கள் இப்பதிப்புச் செல்வங்கள் என்னை மறுபரிசீலனை செய்ய வைத்து விட்டன. பதிப்புலகின் மிகச்சிறந்த முன்னுதாரண மனிதர் நீங்கள் என்கிற முடிவிற்கு நான் வந்திருக்கிறேன்.**

தந்தை பெரியார் அவர்களின் அனைத்து ஏடுகளையும், பேச்சுப் பதிவுகளையும் தனி மனிதப் போராளியாகச் சரி பார்த்து, எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை, ஒருமை பன்மை மயக்கம், கூறியது கூறலை நீக்கல் என அனைத்தையும் ஒருசேரச் சரிபார்த்திருக்கிறீர்கள்!

பெரியார் அவர்களின் பேச்சை ஒலிநாடாவில் கேட்டவன் என்ற முறையில், அவர்கள் மொழியலங்காரத்துடன் பேச மாட்டார்கள்; கருத்திலேதான் அவர்களது கவனம் என்பதை நான் அறிவேன். இவை அனைத்தையும் எழுத்துருவிற்கு மாற்றுவது சற்றும் எளிதல்ல. கடுமையாக வேலை வாங்கி யிருக்கும். அசராமல் செய்திருக்கிறீர்கள்! ஐயா சில நேரங்களில் கடுமையான சொற்களைப் பயன்படுத்துவார்கள். அச்சிலேற் றும்போது இவை அவசியமில்லை. அவை ஐயாவுக்குப் பெருமை சேர்க்கா என்பதையும் நீங்கள் கவனத்தில் கொண்டு பதிப்பித்திருக்கிறீர்கள்.

திராவிட இயக்கம் சார்ந்த அமைப்புகள் ஏராளமாக இருந்தும், 1973 வரை ஐயாவின் சிந்தனைகளை எந்த அமைப்பும் பெரிய அளவில் தொகுத்து வெளியிடவில்லை. சிறு, சிறு கையேடுகளாகவே இவை வலம் வந்தன.

**இந்நிலையில் 1972 முதல் இதற்கான களத்தில் இறங்கி, ஐயாவின் சிந்தனைகளுக்கு நிரந்தர வடிவம் கொடுக்கும் உங்கள் சிந்தனையே அருமை என்பேன். பலருக்கும் கடிதம் எழுதி, குருவி தானியம் சேர்த்த கதையாய் சிறுகச் சிறுகத் திரட்டி முதல் நிலைச் சான்று கள் மற்றும் இரண்டாம் நிலைச் சான்றுகளாகக் கிடைத்த உதிரிப் பூக்களை மாலையாக்கிய திறத்தை என்னென்பேன்!**

இப்படிப்பட்ட தொகுப்பைப் பொறுத்தவரை முன்மாதிரிப் பதிப்புகள் ஏதும் இல்லாத நிலையில் ஆழ்ந்து சிந்தித்து, நன்கும் சுயமாகவும் தெளிவடைந்து, பொருள்வாரியாக, காலவாரியாக, 71 பெருந் தலைப்புகளுள் இவற்றை உள்ள டக்கிய அழகு இருக்கிறதே, இன்றைக்கெல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கலாம்.

பொருளடக்கமும் பெயர்ச்சொல் அடைவுகளும் பக்கங் களை அடைக்கிற விஷயம் எனப் பலரும் விலக்கி விடுவர். இல்லை. இவை அவசியம் வேண்டும். இதுவே தலைப்பு வாரியாக, நபர் வாரியாகத் தேடுவோர்க்கு இந்த 20 தொகுதிக் கடலில் இத்தேடலை எளிதாக்கும் என்பதை நன்கு உணர்ந்து, உறுதி காட்டிப் பதிப்பித்ததும் மிக நல்ல யோசனை என்பேன்.

ஐயாவின் வைர வரிகளைத் தங்கத்திற்குள்தான் பதிக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவராய் நூல்களின் அட்டைகளில் தங்க நிறத்தைப் பயன்படுத்தியது அற்புதம். சாதாரண முறையில் ஏனோ தானோ வெளியீடாக இது அமைந்துவிடக்கூடாது என்று முடிவு செய்து, பின்லாந்திலிருந்து அட்டைகளைக் கப்பலில் வரவழைத்த முயற்சி என்பது, இள வயதினரே தயங்குகிற விஷயம். இதையுமல்லவா நிவர்த்தி செய்து நேர்த்தி காட்டிவிட்டீர்கள்! ஒவ்வொன்றிலும் எவ்வளவு அக்கறை!

ஈரோடு நகராட்சி அலுவலகத்திற்கு நீங்களே நேரில் போய் அங்கேயே அமர்ந்து, திரட்டப்பட்ட ஐயாவின் கையெழுத்தை ஒளிப்படி எடுத்து வந்தது மிக அரிய செல்வம். ஐயாவின் கையெழுத்தைக் கண்டுகளித்தேன்.

நன்றிக்குரியோர் ஒருவரைக்கூட விடாமல், நூற்றுக் கணக்கானோரைக் குறிப்பிட்டு, அவர்களையும் அங்கீகரித்த உங்கள் பண்பை மிக விரும்பினேன்.

காலமும், கரையானும் அழித்து ஒழித்து விட்டிருக்கக் கூடிய இந்த அரிய சொத்திற்கு நல்வடிவம் தந்து. தமிழா! பிடிடா உன் சொத்தை! எனத் தந்திருக்கிற உங்களது சேவை நூறு ஆண்டுகள் கடந்தும் போற்றப்படும் என்பது உறுதி.

இன்னும் உங்களுக்குள் உலவும் இலட்சியங்களை, அணிந்துரையிலும் பதிப்புக் குறிப்புகளிலும் கண்டேன். அவற்றையும் ஈடேற்ற உங்களுக்கு நல்ல உடல்நலமும், நீண்ட ஆயுளும் வாய்க்க வேண்டும் என மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

பணிவன்புடன்

எழுத்துச்செல்வர் **முனைவர் லேனா தமிழ்வாணன்**
தலைவர் மணிமேகலைப் பிரசுரம், சென்னை-17.

நகல் :
திரு. த. ரவி அவர்கள், வேலூர்
திரு. சா. குப்பன் அவர்கள், வேலூர்


# தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான ஆணைய உறுப்பினர் ஆச்சாரி தல்லோஜு அவர்களுக்குப் பாராட்டு விழா

## விசுவகரும சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்களின் சார்பில் வே. ஆனைமுத்து ஆச்சாரி தல்லோஜுவுக்கு கணையாழி அணிவித்துப் பாராட்டினார்

தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான ஆணையத்தின் உறுப்பினர் ஆச்சாரி தல்லோஜு அவர்களுக்குப் பாராட்டு விழா, விசுவகருமச் சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்களின் சார்பில் 2020 பிப்ரவரி 9ஆம் நாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சென்னை இராயப்பேட்டை அவ்வை சண்முகம் சாலை விசய மகாலில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்குக் கவிஞர் வேணு. குணசேகரன் தலைமை ஏற்றார்; திருமதி. கலாவதி சண்முகம் வரவேற்புரை ஆற்றினார். தி.ஞா.அருள்ஒளி நிகழ்ச்சித் தொகுப்புரை வழங்கினார். வேலூர் ரூபம் ஆர்ட்ஸ் லோ.ர.குமார் கோரிக்கை விளக்க உரை நிகழ்த்தி னார். அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர் பழங்குடியினர், மதச்சிறுபான்மையினர் பேரவையின் புரவலர்-தலைவர் வே.ஆனைமுத்து அவர்கள் ஆச்சாரி தல்லோஜு அவர்களைப் பாராட்டி தமிழில் உரை நிகழ்த்தினார்.

**வே.ஆனைமுத்து தம் உரையில்,** 2005 பிப்ரவரி 21ஆம் நாள் வேலூரில் லோ.இரத்தினக் குமாரின் மகள் திருமனத்தைத் தம் முன்னிலையில் சீனந்தல் அடிகளார் தமிழில் நடத்திவைத்ததை நினைவு கூர்ந்து பேசினார். அந்நிகழ்வுதான் அடிகளாரும் தானும் சந்தித்துக்கொண்ட முதல் நிகழ்வு என்றும் கூறினார். அவர் சென்னை அம்பத்தூரில் பெரியார்-நாகம்மை அறக்கட்டளைக்கான கட்டட அடிக்கல் நாட்டு விழாவுக்கு அன்று சென்னையில் இருந்த அடிகளார் எதிர்பாராத நிகழ்வாக அங்கு வந்து வாழ்த்துத் தெரிவித்தார் என்பதையும் பெரியார் ஈ.வெ.ரா. சிந்த னைகள் நூலின் இரண்டாம் பதிப்புக்கு 2010ஆம் ஆண்டில் விசுவகர்ம சமூகத்தின் சார்பில் அடிகளார் 86 படிகளுக்கு உரூபா மூன்று இலட்சத்து ஒரு ஆயிரம் முன்பதிவுத்தொகையை சென்னை யில் அதற்கென ஒரு விழா நடத்தி என்னிடம் வழங்கினார் என்பதையும் நெகிழ்வுடன் குறிப்பிட்டார். கியானி ஜெயில் சிங் அவர்களை நினைவுகூர்ந்து பேசு கையில், பிரதமர் இந்திராகாந்தி அரசில் உள்துறை அமைச்சராக இருந்த கியானி ஜெயில் சிங்,மண்டல் குழு பரிந்துரை பற்றி விவாதிக்கத் தம்மை 25.1 1982 ஆம் நாள் மாலை 4 மணிக்கு தில்லியில் தம் அலு வலகத்தில் சந்திக்குமாறு மடல் விடுத்து அழைத்



ததையும் சென்று சந்தித்தபோது, 'பிரதமர் பார்ப்பனர்; அவரை நம்பாதீர்கள்; தெருவுக்குச் சென்று போராடுங்கள். மண்டல் குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளி யிட்டு சாதி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க ஆவன செய்கிறேன்' என்று உறுதி கூறியதையும் கூறியவாறே ஜெயில் சிங் அவர்கள் 30.4.1982ஆம் நாள் மண்டல் குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வெளியிட்டு 'அரசு சாதி அடிப்படையில் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கும்' என்று துணிவுடன் அறிவித்ததையும் நினைவுகூர்ந்து பேசினார். மேலும் ஜெயில் சிங் பற்றிய தன்னுடைய ஆங்கில நூலை, தில்லியிலுள்ள முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பி.சி.பதஞ்சலி அவர்கள் இந்தியில் மொழி பெயர்த்துக் கொடுத்ததையும் இப்போது தம்முடைய இன்றைய தயாரிக்கபட்ட உரையை இங்கே மேடை யிலே அமர்ந் துள்ள இராம்பாபு அவர்கள் தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளதையும் நன்றியுடன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர், மண்டல் குழு அமைக்கப்படு வதற்கும் அந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் வெளி யிடப்படவும் அது நடைமுறைப்படுத்தப்படவும் ஒடுக்கப் பட்டோர் பேரவை எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். அவருடைய தமிழ் உரை

முன்னதாகவே தயாரிக்கப்பட்டு இராம்பாபு அவர்களால் தெலுங்கில் மொழியாக்கம் செய்யப்பட்டு முன்னதாகவே சிறப்பு விருந்தினர் ஆச்சாரி தல்லோஜு அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மின்வாரிய ஓய்வூதியர் களின் சங்கத்தின் செயலாளர் மா. ஞானப்பிரகாசம், ஒடுக்கப்பட்டோர் பேரவையின் திருச்சி மாவட்டத் தோழர் இரூர் ச. இராதா கிருட்டிணன், காஞ்சிபுரம் முற்போக்கு சமூக நீதிப் பேரவையின் நிறுவுநர் டாக்டர் விமுனாமூர்த்தி, மறைமலைநகர் சமூக நீதிப் பேரவை யின் பொருளாளர் மு.அரங்கநாதன், இராணிப்பேட்டை பெல் சமூக நீதிப் பேரவையின் செயலாளர் வே. இராசேந்திரன், புதுக்கோட்டை முத்தரையர் ஆய்வு மய்யத்தின் நிறுவுநர் கு.மா. சுப்பிரமணியன், சென்னையிலுள்ள சென்னபுரி தெலுங்கு விசுவகர்மச் சங்கத் தலைவர் இராம்பாபு, ஆகியோர் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கு மய்ய அரசில் விகிதாசாரம் பங்கீடு கோரியும் தமிழக அரசில் பிரதிநிதித்துவம் பெறா துள்ள விசுவகர்மா, யாதவர், முத்தரையர் சமூகங் களுக்குப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலிலும் வண்ணார், மருத்துவர், மீனவர், குறும்பர், அம்பலக் காரர், போயர், வலையர், குலாலர் ஆகிய சமூகங் களுக்கு மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளின் பட்டியலி லும் உள்ஒதுக்கீடு கோரியும் உரையாற்றினர். பஞ்ச சக்தி ஆசிரியர் கோ. விசுவநாதன் நன்றி கூறினார்.

சிறப்பு விருந்தினர் ஆச்சாரி தல்லோஜு ஆணை யத்தின் அவசரப் பணியாக உறுப்பினர் அனைவரும் தில்லியில் இருக்க வேண்டும் என்று ஆணையத்தின் தலைவர் கட்டளை இட்டிருப்பதால், நிகழ்ச்சிக்கு வர இயலாமை தெரிவித்தும் தெலுங்கில் வாழ்த்துச் செய்தி அனுப்பியதுடன் விரைவில் சென்னை வந்து ஒடுக்கப் பட்டோர் பேரவையின் புரவலர் - தலைவர் வே. ஆனைமுத்து அவர்களைச் சந்தித்து நேரில் வாழ்த்துக் களைப் பெற்றுக் கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் ஆச்சாரி தல் லோஜு அவர்களுக்குக் கலசம் ஏற்பாட்டில் விசுவமலர் செ.நா. சனார்த்தனன் முயற்சியில் விசுவகர்ம சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்களின் ஒத்துழைப்பில் பிற்படுத்தப்பட்டோரின் உரிமைக் காவலர் மாமனிதர் கியானி ஜெயில்சிங் அவர்களின் முகத்தோற்றம் பதித்த 8 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் தோழர் வே. ஆனைமுத்து அவர்களைக் கொண்டு அணிவித்துச் சிறப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவர் நிகழ்ச்சிக்கு வர இயலாமை நேரிட்டதால் வே.ஆனை முத்து தம் உரையில் 'தல்லோஜு அவர்கள் இன்று இந்த நிகழ்ச்சிக்கு வர இயலாமையைத் தெரிவித்

*- தொடர்ச்சி 47ஆம் பக்கம்*

## தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான ஆணைய உறுப்பினர் ஆச்சாரி தல்லோஜி அவர்களின் வாழ்த்துச் செய்தி



அன்புள்ள
திரு. கலச.இராமலிங்கம்
அவர்களுக்கு,

வணக்கம். புதுதில்லி யில் மத்திய அரசு தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு களுக்கான ஆணையத் தின் (NCBC) அவசரக் கூட்டம் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால் நான் அந்த அவசரக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றதனால் (தெலங்கானாவிலிருந்து) சென்னையில் நடைபெறும் கூட்டத்திற்கு வந்து கலந்து கொண்டிருக்க வேண்டிய வாய்ப்பு கிட்டாமல் போய்விட்டது.

இந்தக் கூட்டத்திற்குப் பல சமூக சீர்திருத்த முன் னோடிகளுடனும் நல்ல மனிதர்களுடனும் கலந்து கொள்ளும் வாய்ப்பைத் தவறவிட்டதற்கு வருந்துகிறேன்.

என்னை குடிஅரசுத் தலைவர் அவர்களின் அனுமதியுடன், தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக் கான ஆணையத்தின் உறுப்பினராக மய்ய அரசு நியமித்தது. பிற்படுத்தப்பட்ட மக்களுடைய தற்போ தைய நிலை, அவர்களுக்கு உரிய, அவர்கள் பெற்று அனுபவிக்க வேண்டிய சட்டப்படியான நலன்களைப் பாதுகாப்பது என் கடமையாகச் செய்து வருகிறேன். அரசுகளின் உதவியோடு பிற்படுத்தப்பட்ட மக்கள் நல்ல பலன்களைப் பெற்றிடச் செய்வேன்.

நான் புதுதில்லியில் இருந்தாலும் என் மனம் சென்னையில்தான் இருக்கிறது. நான் சென்னைக்கு வரும்போது உங்கள் அனைவரையும் சந்திப்பேன்.

இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பெரும் சேவை செய்து வருகின்ற 95 வயதுப் பெரியவர் வே.ஆனை முத்து அவர்களின் சேவைக்கு நான் தலைவணங்கு கிறேன். தொடர்ந்து சமூக சேவை செய்துவரும் உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். தாங்கள் நடத்தும் கூட்டம் வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நன்றி, வணக்கம்.

புதுதில்லி — **ஆச்சாரி தல்லோஜு**
9.2.2020 — உறுப்பினர்
தேசியப் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கான
ஆணையத்தின் உறுப்பினர்

(தெலுங்கு மொழியில் வந்த வாழ்த்துச் செய்தியைத் தமிழாக்கம் செந்தவர் இராம்பாடி)

# வாழ்க்கைத்துணைநல ஒப்பந்த விழா

**கோ.ரா.சுந்தரகாந்தம்-அய்யப்பன் (அய்யனார்)**




வாழ்க்கைத் துணை ஏற்புவிழா சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் கோ.ரா.சுந்தரகாந்தம்-அய்யனார் என்று அழைக்கப்படுகின்ற அய்யப்பன் ஆகியோக்கு சேர்த்து வாழ்க்கை துணை ஏற்பு விழா சோ.குப்பம் என்ற பெயரன் குப்பம் கிராமத்தில் செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம், திருவள்ளுவ ராண்டு 2051 ஆனித் திங்கள் அறிவன் கிழமை 10ஆம் நாள் அன்று கீழ்பென்னாத்தூர் திரவுபதி அம்மன் கோயிலில் (தாரா தேவி கோவில்) தமிழ் பூசாரி அர்ச்சுனன் அவர்கள் தமிழில் பாடல்கள் சொல்லி 10.30 அளவில் திருமணம் நடத்தி வைத்தார்.

இவ்விழாவில் பூசாரி சகாதேவன் அவர்களும் கலந்து கொண்டார். மற்றும் நீதிபதி வரலட்சுமி அரசு உதவி குற்றவியல் வழக்குரைஞர் தமிழரசி பாபு, திராவிட முன்னேற்ற கழக செஞ்சி வட்ட செயலாளர் துரை திருநாவுக்கரசு, சாதி கலைத்தோர் சங்கத் தலைவரும் ஒய்வு பெற்ற அரசு தலைமை ஆசிரியரும் சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் ஆகிய தோழர் கு.அரிகிருட்டிணன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமை கட்சியின் திருவண்ணாமலை மாவட்ட செயலாளர் பொன். சுப்பிரமணியன் (லெனின் குளிர் குடிகை) கீழ்பென்னாத்தூர், துணை செயலாளர் கோ.கோதண்டராமன் (தலைமை ஆசிரியர் ஓய்வு), பெண்ணின் தாய்மாமன் கி.இராமநாதன், ஒன்றுவிட்ட தாய்மாமன் ந.சகாதேவன், பீ.அர்ச்சுனன் மற்றும் உறவினர் புடைசூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். காலைச் சிற்றுண்டி (மணமகள் செலவில்) கி.இராமநாதன் இல்லத்தில் வழங்கப்பட்டது. மதிய விருந்து சோ.குப்பத்தில் மணமகன் இல்லத்தில் வழங்கப்பட்டது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமை கட்சியின் மாநில பொதுச் செயலாளர், சிந்தனையாளன் ஆசிரியர் பெரியார் ஈ.வெ.ரா.இராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவுனர், தலைவர் திருச்சி வே.ஆனைமுத்து அவர்கள் தொலைபேசி மூலம் வாழ்த்தினார். மரு.ச.இராமதாசு, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் தலைவர், குரோனா இல்லை என்றால் நான் முதல் ஆளாக திருமணத்தில் கலந்து கொண்டிருப்பேன் என்று சொல்லி தான் வர இயலாமையைச் சுட்டி அலைபேசியில் மணமக்களுக்கு வாழ்த்துரைத்தார். சென்னை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் பொற்கோ, சென்னை பெருநகர வளர்ச்சி குழும தலைமைத் திட்ட அமைப்பாளர், இராமியா (எ) இரா.இரா.குபேந்திரன் அவர்களும் மணமக்களுக்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். சிந்தனையாயன் வளர்ச்சி நிதியாக மணமக்கள் ரூ.1000 வழங்கினர். செய்தி : **கோவி**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**ஜெ.க.விடுதலைத்தமிழன்-வி.ம.கோமதி**



பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் வடக்கலூர் நினைவில் நிற்கும் நடேசன்-அஞ்சலைஅம்மாள் பேரனும், புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூர் மனித சக்தி நகரில் வாழும் திருச்சி ந. கருணாகரன் - க.ஜெயக்கொடி இவர்களின் மகன் ஜெ.க.விடுதலைத் தமிழன்.எம்.பி.ஏ. நீலகிரி மாவட்டம் நினைவில் வாழும் மகாலிங்கம்-விஜயலட்சுமி இவர்களின் மகள் வி.ம.கோமதி பி.எஸ்.சி.இவர்களின் வாழ்க்கைத் துணை நலஒப்பந்த விழா புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூர் மனித சக்தி நகரில் மணமகன் இல்லத்தில் 07.06.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி அளவில் மக்கள் மருத்துவர் மானமிகு கு.குணகோமதி, M.B.B.S., DGO, இணை இயக்குநர், மருத்துவ நலப்பணி (பணி நிறைவு) பெரம்பலூர். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மானமிகு அக்ரி ந.ஆறுமுகம், பி.எஸ்சி. அக்ரி வங்கி மேலாளர் (பணி நிறைவு) நகரத் தலைவர் திராவிடர் கழகம் பெரம்பலூர். மணமக் களைப் பாராட்டி அறிவுரை வழங்கினார் மேலும் ஈகவஅரசன். இரா.தமிழ்ச்சுடர், குணசேகரன், BSNL, திருமதி சிவபாக்கியம் கணேசன். ஆறுமுகம், BHEL, குரு. சுபாஷ்குமார், முனைவர் க.சிவனேசன், வி.வி.சந்திர சேகர், இரா.கலியபெருமாள். ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வழக்கறிஞர் இரா.ஸ்டாலின். குணவதி ஸ்டாலின் இருவரும் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். மணவிழாவில் உறவினர்களும், இயக்கத் தோழர்களும் கலந்து கொண்டனர்.அனைவருக்கும் அறிஞர் வே.ஆனைமுத்து எழுதிய நூல் வழங்கப்பட்டது.

# கார்த்திக் மறைவு



மா.பெ.பொ.க. ஆர்வலர், சிந்தனையாளன் கட்டுரை யாளரான தோழர் இராமியா (ஆர்.ஆர்.குபேரந்தின்)- சுமதி இணையரின் மகன் கார்த்திக் 13.07.2020 அன்று எதிர் பாராதவகையில் இயற்கை நிகழ்வாக மறைவுற்றார். அவரை இழந்து வாடும் அவர் பெற்றோர் களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு**

# க.திருநாவுக்கரசு மறைவு

கீழமாளிகை தமிழ்மறவன், பொன்னம்பல னார் அவர்களின் அண்ணார் திரு.வை.கந்தசாமி-ஞானம்பாள் அவர்களின் மகனும், முன்னாள் ஊராள் வோர் க.திருநாவுக்கரசு (வயது 76) அவர்கள் 12.8.2020 அன்று தஞ்சை மருத்துவமனையில் இறந்துவிட்டார். 13.08.2020 அன்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது. திரு.கந்தசாமி அவர்கள் 02.10.1882 ஆண்டு பிறந்தார். அவர் உடையார் பாளைய வட்டாரத்தில் முதல் வாத்தியார். சுற்றுவட் டாரத்தில் முதல் ஆசிரியர் ஆவார். எல்லோரும் கந்தசாமி வாத்தியார் என்றுதான் கூறுவார்கள். திரு.திருநாவுக்கரசு அவர்களுக்கு 1 பெண், 2 ஆண் பிள்ளைகள், மனைவியும் உள்ளனர். எங்கள் குடும் பத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செய்தி : **செந்தமிழ்க்கொற்றி**

## தோழர் திருமா அவர்களின் தமக்கை

# பானுமதி மறைவு



விடுதலைச் சிறுத்தைகள் கட்சி யின் தலைவர் தோழர் தொல். திருமாவளவன் அவர்களின் அன்புத் தமக்கை பானுமதி என் கின்ற வான்மதி அவர்கள் 5.8.2020 அன்று இயற்கையா னார் என்ற செய்தி மிகவும் வருந்தத்தக்கது. வான்மதி அவர்கள் தோழர் திருமா அவர்களுக்குத் தாய் போல் இருந்து அன்பு செலுத்தி ஆதரவாக இருந்துள்ளார். அன்புத் தமக்கையை இழந்து துன்புறும் தோழர் திருமா அவர்கள் ஆறுதலடைக.

45-ஆம் பக்கத் தொடர்ச்சி

துள்ளார். அது அரச கட்டளை. இந்தக் கணையாழி அவருக்கு உரியது. அடுத்து அவர் சென்னைக்கு வரும்போது அவருக்கு இக்கணையாழி அணிவித்துச் சிறப்பிக்கப்படும்' என்று தெரிவித்தார்.

ஆச்சாரி தல்லோஜு அவர்கள் 29.2.2020 இரவு 10.30 மணியளவில் சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் விடுதிக்கு வந்தார். அங்கே அவரை கலசம், கோ. விசுவநாதன் இருவரும் சந்தித்த போது, தாம் மறுநாள் காலை வே.ஆனைமுத்து அவர்களைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தார். மறுநாள் கலை கோ. விசுவநாதன் முன்னதாகவே அம்பத்தூர் சென்று ஆனைமுத்து அவர்களைச் சந்தித்து ஆச்சாரி தல்லோஜு அவர்கள் ஆனைமுத்துவைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டினைச் செய்தார்.

திட்டமிட்டபடி 1.3.2020 ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு ஆச்சாரி தல்லோஜு அம்பத்தூரில் உள்ள பெரியார் - நாகம்மை அறக்கட்டளை வளாகத்தில் வே. ஆனைமுத்து அவர்களைச் சந்தித்து சால்வை அணி வித்து மரியாதை செலுத்தினார். விசுவகரும சமுதாய மேம்பாட்டு ஆர்வலர்கள் தம்மிடம் கொடுத்த ஜெயில் சிங் முகத்தோற்றம் பதித்த 8 கிராம் எடையுள்ள கணை யாழியை வே.ஆனைமுத்து அவர்கள் ஆச்சாரி தல்லோஜு அவர்களின் விரலில் அணிவித்துப் பாராட்டு தெரிவித்தார். ‘‘மதம், சாதி, மொழி முதலான எந்தப் பாகுபாடும் பார்க்காமல் பிற்படுத்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்குத் தொண்டு செய்க! பிற்படுத்தப்பட்ட மக் களுக்கு விகிதாசாரப் பங்கு கிடைக்க பாடுபடுக! என்று தல்லோஜு அவர்களை வே.ஆனைமுத்து கேட்டுக் கொண்டார்.

செய்தி : **கலசம்**

# தோழர் என்.ரவிக்குமார் மறைவு



திருக்கோவிலூர் கவிஞர் தி.ரா.விஜியன் மகளும் தோழர் தி.ரா.வி.நல்லதம்பியின் இளைய சகோதரி தி.ரா.வி. செங்கொடியின் கணவர் தோழர் என்.ரவிக்குமார் உடல் நலகுறைவால் 04.08.20 செவ்வாய்க்கிழமை சென்னை குரோம்பேட்டையில் இறந்தார். இவர்களுக்கு ஆர்.எஸ்.மகேஷ் குமார் ஆர்.எஸ்.சதிஷ் குமார் இரண்டு மகன்கள் உள்ளனர். இறுதி நிகழ்வுக்குத் தோழர் நல்லதம்பி, கீதா நல்லதம்பி மற்றும் உறவினர்கள், நண்பர்கள் பெரும் திரளாக, பங்கேற்று வீர வணக்கம் செலுத்தினர். தாம்பரம் சுப்ரமணி, பூவை மணி உட்பட தோழர்கள் மா.பெ.பொ.க. சார்பில் அஞ்சலி செலுத்தினர்.

# எங்கள் காற்று, எங்கள் நீர், எங்கள் நிலம்! - தமிழாக்கம்

## (சியாட்டில் எழுதிய திறந்த மடல்)

- சா. குப்பன்

எங்களுடைய நிலத்தை வாங்க விரும்புவதாகக் குடியரசுத் தலைவர் வாஷிங்டனிலிருந்து செய்தி அனுப்புகிறார். ஆனால், வானத்தை எப்படி வாங்க முடியும்? எப்படி விற்க முடியும்? நிலத்தை எப்படி வாங்கவும் விற்கவும் முடியும்? விற்பது - வாங்குவது என்ற எண்ணமே எங்களுக்கு விந்தையாக உள்ளது! காற்றின் புதிய வாசம், தெறித்துவிழும் நீர்த்துளி இவை உங்களுடையதா? அல்லவே! உங்களுக்குச் சொந்தமில்லாத ஒன்றை நீங்கள் எப்படி விற்க முடியும்? இப்பூமியின் ஒவ்வொரு பகுதியும் எங்கள் மக்களுக்குப் புனிதமானது! ஒளிரும் ஒவ்வொரு பைன்மர ஊசி இலைகளும், ரீங்காரமிடும் ஒவ்வொரு வண்டின் இசையும் எங்கள் மக்களின் நினைவுகளிலும் அனுபவங்களிலும் புனிதமானவை!

இரத்த நாளங்களில் பாயும் நம்முடைய இரத்தம் போன்றதுதான் மரங்களினூடே சென்று மரங்களுக்கு உணவளிக்கும் இளஞ்செடிச் சாறுகள் என்பதனை நாங்கள் அறிவோம்! நாங்கள் இந்தப் பூமியின் ஓர் அங்கம்! எங்களில் ஒரு பகுதி பூமி! மணம் வீசும் மலர்கள் எங்களின் சகோதரிகள்! கரடி, மான், பெருமைமிகு கழுகு ஆகிய இவையனைத்தும் எங்கள் சகோதரர்கள்! பாறைகளால் ஆன மலையுச்சிகள், பச்சைப் புல்வெளியின் இலைச்சாறுகள், போனி (என்னும் சிறுகுதிரையின்) யின் வெப்பமான உடல், இவர்களுடன் மனிதர்கள் என அனைத்தும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையே!

ஆறுகளிலும் ஓடைகளிலும் ஒளிவீசிப் பாயும் தண்ணீர் வெறும் தண்ணீரல்ல! எங்கள் முன்னோர்களின் இரத்தம். எங்கள் நிலத்தை நாங்கள் விற்றால் அந்த நிலம் எங்களுக்குப் புனிதமானது என்பதனை நீங்கள் உணரவேண்டும். ஏரிகளில் இருந்து பேரிரைச்சலோடு வெளிப்படும் தெளிந்த நீர் எங்கள் மக்களின் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு செயல்களையும் அதன் நினைவுகளையும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. என்னுடைய பாட்டனாரின் குரலை இந்தத் தண்ணீர் முணுமுணுத்துக் கொண்டே இருக்கின்றது. ஆறுகள் எங்களின் சகோதரர்கள்! எங்களின் தாகத்தை அவை தணிக்கின்றன. எங்களின் சிறு பரிசில்களை அவை சுமந்து செல்கின்றன. எங்கள் குழந்தைகளுக்கு அவை உணவளிக்கின்றன. அதனால், ஒரு சகோதரனிடம் செலுத்தும் அதே அன்பை இந்த ஆற்றினிடமும் நீங்கள் செலுத்த வேண்டும்.

நாங்கள் இந்த நிலத்தை உங்களுக்கு விற்பது என்றால் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. இந்தக் காற்று எங்களின் அரிய செல்வம். இவ்வுலகில் உள்ள எல்லா உயிரினங்களைத் தாங்கி நிற்கும் காற்று அவ்வுயிரினங்களின் உணர்வுகளில் கலந்திருக்கிறது. என்னுடைய பாட்டன் குழந்தையாய்ப் பிறந்த போது அவருக்கு முதல் மூச்சை அளித்து உயிர்ப்பித்த அதே காற்றுதான் அவருடைய இறுதி மூச்சையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இக்காற்றுதான் எங்கள் குழந்தைகளின் உயிர்மூச்சைத் தாங்கி நிற்கிறது. எனவே, உங்களுக்கு எங்கள் நிலங்களை நாங்கள் விற்பது என்றால் அந்த நிலங்களை நீங்கள் உங்களிடமிருந்து பிரித்துத் தனியாகவும் புனிதமானதாகவும் வைத்திருக்க வேண்டும். பசுமையான புல்வெளிகளில் பூத்த பூக்களின் வாசத்தால் இனிமையான இக்காற்றினை மனிதர்கள் சென்று உரணக்கூடியதாக அந்த இடம் இருக்க வேண்டும்.

இந்தப் பூமி நம்முடைய தாய் என்று நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்ததுபோல், உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் கற்றுத் தருவீர்களா? பூமியின் மீது ஏற்படுத்தும் அழிவு அப்பூமித் தாயின் மைந்தர்களின் மீது ஏற்படுத்தும் அழிவு எனக் கற்றுத் தருவீர்களா? நாங்கள் இதனை அறிவோம். இப்பூமி மனிதர்களுக்குச் சொந்தமானதன்று. மாறாக மனிதர்கள்தாம் பூமிக்குச் சொந்தமானவர்கள். இரத்தம் எவ்வாறு மனிதர்களை ஒன்றிணைக்கிறதோ, அதே போன்று உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. வாழ்க்கை வலையினை மனிதர்கள் நெய்வதில்லை. அவர்கள் அந்த வலையில் உள்ள இழையைப் போன்றவர்கள். அந்த வலைகளுக்கு இழையாக உள்ள மனிதன் ஏதாவது செய்தால், அது அவன் தனக்குத்தானே ஏதோ செய்து கொள்வதைப் போன்றது.

ஒன்றுமட்டும் நாங்கள் அறிவோம். எங்களின் கடவுள்தான் உங்களின் கடவுளும்! இப்பூமி அவரின் மிகச்சிறந்த பொக்கிஷம். இப்பூமிக்கு ஏற்படுத்தும் கேடு அப்பூமியைத் தோற்றுவித்தவரின்மீது கொட்டும் பெறுப்பாகும். உங்களின் முடிவான இலக்கு என்ன என்பது எங்களுக்குப் புதிராகவே உள்ளது. உலகில் உள்ள எல்லா எருமை மாடுகளும் வெட்டப்பட்டுவிட்டால் அதன்பின் என்ன நடக்கும்? எல்லாக் காட்டுக் குதிரைகளும் அடக்கப்பட்டு வீட்டு விலங்குகளானால் என்ன நேரிடும்? காட்டின் இரகசிய இருண்ட பகுதிகள் அனைத்தும் மனித வாடையால் நிரப்பப்பட்டு விட்டால் அதன் விளைவுகள் என்னவாகும்? முதிர்ந்த பழமையான மலைக்குன்றுகள் எல்லாம் பேசும் மின்கம்பி

களால் இணைக்கப்பட்டுவிட்டால் என்ன நடக்கும்? மரம், செடி, புதர்கள் என்னவாகும்? அவை இல்லாமல் போய்விடும். கழுகுகள் எல்லாம் காணாமல் போய் விடும். துள்ளிக்குதிக்கும் சிறு குதிரையை எங்கு தேடி, எப்படி விடை கொடுப்பீர்கள்? வாழ்தல் என்பது அத்துடன் முற்றுப்பெற்றுவிடும். அதன்பின் வாழ்வதற்கான போராட்டத்தைத் துவங்க வேண்டியிருக்கும்.

கடைசிச் செவ்விந்தியன் காலவெள்ளத்தில் கரைந்து போனபின், அவனுடைய நினைவுகள் சமவெளிகளில் பரவும் மேகங்களைப் போல நிழல்களாக மறைந்து போனபின், இந்தக் கடற்கரைகளும் காடுகளும் இதே நிலையிலேயே இங்கேயே இருக்குமா? இல்லாமல் போய்விட்ட எம்மக்களின் உணர்வுகள் இங்கு உணரப் படுமா?

புதிதாகப் பிறந்த குழந்தை எப்படி தாயின் இதயத் துடிப்பை நேசிக்குமோ அப்படி நாங்கள் இந்த மண்ணை நேசிக்கிறோம். எங்கள் நிலங்களை உங்களுக்கு விற்றால் நாங்கள் எப்படி இந்த நிலங்களை நேசித்தோமோ அதேபோல நீங்களும் நேசியுங்கள்.

''நிலம் எங்கள் தாய்'' என்று தமிழகமெங்கும் வீறுகொண்டெழுந்து, வேளாண் பெருமக்கள் நிலத்தைக் காப்பதற்காகவும் வேளாண்மையைப் பாதுகாப்பதற் காகவும் வீரம் செறிந்த போராட்டங்களை நடத்திவரும் இன்றைய சூழல் மிக முக்கியமான வரலாற்று நிகழ் வாக மாறிக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் ஆன்மா ''கிராமங்களில்தான் வாழ்கிறது'' என்று கூறிக்கொண்டே இன்றைய ஆட்சியாளர்கள் கிராமங்களைச் சீரழித்துக் கொண்டிருக்கிறார்கள். வளர்ச்சியின் பெயரால் ஏழை களின் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகின்றன. விளை நிலங்கள், அவற்றிற்கான நீர்நிலைகள் வற்றி உலர வைக்கப்பட்டு எண்ணெய் வயல்களாக மாற்றுவதற் கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் இந்நாட்டுக் கார்ப்பரேட்டுகள் நிலங்களை விழுங்கக் காத்திருக்கின்றனர்.

நெடுவாசல், கதிராமங்கலம் மக்களில் துவங்கி எட்டுவழிச் சாலைக்கெதிரான போராட்டங்களை முன்னின்று நடத்தும் உழைக்கும் வேளாண் பெருங்குடி மக்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டிய கடப்பாடு அனைத்துப் பிரிவினருக்கும் உள்ளது.

இன்றைய சூழலில் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய அமெரிக்க அரசாங்கத்தை எதிர்த்துச் செவ்விந்தியப் பழங்குடியினத் தலைவர்களில் ஒரு வரான சியாட்டில் எழுதிய 'திறந்த மடல்' எவ்வளவு பொருத்தமாக விளங்குகிறது என்பது வியப்பாக உள்ளது.


இயற்கை வளங்களை, நீர் ஆதாரங்களை, வேளாண் தொழிலை, பூர்வக்குடியினரின் உரிமைகளை நசுக்கும் முயற்சிகளை இயல்பாக எதிர்கொண்டு உலக சமத்துவம், சகோதரத்துவம் முன்னிறுத்தும் சியாட்டிலின் திறந்த வெளி மடல், தங்கள் நிலத்தை, நீரை, வாழ்வா தாரங்களை இழந்துவிடக்கூடாது என்று போராடுவோர் களின் உந்துசக்தியாக இன்றும் திகழ்கிறது. 1852-இல் எழுதியதாகக் கூறப்படும் இக்கடிதத்தில் எழுப்பிய பிரச் சினைகள் இன்றளவும் தீர்க்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, முன்னிலும் வேகமாக அவ்வளங்கள் சூறை யாடப்படுகின்றன என்பது வெளிப்படையான உண்மை.

**சியாட்டிலின் அக்கடிதத்தை ''எங்கள் காற்று, எங்கள் நீர், எங்கள் நிலம்'' என்ற தலைப்பில் மொழிபெயர்த்து அனைவரின் பார்வைக்கும் வைத்துள்ளேன்.**

**கொரோனாப் பேரிடரை இத்துடன் பொருத்திப் பார்க்க வேண்டும்.**

## ஆய்வறிஞர் கோவைஞானி
### மறைவு

தீவிரத் தமிழிலக்கியச் சிந்தனையாளர், திறனாய் வாளர், மார்க்சிய அறிஞர், நுட்பமான சிந்தனையாளர், மெய்யியலாளர், இதழாளர், நூலாசிரியர் என இடைவிடாது இயங்கிவந்த கோவை ஞானி (85) அவர்கள் 22.7.2020 அன்று இயற்கையெய்தி னார்.



ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேர றிவாளன் திரு.''என அவரது அறிவுச் செல்வம் பல படைப்பாளர்களை உருவாக்கியது. 'பரிமாணம்' நிகழ்' 'தமிழ்நேயம்' என அவர் நடத்திய இதழ்கள் குறிப்பிடத்தக்கவை.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி 2006 சனவரியில் சிதம்பரத்தில் நடத்திய 'சிந்தனையாளன் பொங்கல் மலர்' வெளியீட்டு நிகழ்வில் "தன்னுரிமைத் தமிழ்த்தேசம்" என்ற வே.ஆனைமுத்து, கோவை ஞானி,பெ.மணியரசன், தியாகு, த.செயராமன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது. அதனை வெளியிட்டு உரை நிகழ்த்தியவர் கோவை ஞானி. அந்நூல் வெளியிடுவதில் பெரிதும் அக்கறை காட்டியவர் அவர். அந்நூல் தமிழ்நாட்டின் தன்னுரிமை பற்றிய சிறந்த ஆவணம் ஆகும்.

கோவை ஞானி அவர்கள் இறப்பு, தமிழ்ச் சிந்தனை மேம்பாட்டுக்குப் பேரிழப்பு. அவர் மறைவுக்கு சிந்தனை யாளன் இதழ் வீரவணக்கம் செலுத்துகிறது.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி.**

## மக்கள் விரோதிகள்

உலகம் முழுவதும் 'கொரோனா' என்கின்ற உயிர்க்கொல்லி கிருமிகள் அதிக அளவில் பரவியுள்ளன. இந்தத் தருணத்தை பயன்படுத்திப் பல வழிகளில் பொதுமக்களை சுரண்டும் கொள்ளைக் கும்பல் அதிக அளவில் தோன்றியுள்ளன. அவற்றில் சில.

மருத்துவத் துறை முதன்மையாக மக்களைக் காப்பது போல் நடந்து கொள்கின்றன. ஏழு மாதங்கள் கடந்தும் கிருமியை வெல்லும் மருந்தைக் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் மருத்துவமனையில் சேர்த்து அதிக அளவில் மருத்துவச் செலவு என்ற பெயரில் கொள்ளையடிக்கின்றனர். ஆளுக்கு ஒரு மருத்துவத்தைச் சொல்லி மக்களைப் பயமுறுத்துகின்றனர். ஒருவர் கைதட்டச் சொல்கின்றார்; குறிப்பிட்ட நேரம் வரை இரவில் விளக்கை அணைக்கச் சொல்கின்றார். ரசம் குடித்தால் கொரோனா வராது என்றவுடன் ரசத்தை வியாபாரம் செய்கின்றனர். பப்பாளி இலைச் சாறு குடித்தால் நோய் தீரும் என்றவுடன் பப்பாளி இலையை விற்கத் தொடங்குகின்றனர். ஒரு ரூபாய்க்கு விற்ற முக கவசம் ரூ.10 முதல் ரூ.100 வரை விற்கின்றனர்.

விற்காமல் கிடந்த பொருட்களை வியாபாரிகள் தந்திர மாக மருத்துவ குணம் உடையது என்று சொல்லி, வியாபாரம் செய்கின்றனர். வியாபாரிகள் அனைவரும் மக்கள் நலன் காப்போர் போல் விளம்பரம் செய்து, அதிக விலைக்கும் எடை குறைத்தும் கலப்படம் செய்தும் வியாபாரம் செய்வதை எந்த ஒரு அரசு அதிகாரியும் கண்டுகொள்ளவில்லை. கடந்த பத்தாண்டு களாக அதிகாரிகளும் வியாபாரிகளுடன் கைகோர்த்து கொண்டனர்.

சத்தமின்றி, நம்மை ஆளும் மத்திய, மாநில அரசுகள் மக்கள் பீதியில் உள்ள இந்தத் தருணத்தில் தேவையான திட்டங்களைத் தீட்டி, வரிகள், கல்விக் கட்டணங்கள், மின் பயன்பாட்டுக் கட்டணங்கள், மருத்துவக் கட்டணங்கள் போன்ற வழிகளில் பொது மக்களைச் சுரண்டுகின்றனர். தொலைக் காட்சி, சோசியல் மீடியா, செய்தித்தாள்கள், இதழ்கள் போன்ற ஊடகங்களும் தகுதியிழந்து உரிமையை விபச்சாரமாக்கி விட்டனர். கொரோனாவைக் கட்டுப்படுத்த, மக்களைப் பாது காக்கத் தேவையான பொருளாதாரம் மத்திய அரசு மனசு வைத்தால் மல்லையா போன்ற கொள்ளையரின் சொத்துக் களும், மக்கள் பெரிய கோவில்களில் செலுத்திய காணிக்கை களும் பயன்படுத்தினால் இன்னும் இருபது ஆண்டுகள் எந்த வரியும் கட்டணமும் மக்களிடம் வாங்காமல் ஆட்சி செய்யலாம்.

கொரோனாவைக் கண்டு நடுங்கும் கோயில்களாலும், கொள்ளையர்களாலும் மக்களுக்கு என்ன பயன்? ஒன்று மில்லை. எதிர்காலத்தைச் சோசியமாகச் சொல்லிப் பிழைக் கும் கும்பலை இன்னமும் பரப்பும் ஊடகங்களைக் கைவிட வேண்டும். பகுத்தறிவுச் சிந்தனையையும், நீர்நிலைகள், ஆறுகள், காடுகள், மலைகள் போன்ற இயற்கை வளங்களைப் பாது காக்கும் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். மனிதனின் சுயமரியாதையையும் சம உரிமையையும் நாட்டுப்பற்றை யும் மொழிப் பற்றையும் வளர்க்காத அரசும், அரசியல் வாதிகளும் மக்கள் விரோதிகளே!

- உழவர் மகன் **ப. வடிவேலு**

### சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - ஆகஸ்ட்டு-2020

| | | |
|---|---|---|
| **இரா.பச்சமலை** | சென்னை | 1250/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **பாவேந்தன்** | அரக்கோணம் | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஆகஸ்ட்டு-2020

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street), Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**